ஓசியா - மீகா

ஆறு தீர்க்கதரிசன நூல்களின் விளக்கம்



டி.ஏ. துரோவர்

ஓசியா - மீகா

ஆறு முன்னறிவிப்பு நூல்களின்

விளக்கவுரை

டி. ஏ. துரோவர்

சுவிசேஷ ஊழிய நூல் நிலையம்

95-A, வேப்பேரி நெடுஞ்சாலை, சென்னை - 600 007

Tel : 25323231, 26420173, 26420743 Fax : 91 (44) 26612295

E-mail : <elsha@elsindia.org> Website : www.elsindia.org

Pub. No. 279 - TAMIL

First Edition : By Baptist Mission
Reprint by E.L.S. : October 1989
Reprint : June 2012

HOSEA - MICAH

(Commentary on Six Prophetical Books)

D.A. THROWER

Published for Strict Baptist Mission,
Chennai - 600 010

J.R.PRINTECH, Chennai - 102, Ph:26631643, 26631996. Cell : 9841077931, 9710441462

முன்னுரை

தீர்க்கர் அறுவர் திருப்பெருந் தூதுகளின்
தீர்க்கமாம் நல்லுரை சேர்ந்ததிந்நூல் —பார்க்குங்கால்
ஆண்டவர் ஆசீர் அளிக்கநாம் நாடோறும்
வேண்டுவோம் நற்பயன்மேன் மேல்.

பழைய ஏற்பாட்டாகமத்தின் இறுதியான பன்னிரண்டு ஆகமங்களுக்குச் சிறிய தீர்க்கதரிசன நூல்கள் என்று பெயர். திருமறையில் மீகா முதல் மல்கியாவரைக்குமுள்ள பகுதியை விளக்கும் உரைநூல் தமிழ் மொழியில் இல்லாமையால் நான் இவ்வீராறு நூல்களின் விளக்கவுரை இயற்ற முன்வந்தேன். இந்த வெளியீட்டில் ஓசியா முதல் மீகா வரைக்குமுள்ள ஆறு முன்னறிவிப்பான நூல்களின் உரையும், இரண்டாம் நூலில் நாகூம் முதல் மல்கியா வரைக்குமுள்ள மற்றவை ஆறு ஆகமங்களின் உரையும் அடங்கியுள்ளன.

இந்த விளக்கவுரையில் குறிப்பிட்டுள்ள வேதாகம வாக்கியங்களைப் புதிய திருப்புதலின்படி கூறியிருக்கிறேன். சில இடங்களில் மட்டும் பழைய திருப்புதலின்படி எழுதியிருக்கிறேன். அத்தகைய இடங்களிலெல்லாம் ப. தி. என்று குறிப்பிட்டுள்ளேன்.

இந்நூலைப் பயன்படுத்துகிறவர்களுக்கு இதன் இறுதியில் காணும் காலவரிசைமுறை, நாட்டுப் படங்கள், பொருள் அட்டவணை, திருமறை குறிப்புகளாகியவை மிகவும் பயன்படும் என்று நம்புகிறேன். பொருள் அட்டவணையில் சுமார் 280 பொருளகளும் பெயர்களும் அடங்கியுள்ளன. திருமறைக் குறிப்புகள் நூற்றுக் கணக்கானவையாகும்.

டி. ஏ. துரோவர்

தலைப்புப் பட்டியல்

			பக்கம்
1. பொது ஆராய்ச்சி		....	1
2. பாபிலோன் சிறையிருப்பு		....	7
3. ஓசியா	முன்னுரை	....	12
	விளக்கவுரை	....	17
4. யோவேல்	முன்னுரை	....	41
	விளக்கவுரை	....	45
5. ஆமோஸ்	முன்னுரை	....	57
	விளக்கவுரை	....	62
6. ஒபதியா	முன்னுரை	....	94
	விளக்கவுரை	....	96
7. யோனா	முன்னுரை	....	103
	விளக்கவுரை	....	106
8. மீகா	முன்னுரை	....	122
	விளக்கவுரை	....	125
காலவரிசை முறை		....	152
நாட்டுப் படங்கள்		....	153
பொருள் அட்டவணை		....	155
திருமறை குறிப்புகள்		....	165

1

பொது ஆராய்ச்சி

''சிறிய தீர்க்கதரிசன ஆகமங்கள்'' என்னும் பெயர் பழைய ஏற்பாட்டின் கடைசி 12 புத்தகங்களைக் குறிக்கிறது. அவையாவன: ஓசியா முதல் மல்கியா வரைக்குமுள்ள நூல்களே. ''சிறிய'' தீர்க்கதரிசன ஆகமங்கள் என்கிற பொதுப்பெயர் எதனால் வழங்கப்பட்டதென்றால், இவைகள் சுருக்கமான நூல்களாயிருப்பதினிமித்தம் மட்டுமே. ஏனெனில், இவ்வாகமங்கள் ஏசாயா, எரேமியா, எசேக்கியேல், தானியேல் ஆகிய நான்கு பெரிய (நீண்ட) தீர்க்கதரிசன நூல்களைப்போலவே அதிகாரமுடையவை என்பதும் அவைகளைவிட இவை எவ்விதத்திலும் தாழ்ந்தவையல்ல என்பதும் நிச்சயம்.

தீர்க்கதரிசன நூல்கள் எழுதப்பெற்ற காரணங்களும் நோக்கங்களும் பல :

1. பலஸ்தீனா தேசம் இஸ்ரவேல் யூதேயா என்கிற இரு நாடுகளாகப் பிரிந்துபோனதால் இப்புத்தகங்களின் வாயிலாக இஸ்ரவேல் மக்கள் யாவருக்கும் கடவுளின் தூதைத் தெரிவிக்க வேண்டியதாயிற்று.

2. அதற்கு முந்தின காலங்களில் தீர்க்கதரிசி ஒருவர் தேசமெங்குமுள்ள மக்களுக்குப் போதகம்பண்ணி அவர்களை மதசம்பந்தமாய் நடத்தவருவார். நாம் கவனிக்கப் போகிற தீர்க்கர்கள் தங்கள் ஊழியத்தை நிறைவேற்றிய காலத்திலோ யூதரில் ஏராளமானவர்கள் மெய்க் கடவுள் வணக்கத்தை விட்டுவிட்டுப் பல அந்நிய தேவர்களைக் கும்பிட்டு வந்தனர். ஆகவே, அவர்கள் தங்கள் பாவச் செய்கைகளை விட்டு மனந்திரும்ப வேண்டுமாய்ப் பல

எச்சரிக்கையான போதனைகளை எழுதித் தேசமெங்கும் அனுப்பவேண்டிய அவசியமுண்டாயிற்று (1 இரா. 12: 28-30).

3. சாமுவேல், நாத்தான் முதலிய தீர்க்கர்களின் காலங்களில் மக்கள் வேளா வேளைகளில் ஒரே இடத்தில் கூட்டங்கூடிக் கடவுளைத் தொழுதுகொண்டு வேதாக மத்தை வாசிக்கக் கேட்பார்கள். பிந்திய காலத்திலோ (விசேஷமாகப் பாபிலோன் சிறையிருப்பின் காலத்திற்குப் பின்) ஜெப ஆலயங்கள் அநேக இடங்களில் ஸ்தாபன மாயின. அவ்வாலயங்களில் ஓய்வுநாள்தோறும் வேத பாரகர் வேத பாகங்களை வாசிப்பார்கள். இதன் வாயிலாக மக்கள் எருசலேம் ஆலயத்தில் மட்டுமன்றி, நாடெங்குமுள்ள ஜெப ஆலயங்களிலும் கடவுளைத் தொழுதுகொண்டனர் (எஸ்றா. 8:15 ; நெகே. 8:2,3; 9:1—3; அப். 15:21). அப்படியிருக்க, மக்கள் தீர்க்க தரிசிகளின் போதகத்தைக் கேட்டறியத்தக்கதாக அப் போதகம் நூல்களில் எழுதப்படவும் அந்நூல்களின் பிரதி கள் ஜெப ஆலயங்களுக்கு அனுப்பப்படவும் வேண்டிய தாயிற்று.

4. பின்வருபவர்கள் படித்தறியும் பொருட்டுத் தீர்க் கர்கள் தங்கள்மூலம் வெளிப்பட்ட கடவுளின் தூதை எழுதிவைப்பது அவசியமாயிற்று (ஆப. 2:2,3).

5. யூதரை அப்போதைக்கப்போது இம்சை செய் துள்ள பல ஜாதியினரைக் கடவுள் தண்டிக்கப் போவதால் அந்தந்த அந்நிய மக்களை இந்நூல்களின்மூலம் எச்சரிக்க வேண்டியிருந்தது (ஆமோஸ் 1:3,6,9, 11, 13).

இந்த 12 ஆகமங்களில் முதல் 9 நூல்கள், (செப்பனி யாவரைக்கும்) யூதர் பாபிலோனுக்குச் சிறைகளாகக் கொண்டு போகப்படுமுன்னே எழுதப்பட்டன; ஆகாய், சகரியா, மல்கியாவாகிய மூன்று நூல்கள் யூதரில் அநேகர் தங்கள் சுய நாட்டிற்குத் திரும்பின பிறகு எழுதப்பட்டன.

இவ்வாகமங்களின் பொருளைக் குறித்து நாம் கவனிக்க வேண்டிய மிகவும் முக்கியமான விஷயம் ஒன்றுண்டு. அதாவது: இந்தத் தீர்க்கர்கள் எழுதிய சில விவரங்கள் அவர்கள் வாழ்ந்த காலத்தையாவது சீக்கிரமாக வரும் காலத்தையாவதுபற்றியவை. அவர்கள் எழுதிய வேறு அநேக உண்மைகளோ வெகு காலம் சென்ற பின் சம்பவிக்கப் போகிறவைகளைப்பற்றிய தீர்க்கதரிசனங்களாகும். உதா. அக்காலத்தோரின் சீர்கேடான நிலைமையும் விரைவில் அவக்கள்மேல் விழும் கடவுளின் கோபாக்கினையும் **அக்காலத்துக்குரியவைகளாகும்.** ஆனால், வெகு காலத்துக்குப்பின் யூதர் மத்தியில் காணப்படும் சீர்திருத்தங்களும் அதை தொட்டு ஆண்டவர் அவர்களுக்கருளும் ஆசீர்வாதமான விடுதலையும், இன்னும் பல நூற்றாண்டு காலம் சென்ற பின்னர் சம்பவிக்கும் மேசியாவின் வருகையும் **பிற்காலத்துக்குரியவையாகும்.**

இவ்வாகமங்கள் மிகவும் முக்கியமும், பயன்படக் கூடியதுமான போதனையுடையவை. இவற்றை இயற்றிய தீர்க்கர்கள் எப்படியாவது மக்களை நன்னெறியில் திருப்பி அவர்கள் கடவுள் சம்பந்தமாகப் பக்தியும் மனிதர் சம்மந்தமாக நீதியுள்ளவர்களாகக் காணப்படத்தக்கதாகப் புத்தி போதனை புகட்டவேண்டுமாய்ப் பிரயத்தனஞ் செய்தனர் (மீகா 6:8).

இவ்வாகமங்களில் முன்னறிவிக்கப்பட்ட மகா பெரிதான சம்பவங்களில் சிலவற்றைக் கீழே குறிப்பிடுவோம்:

1. பாபிலோன் சிறையிருப்பு.

2. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகை; அவரது இரண்டாம் வருகை.

3. பரிசுத்த ஆவியானவர் வல்லமையாக இறங்குதல்.

4. யூதர் உலகமெங்கும் சிதறுண்டு போதல்.

5. யூதர் திரும்பப் பலஸ்தீனா நாட்டிற்கு வந்து இஸ்ரவேல் இராஜ்யத்தை மறுபடியும் ஸ்தாபித்தல்.

யோவேல் 2:20-32 ; ஆப. 2:14 ; செப். 3:20 ; சக. 9:9; மல். 4:2 முதலியன காண்க.

ஆகாய், சகரியா என்பவர்களின் காலத்திற்குப்பின் எஸ்றா, நெகேமியா என்பவர்களின் பழைய ஏற்பாட்டாகமத்தின் பல பங்குகளை ஒன்று கூட்டி ஒரே வேத புத்தகமாகத் திரட்டினார்கள் என்பது பல வேத சாஸ்திரிகளின் அபிப்பிராயமாகும். மீண்டும், எஸ்றா என்பவரின் கால முதற் கொண்டு எபிரெய மொழியில் எழுதியுள்ள சகல பழைய ஏற்பாட்டுப் பிரதிகளிலும். இந்த 12 சிறிய தீர்க்கதரிசன நூல்களும் ஒரே புத்தகமாகப் பாவிக்கப்பட்டு ஒரே சுருளில் வரையப்பட்டன என்பதாக யூத சரித்திரக்காரராகிய யோசீப்பஸ் என்பவர் கி. பி. முதலாம் நூற்றாண்டில் எழுதலானார். அதுவுமன்றி, வேதபாரகர் இந்தத் தீர்க்கதரிசன சுருளை ஜெப ஆலங்களில் வாசிப்பதற்கு ஏற்றதாக அதை 21 பாகங்களாகப் பிரித்து வைத்தார்களாம். எஸ்றாவின் நாள்களில் ஸ்தாபனமான ''மகா ஆலோசனைச் சங்கம்'' என்னும் பெயருள்ள சபையின் 120 அங்கத்தினர் இதை செய்தார்களாம். மேலும், அந்த மகா ஆலோசனைச் சங்கத்தில் ஆகாய், சகரியா, மல்கியா என்பவர்கள் அங்கத்தினராயிருந்தனர் என்பது யூதரின் பாரம்பரியமாகும்,

பாபிலோன் சிறையிருப்பு இந்த 12 தீர்க்கர்கள் வாழ்ந்த காலத்தின் மத்தியில் சம்பவித்தபடியினால் அந்த மகா பெரிய நிகழ்ச்சியின் முக்கியமான விவரங்களை அறியாமல் இந்தத் தீர்க்கதரிசிகள் அது சம்பந்தமாக எழுதியவைகளை அறிவது அசாத்தியமாகும். எனவே, பாபிலோன் சிறையிருப்பு என்கிற தலைப்புள்ள ஆராய்ச்சியை

நன்கு கவனிக்கவும். கீழ்க்காணும் குறிப்புகளும் கவனிக்கத் தக்ந்தவையாகும்;

யூத குலத்தார் தங்கள் பொல்லாத நடத்தையை விட்டு மனந்திரும்பாவிடில் தாம் அவர்களை ஓர் அன்னிய நாட்டிற்குச் சிறைகளாக அனுப்புவதற்காகக் கடவுள் அவர்களைத் தமது தாசரின்மூலம் வெகுகாலம் எச்சரித்து கொண்டேயிருந்தார். கடைசியாக அவர்கள் மனந்திரும் பாததினால், அவர் அவர்களை அவர்களது சத்துருக்களின் கையில் ஒப்புக் கொடுத்தார். சத்துருக்கள் யூதேயா நாட்டாரைப் பாபிலோன் நாட்டிற்குக் கொண்டு போனார்கள். ஆகவே, யூத இராஜ்யத்தின் குடிகள் சுமார் கி.மு. 600 முதல் கி.மு. 530 வரைக்கும் 70 ஆண்டுகாலம் பாபிலோன் நாட்டில் சிறைகளாயிருந்தனர். வடநாட்டா ரான இஸ்ரவேல் இராஜ்யத்தின் குடிகளோ 200 ஆண்டு களுக்கு மேலாகச் சிறைப்பட்டிருந்தனர். அக்காலத்தில் அவர்கள் நடுவில் எழும்பின தீர்க்கர்கள் எசேக்கியேல், தானியேல் ஆகிய இருவர். பாபிலோனியர் எருசலேம் நகரை அழித்துப்போடு முன்னரே எசேக்கியல் சிறையாக கொண்டு போகப்பட்டார். தானியேலோ யூதேயாவின் சிறையிருப்புக் காலத்தின் ஆரம்பத்தில் கொண்டுப்போகப் பட்டார். அந்நாள்களில் வாழ்ந்த யூதரில் பலர், தங்கள் நாட்டின் தலைநகர் யெகோவாவின் உறைவிடமாக இனி இராமல் அழிக்கப்படும் என்று நம்பவேயில்லை. அதன் காரணமாக எசேக்கியேல், ஆண்டவர் தேவாலயத்தையும் எருசலேமையும் விட்டு விடுவதாகத் தெளிவும் விவரமு மாக முன்னறிவித்தார் (எசே. அதி. 9-11). அவர் இயற்றிய தீர்க்கதரிசன ஆகமத்தைக் கவனமாய்ப் படித் துப்பார்க்கில், யூதமக்கள் அனுபவித்த சிறையிருப்பானது அவர்களில் பெரும்பாலரைக் கடவுளிடம் திருப்பவாவது அவர்களது வாழ்க்கையைச் சீர்திருத்தவாவது இயலாமற் போயிற்று என்று அறிந்துகொள்ளலாம் (எசே. அதி. 8-14).

எனினும், அந்தக் காலத்தில் அவர்கள் விக்கிரக வணக்கத்தை விட்டுவிட்டனர். மேலும், அது முதற்கொண்டு இதுவரைக்கும் யூத குலத்தார் அத்தகைய பாவஞ் செய்ததில்லை. ஆயினும், யெகோவா தங்களோடு உடன்படிக்கைபண்ணின கடவுள்; தாங்கள் அவரது கற்பனைகளைப் பயபக்தியாகக் கைக்கொள்ளக் கடமைப்பட்டவர்களென்று அவர்களில் பெரும்பான்மையோர் உணரவேயில்லை. தேவபக்தியுள்ள சிலரோ 137-ஆம் சங்கீதம் முதலிய சங்கீதங்களைப் பாடினார்கள் போலும். அப்படிபட்ட பக்தியுள்ளோரே 70 ஆண்டு காலம் சென்றபின், யூதேயா நாட்டிற்குத் திரும்பித் தேவாலயத்தையும், பரிசுத்த நகரையும் எடுப்பிக்கத் தலைப்பட்டனர். பாபிலோன் சிறைவாசத்தின்மூலம் யூதரில் பலர் கற்றறிந்திருக்க வேண்டிய இரு முக்கியமான ஆவிக்குரிய படிப்பினைகள் ஆவன:

1. அவர்கள் தங்கள் சுயநாட்டை விட்டுத் தூர தேசத்துக்குக் கொண்டு போகப்பட்டதினால், யெகோவா பலஸ்தீனா நாட்டிற்கு மட்டுமல்ல முழு உலகத்திற்கும் தேவனானவர் என்பது.

2. தேவாலயம் இடிபட்டு அதன் ஆராதனை முறைமைகளெல்லாம் ஒழிந்துபோனதினால், மெய்க்கடவுள் வணக்கம் ஏதோ விசேஷித்த இடங்களுக்கு மட்டுமுரியதல்ல என்பதும், அவ்வணக்கம் மதாசாரங்களினாலும், சடங்குகளினாலும் மட்டும் நடந்தேறக் கூடியதல்ல என்பதுமே (ஏசாயா 66:1, 2; அப். 7:46-50; யோவான் 4:21-24; 1 பேதுரு 1:10,11; 2 பேதுரு 1:19).

2

பாபிலோன் சிறையிருப்பு

யூதேயா நாட்டார் பாபிலோன் நாட்டிற்குச் சிறைப் பட்டுப் போனது சுமார் கி.மு. 600; இஸ்ரவேல் இராஜ் யத்தின் குடிகளோ அதற்குச் சுமார் 135 ஆண்டுகளுக்கு முன் சிறைகளாக்கப்பட்டனர். யூதரில் சிலர் சுமார் கி.மு. 530இல் பலஸ்தீனாவுக்குத் திரும்ப ஆரம்பித்தனர். ஆகவே, ஆண்டவர் முன்னறிவித்தபடியே, யூதேயா நாட்டார், பாபிலோனில் 70 ஆண்டு காலம் கழித்தனர் (எரே. 25:11; 29:10). இஸ்ரவேல் நாட்டார் சுமார் 205 ஆண்டுகாலம் அங்கு இருந்தனர்.

இஸ்ரவேல் நாட்டார் சிறைப்பட்டது

அசீரிய அரசர்களில் மூவர் இஸ்ரவேல் இராஜ்யத்தின் தலைநகராகிய சமாரியாவைத் தாக்கினார்கள். அவர் களில் திகிலாத் பிலேசர், சனகெரிப் ஆகிய இருவர் இஸ்ரவேல் நாட்டாரை வென்று அவர்களில் பலரைச் சிறைப்படுத்திக்கொண்டனர். கடைசியாக, சர்கோன் என்பவர் சுமார் கி.மு. 721இல் சமாரியாவை அழித்துப் போட்டு, அதன் குடிகளில் 27,000 பேரைப் பாபிலோ னுக்குக் கொண்டுபோனார் (2 இரா, 15:29; 17:5,6; ஏசாய. 20:1). இவ்வரசர்கள் இஸ்ரவேலருக்குப் பதிலாக அசீரியர் முதலிய குலத்தாரில் அநேகரைச் சமாரியா விலும் அதன் சுற்றுப்புறங்களிலும் குடியேற்றினார்கள் (2 இரா. 17:24). இந்த அந்நியர் அங்கே தங்கி இஸ்ரவேலரோடு கொள்வனை கொடுப்பனை விஷயத் தில் கலந்துகொண்டதினால் பிற்காலத்தில் ''சமாரியர்''

என அழைக்கப்பட்டனர். சமாரியர் என்னும் பெயரின் தோற்றம் இதுவே.

யூதேயா நாட்டார் சிறைப்பட்டது

பாபிலோனிய அரசனாகிய நேபுகாத்நேச்சார் திரும்ப திரும்ப யூதேயா நாட்டைத் தாக்கினார் முதலாவது யோயாக்கீம், அரசாண்ட மூன்றாம் ஆண்டில் (சுமார் கி.மு. 606) யோயாகீம், தானியேல் முதலிய பலரைச் சிறைப்படுத்தினார் (தானி. 1:1; 2 இரா. 24:1; 2 நாளா. 36:6). அடுத்ததாகச் சுமார் கி.மு. 599-இல் (யோயாக்கீம் அரசனின் நாள்களில்) இன்னும் பலரைச் சிறைப் படுத்தினார் (2 இரா. 24:10-16). கடைசியாக, கி.மு. 588இல் எருசலேமைத் தாக்கி, இரண்டு ஆண்டு காலம் முற்றுகை போட்டபின், கி.மு. 586இல் அதை பிடித்து தீக்கொளுத்தி அழித்துவிட்டார். யூதேயா நாட்டாரில் பலரை அவர் சிரையாக்கிக் கொண்டு பாபிலோனுக்குக் கொண்டுபோனதோடு சிதேக்கியா அரசனின் கண்களைக் குருடாக்கினார் (2 இரா. அதி. 25).

சிறையிருப்புக் காலத்தில் தீர்க்கதரிசனம் உரைத்தவர்கள்

ஒபதியா: இந்தத் தீர்க்கன் ஏதோம் இராஜ்யத்தைப் பற்றிய மிகவும் பயங்கரமான தீர்க்கதரிசன மொழிகளை இக்காலத்தின் ஆரம்பத்தில் எழுதலானார் போலும். எருசலேம் பாபிலோனியர் வசமான காலத்தில் ஏதோமியரும் யூதரை இம்சை செய்ததில் பங்கு பெற்றனர் போலும் (ஒப. 11-14).

எரேமியா: இவர் ஓசியா (யோசியா-ப. தி.) இராஜாவின் காலமுதல் சிறையிருப்புக் காலத்தின் முற்பாகம் வரைக்கும் சுமார் 50 ஆண்டுகாலம் தமது ஊழியத்தை உண்மையாக நிறைவேற்றி வந்தார் (எரே. 1:1-3).

யூதரை அவர்கள் பாவத்திற்குப் பலனாக உண்டாகும் அழிவைக் குறித்து தம்மால் இயன்ற மட்டும் எச்சரித்து வந்தார். ஆயினும், மிகச் சொற்பப் பேரைத் தவிர கவனிப்பாரில்லை. அதற்கப்பால் பாபிலோனியர் யூதேயா நாட்டாரைப் பயமுறுத்த ஆரம்பித்த நாள் முதற் கொண்டு எரேமியா, அந்தச் சத்துருக்களுக்குக் கீழ்ப் படிவதே ஞானம் என்பதாகப் போதித்து வந்தார். மக்களில் பெரும்பாலரோ, எகிப்தியரோடு உடன்படிக்கை செய்வதே சரி என்பதாக ஆலோசனை கூறினர். கடைசியாக, சிலர் எகிப்து தேசத்துக்கு ஓடிப்போனார்கள்; எரேமியா தங்களோடுகூட வரப் பலவந்தம் பண்ணினார்கள் *(2 இரா. 25:26; எரே. 41:17,18; 43:7)*.

தீர்க்கதரிசி எகிப்திலுங்கூட ஆண்டவரின் தூதை அந்த யூத மக்களுக்குக் கூறினார். அவர்களது சிறைவாசம் தீர்ந்தபின் அவர்கள் பாஸ்தீனாவுக்குத் திரும்புவதாகப் பகர்ந்தார். மக்களோ முன்போலவே விக்கிரக வணக்கத்திலும் அவபக்தியான வாழ்க்கையிலும் உழன்று வந்தனர்.

எசேக்கியேல் : இவர் எருசலேம் அழிக்கப்படுமுன்னர் பாபிலோனுக்குக் கொண்டு போகப்பட்டு, அங்குள்ள யூதர் மத்தியில் திருப்பணியாற்றினார் *(எசே. 33:21)*, பிரபுக்களை அவர்களின் அக்கிரமத்தினிமித்தம் தைரியமாய்க் கண்டித்தார். பரிசுத்த நகர் அழிக்கப்படுவதையும் யெகோவா தமது ஆலயத்தைவிட்டு நீங்குவதையும் முன்னறிவித்தார் *(அதி. 4—11)*. பின்னால், யூதர் திரும்பிப்போய் எருசலேமையும் தேவாலயத்தையும் கட்டுவதாகக் கூறினார்கள். அவர் கண்ட அதிசயமான தரிசனங்களில் இந்தச் சம்பவங்களுக்குரிய பல விவரங்கள் தெளிவாய்க் காணப்பட்டன *(அதி. 33—47)*.

தானியேல் : இவர் இக்காலத்தின் ஆரம்பத்தில் தமது வாலிபப் பருவத்தில் பாபிலோனுக்குக் கொண்டு போகப்பட்டார் *(தானி. 1:1-6)*. சிறையிருப்புக் கால முழுவ

திலும் திருப்பணியாற்றி, தாம் இயற்றிய கடைசி தீர்க்க தரிசன வாக்கியங்களை விருத்தாப்பியமுள்ளவராகக் கோரேஸ் அரசனின் மூன்றாம் ஆண்டில் எழுதினார் (தானி. 10:1). துக்கசாகரத்தில் அமிழ்ந்த தம் சகோதரரைத் திடப்படுத்தும்படி தானியேல் பிற்காலத்தில் தோன்றும் மேசியாவின் நித்திய இராஜ்யத்தைக்குறித்து அதிகம் எழுதினார். மீண்டும், இவர் விக்கிரகவணக்கத்தைத் தைரியமாய் எதிர்த்துப் பல ஆபத்துக்களுனூடே மெய்க் கடவுளையே வணங்கி வந்தார் (தானி. 6;5-17).

இக்காலத்தில் யூத குலத்தாரில் உண்டான இரு முக்கியமான மாறுதல்கள்

1. யூதர் பாபிலோனைவிட்டுத் தங்கள் சுய நாட்டிற்குத் திரும்புமுன்னே சகலவித விக்கிரகாராதனையையும் அகற்றிவிட்டனர். அது முதற்கொண்டு அந்தக் குலத்தார் இந்தப் பாவத்தில் ஈடுபட்டதேயில்லை.

2. யூதர் ஓர் அந்நிய நாட்டில் வசித்தபடியால் அவர்கள் முன்போல எருசலேமுக்குச் சென்று மெய்க் கடவுளைத் தொழுதுகொள்ள இயலாமற்போயிற்று. ஆகவே, அவர்களில் தேவபக்தியுள்ளோர் தாங்கள் குடியிருக்கும் கிராமங்களில் வீடுகள் முதலிய கட்டடங்களில் கூடி ஆராதனை செய்ய ஆரம்பித்தனர். அவர்கள் தங்கள் சுயநாட்டிற்குத் திரும்பின பிறகு இந்தப் பழக்கத்தினால் ஜெபாலயங்கள் ஸ்தாபனமாயின.

74-ஆம், 79-ஆம், 137-ஆம் சங்கீதங்கள் சிறையிருப்புக் காலத்தில் எழுதப்பட்டன.

யூதர் தங்கள் சுயநாடு திரும்பினது

கி. மு. 539இல் பெர்சிய இராஜ்யத்தார் பாபிலோனை மேற்கொண்டு அந்நாட்டை அரசாள ஆரம்பித்தனர்.

பெர்சிய இராஜாவாகிய கோரேஸ் என்பவர் கி. மு. 537 இல் யூதர் தங்கள் நாட்டிற்குத் திரும்பிப் போகலாம் என ஆணையிட்டார் (2 நாளா. 36:22,23; எஸ்றா 1:1-3). எனவே, அவர்கள் செருபாபேல் என்பவரால் நடத்தப் பட்டுக் கொஞ்சங் கொஞ்சம் பேராக எருசலேமுக்கும் அதன் சுற்றுப்புறங்களுக்கும் திரும்பினார்கள் (எஸ்றா 2:1,2) நாட்டின் பாழான நிலைமையையும் பரிசுத்த நகரும் தேவாலயமும் தீயினால் அழிந்து கிடக்கிறதையும் அவர்கள் கண்டு ஆறாத் துயரம் அடைந்தனர், அந்நாள் களில் ஆகாய், சகரியா என்னும் தீர்க்கர்கள் அவர்களை உற்சாகப்படுத்தினர். கி. மு. 536-516இல் தேவாலயத் தைக் கட்டினார்கள். அதற்கடுத்த நூற்றாண்டில் (கி. பி. 458-433) எஸ்றா, நெகேமியா என்பவர்கள் எருசலேமின் மதில்களை எடுப்பித்து தேவலாய ஆசரிப்பு முறைமை களைப் ஏற்பாடு செய்து மக்களைக் கடவுளின் வழிகளில் நடத்தினர்.

3

ஓசியா

முன்னுரை

எழுத்தாளர்—1:1

ஓசியா என்னும் பெயருக்கு ''யெகோவா இரட்சிப்பு'' என்று அர்த்தமா. பெயேரி என்று பெயர் கொண்ட இவர் தகப்பனைக் குறித்தாவது இவர் குடும்பத்தைக் குறித்தாவது நமக்கு ஒன்றும் தெரியாது. இவர் முக்கியமாக இஸ்ரவேல் நாட்டாரைக் குறித்து எழுதியபடியால் இஸ்ரவேல் இராஜ்யத்தின் குடிகளில் ஒருவர் என்று அனுமானிக்கலாம். இந்தத் தீர்க்கன் மிகவும் நீண்ட ஆயுசுள்ளவர் என்பதாகவும் தோன்றுகிறது.

ஓசியாவின் இல்வாழ்க்கையானது அவருக்குச் சொல்லடங்காத் துயரமுண்டாக்கத்தக்கதாகச் சீர் குலைந்து போயிற்று. எவ்வாறெனில், அவர் மனைவி அவருக்குத் துரோகமாக வேசித்தனம்பண்ணினாள். அந்த மகா மனவேதனைக்கிடமான சம்பவத்தைக் கொண்டே கடவுள் அவர் செய்யப்போகும் திருத்தொண்டிற்கென அவரைப் பயிற்றுவித்தார். இந்தக் காரியங்களைச் சரிவரக் கவனித்தல் அவசியம். மற்றப்படி ஓசியா இயற்றிய தீர்க்கதரிசன ஆகமத்தின் உட்கருத்து நமக்கு விளங்குவது கடினம்.

இயற்றிய காலம்-1:1

உசியா இராஜா யூதேயாவில் அரசாண்ட காலமுதற்கொண்டு எசேக்கியா அரசனின் காலம்வரைக்கும்

ஓசியா தீர்க்கன் தீர்க்கதரிசனம் உரைத்து வந்தார். மிகவும் நீண்ட காலம் திருத்தொண்டாற்றிய இவர் ஏசாயா, யோவேல், யோனா, ஆமோஸ் என்பவர்களின் நாள்களில் வாழ்ந்தார் எனக் கவனிப்பது நலம். ஓசியா வின் வாலிபக் காலத்தில் இஸ்ரவேல் நாட்டில் அரசாண்ட அரசன் இரண்டாம் யெரொபெயாம் என்பவர். இந்தத் தீர்க்கன், அதிக விருத்தாப்பியமுள்ளவராக மரித்துக் கொஞ்சநாள் சென்றதும் இஸ்ரவேல் இராஜ்யம் கவிழ்க் கப்பட்டு அந்நாட்டார் சிறைப்பட்டுப் போயினர்.

இயற்றப்பெற்றவர்கள்

ஓசியா என்பவர் யூதேயாவைக் குறித்து அப்போதைக்கப் போது எழுதின போதிலும் (1:7,11; 4:15; 6:4; 8:14; 12:2). அநேகமாக இஸ்ரவேல் நாட்டாருக்கே எழுதி னார் (1:4,6,10,11,; 3:5; 4:1 முதலியன).

அந்நாள்களில் இஸ்ரவேலரின் நிலைமை மிகவும் மோச மானது என 2 இரா. அதி. 15-17 இன்மூலம் அறிந்து கொள்கிறோம். மக்களின் தினசரி வாழ்க்கை மகா பொல்லாததாகவே இருந்தது. பொதுமக்கள் நடப்பித்த அக்கிரமச் செய்கைகளில் அரசனும் அதிகாரிகளும் பிரியப் பட்டனர் (4:18 ; 7:3 ; 9:15). கொடுமை முதலிய பாவங்கள் மேலிட்டுக்கொண்டன. இந்தச் சீர்கேடான வாழ்க்கை ஒரு புறம், லௌகீக வாழ்வு ஒரு புறம். வெளிப் படையாக இராஜ்யம் பலப்பட்டுக் கொண்டே வந்தது. அந்தரங்கத்திலோ பலட்சியப்பட்டு அழிவுக்குக் கிட்டிற்று (7:9). மத விஷயமாகவும் அந்நாட்டார் சீர்குலைந்து போயிருந்தனர். பொன் கன்றுக்குட்டிகளைச் செய்வித்து அவைகளை மெய்க் கடவுளாகிய யெகோவா வணக்கத் தில் பயன்படுத்தினர்.

கானானிய குலத்தார் ''ஆண்டவர்'' அல்லது ''தலைவர்'' என்றர்த்தங்கொள்ளும் ''பாகால்'' சுவாமி கள் பலவற்றை வணங்கி வந்தபடியால் இஸ்ரவேல்

நாட்டார் மெய்க்கடவுளைப் ''பாகால்'' அல்லது ''பாகாலி'' என்றழைக்கத் தலைப்பட்டனர்போலும் (2:13,16, 17). பாகால், அஸ்தரோத் முதலிய பொய்ச் சுவாமிகள் வணக்கம் சொல்லலாகாத அசுசியும் தாறுமாறுமாயிருந்தமையால் இஸ்ரவேலர் வரவர யெகோவாவாகிய தங்கள் ''பாகாலைத்'' தொழுது கொள்வதில் அந்த அசுத்தமான பழக்கங்களை அனுசரித்தனர். இதன் வாயிலாக அவர்கள் வாழ்க்கையானது படிப்படியாக மகா கேவலமாயிற்று. மீண்டும், ஆசாரியர்களும் பொது மக்களைப்போலவே சகலவித அக்கிரமத்தையும் ஆவலாய் செய்து வந்தனர் (4:4-9; 5:1; 6:9).

இவ்வாகமத்தின் முக்கியமான பொருளும் நோக்கமும்

மேலே குறிப்பிட்டுள்ள பாவங்களினிமித்தம் இஸ்ரவேல் நாட்டாரைக் கண்டிப்பதும் அவர்கள்மீது சீக்கிரத்தில் விழும் கடவுள் தண்டனையைக் கூறுவதுமே ஓசியா புதத்கத்தின் முக்கியப் பொருளாகும்.

கடவுளின் அன்பை அனுபவித்தும் அவ்வன்பை அலட்சியஞ் செய்ததே அவர்களிடம் காணப்பட்ட பிரதான பாவம் என்பதை மக்களுக்கு உணர்த்துவது இந்த தீர்க்கனின் மேலான நோக்கமாகும்.

இவ்வாகமத்தின் முக்கியத் தன்மை

1. இவ்வாகமத்தில் கடவுளின் அன்பு சிறந்த வண்ணம் விளங்குகிறது.
2. ஓசியாவின் நூல் மற்றைய 11 சிறுய தீர்க்க தரிசன ஆகமங்களைக் காட்டிலும் மிகக்கருகலான போதனையுள்ளது.
3. சகரியாவின் ஆகமத்தைத் தவிர 12 சிறிய தீர்க்க தரிசன நூல்களிலும் ஓசியாவே நீளமானது; இதுவே

வேதாகமத்தின் முதன் முதல் சிறிய தீர்க்கதரிசன மாகும்.

ஆமோஸ் தீர்க்கனுக்கும் ஓசியா தீர்க்கனுக்கும் உள்ள சில வேறுபாடுகள்

ஆமோஸ் தென்னாட்டார்; ஓசியா வடநாட்டார்.

ஆமோஸ் வடநாட்டில் தீர்க்கதரிசனமுரைக்க அங்கு அனுப்பப்பட்டார்; ஓசியா தம் சுய நாடாகிய அதே வட நாட்டில் இருந்து திருத்தொண்டாற்றினார்.

ஆமோஸ் கொஞ்சநாள் மட்டும் ஊழியஞ் செய்தார்; ஓசியாவோ நீண்ட காலம் உழைத்தார்.

ஆமோஸ், கடவுள் நீதியாகத் தண்டிக்கும் நீதிபதி எனப் போதித்தார்; ஓசியா, கடவுள் அன்பு மயமுள்ளவர்; தமது அன்பை அலட்சியஞ் செய்பவர்களை அவர் பயங்கர வகையாகச் சிட்சை செய்ய நேரிடும் எனப் போதித்தார்.

இவ்வாகமகத்தில் கடவுளுக்கு ஒப்பனையாகப் பயன்பட்டிருக்கும் உபகரணங்கள்

சிங்கம்-*5:14; 13:7;* சிவிங்கி-*13:7;* கரடி-*13:8;* பொட்டுப்பூச்சி-*5:12;* முன்மாரி, பின்மாரி-*6:3;* பனி-*14:5.*

இவ்வாகமத்தில் இஸ்ரவேலுக்கு ஒப்பனையாகப் பயன்பட்டிருக்கும் உபகரணங்கள்

அடங்காத கிடாரி-*4:16;* கண்ணியும் வலையும்-*5:1;* காலை மேகம் - *6:4;* அடுப்பு - *1:4, 6, 7;* திருப்பிப் போடாத அப்பம்-*7:8;* பேதையான புறா-*7:11;* மோசம் போக்கும் வில்-*7:16;* பாத்திரம்-*8:8;* காட்டுக் கழுதை-*8:9;* திராட்சப் பழமும் அத்திப்பழமும் -*9:10;* திராட்சச் செடி-*10:1;14:7;* நுரை-*10:7;* பழக்கப்பட்ட கடாரி-*10:11* பதரும் புகையும்-*13:3;*

விவேகமில்லாத பிள்ளை-13:3; லீலிப்புஷ்பம்-14:5; ஒலிவமரம்-14;6; தானியம்-14:7; தேவதாரு மரம்-14:8;

புதிய ஏற்பாட்டில் கூறியிருக்கும் ஓசியா ஆகமத்தின் வாக்கியங்கள்

''நீங்கள் என் ஜனமல்ல என்று அவர்களுக்குச் சொல்வதற்குப் பதிலாக நீங்கள் ஜீவனுள்ள கடவுளின் பிள்ளைகள் என்று அவர்களுக்குச் சொல்லப்படும்'' (1:10). இவ் வாக்கியம் ரோமர் 9:26இல் காணப்படுகிறது.

''என் ஜனமல்லாதவர்களிடம்: நீயே என் ஜனம் என்று சொல்வேன்'' (2:23) என்கிற வசனம் ரோமர் 9:25இல் எழுதியிருக்கிறது.

''பலியை அல்ல இரக்கத்தை..........விரும்புகிறேன்'' (6:6) என்கிற சொல்லை நமதாண்டவர் கூறினார் (மத். 9:13;12:7).

''எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன்'' (11:1) என்பதை மத். 2:15இல் படிக்கலாம்.

பிரிவுகள்

1. தீர்க்கனின் பயிற்சி-1:1-3:5.

அ. தீர்க்கனது இல்வாழ்க்கை-1:1-9.
ஆ. நம்பிக்கை உண்டாக்கும் தரிசனம்-1:10,11.
இ. குற்றவாளியான இஸ்ரவேல்-2:1-5.
ஈ. உபத்திரவமான வழி-2:6-13.
உ. சீர்கேடும் இரக்கமும்-2:14-23.
ஊ. தெய்வீக அன்பும் மனித சுபாவமான அன்பும்-3:1-5.

2. இஸ்ரவேலர் வாழ்க்கையின் சீர்கேடு-4:1-8:14.

அ. மக்கள் எப்படியோ ஆசாரியரும் அப்படியே-4:1-19.

ஆ. பெருமையும் இகழ்ச்சியும்-5:1-14.
இ. மேற்பாங்கான மனஸ்தாபம்-5:15-6:11.
ஈ. அக்கிரமம் வெளிப்பட்டது—7:1-16.
உ. சூறைக்காற்றை அறுப்பது—8:1-14.

3. நிச்சயமாக உண்டாகும் தண்டனை—9:1-11:11.

அ. சிறையிருப்பு நிச்சயமான நிகழ்ச்சி—9:1-17.
ஆ. விதைப்பும் அறுப்பும்—10:1-15.
இ. கடவுளின் இரக்கம் வெற்றிபெறல்—11:1-11.

4. கடவுள் இஸ்ரவேலைக் கண்டித்தல்—11:12-13:16

அ. இஸ்ரவேலின் துரோகமும் யாக்கோபின் பக்தியும்—11:12-12:14.
ஆ. விரைவாகவும் நிச்சயமாகவும் உண்டாகும் அழிவு—13:1-16.

5. மனந்திரும்புதலும் முன்னிலையைத் திரும்ப அடைதலும்—14:1-9.

விளக்கவுரை

தீர்க்கனின் பயிற்சி—1:1-3:5.

அ. தீர்க்கனது இல்வாழ்க்கை—1:1-9.

ஓசியாவின் மனைவி தன் கணவனுக்குத் துரோகஞ் செய்ததால் இஸ்ரவேல் நாட்டார் யெகோவாவுக்குச் செய்த துரோகத்திற்கு உவமானமானாள். எவ்வாறெனில், கோமேர் என்பவள் தன்னை நேசித்த தன் கணவனை விட்டு வேறு பலரை எப்படிச் சேர்ந்தாளோ அப்படியே இஸ்ரவேல் தன்னை நேசிக்கும் தன் பரம நாயகரைவிட்டு அந்நிய சுவாமிகளாகிய வேறு பல நாயகர்களைச் சேர்ந்தாள் (ஏசாயா 54:5; ஓசியா 2:7).

இவ்வாறு, முன்னுரையில் எழுத்தாளர் என்னும் தலைப்பின் கீழ் எழுதியபடி மகா மனவேதனையுண்டாக்கும் அந்தச் சம்பவத்தைக்கொண்டு கடவுள் ஓசியாவைத் தமக்குத் திருத்தொண்டாற்றும்படி பக்குவப்படுத்தினார். இதன் மூலம் அவருக்குச் சில மிகவும் முக்கியமான சத்தியங்களைக் கற்பித்து அவரைப் பயிற்றுவித்தார்.

''கர்த்தர் ஓசியாவைக் கொண்டு பேசத் தொடங்கின போது'' (1:2), ''கர்த்தர் ஓசியாவைப் பார்த்து: நீ போய்....''. இது சம்பவித்த அநேக ஆண்டுகள் சென்ற பின் ஓசியா இதை எழுதலானார் போலும். தமது விவாகத்தைப் பின்னிட்டுப் பார்த்தபோது ஆண்டவர் தாமே இப்படித் தம்மை நடத்தினார் என அறிந்து கொண்டார்.

ஓசியா கோமேர் என்பவளை விவாகஞ் செய்தபோது அவள் ஒரு ''சோரஸ்திரீ'' என நினைக்க வேண்டுவ தில்லை. பின்னாலோ அவள் அவ்வாறு சீர்கெட்டுப் போனதை அவர் நினைத்துக்கொண்டு: ஆம், இந்தச் ''சோரஸ்திரீ''யையும் அவள் எனக்குப் பெற்ற பிள்ளை களையும் என் வீட்டில் வைத்துக்கொள்ள நேர்ந்தது கடவுள்செயலேயொழிய வேறு அல்ல என்று நிச்ச யித்துக் கொண்டார்.

''இவனுக்கு இஸ்ரியேல் என்னும் பேரிடு'' (4:9). தீர்க்கனின் மனைவியுடைய நடத்தைமட்டுமல்ல, அவரது மூன்று பிள்ளைகளின் பெயர்களும் இஸ்ரவேலின் சீர்கேட்டையும், கடவுள் அவளைத் தள்ளிவிட்டதையும் உவமானமாகக் காட்டுகின்றன. இஸ்ரியேல் என்கிற பெயர் இவ்விடத்தில் யேகூ என்பவர் ஆகாப் அரசனின் குடும்பத்தாரைக் கொன்று போட்டதைக் குறிக்கிறது (2 இராஜா. 9:1-10). யேகூ, கடவுள் சொற்படி அதை செய்தபோதிலும் அதை தவறான மனநிலையோடு செய்தார்.

ஆ. நம்பிக்கை உண்டாக்கும் தரிசனம்-*1:10,11.*

''ஆயினும'' (*10, 11*), இஸ்ரவேல் புத்திரர் குணப் பட்டுக் கடவுளின் ஆசீர்வாதத்தைத் திரும்ப அனுபவிக்கும் காலம் வரும் என்கிறார். 10-ஆம் வசனத்தின் இறுதி யிலுள்ள தீர்க்கதரிசன சொல்லைப் பவுல் அப்போஸ்தலன் பயன்படுத்திய வகையைக் கவனிக்கவும் (ரோமர் 9:26).

இ. குற்றவாளியான இஸ்ரவேல்-*2:1-5.*

ஓசியாவின் மனைவி விபசாரஞ் செய்ததோடு வேசி யுமானாள் (வ. 12 ஐயும் காண்க). தீர்க்கனோ ஆண்ட வரிடம் தனித்திருந்து அவருக்கெனத் தாம் ஆற்ற வேண்டிய திருப்பணிக்கேற்பத் தம்மைத் தயாரித்துக் கொண்டே வந்தார். தமது நெஞ்சத்தை உடைத்த அந்த வேதனையைக்கொண்டு இஸ்வேலரால் ஆண்டவருக்குண் டான மகா மனவேதனை இன்னதென ஒருவாறாக அறிந்துகொண்டார். இஸ்ரவேல் நாட்டார் அந்நிய தேவர்களைச் சேவித்தது இவ்வாக்கியங்களிலும் இதற்கு அடுத்து வரும் பாகத்திலும் விபசாரமாகப் பாவிக்கப் பட்டு, மிகவும் கடுமையாகக் கண்டிக்கப்படுவதைக் கவ னிக்க. இந்தியாவில் வசிக்கும் நாம் விக்கிரக வணக்கத் தால் சூழ்ந்திருக்கிறோம். ஆதலால், நாம் இந்தப் பயங் கரமான பாவத்தில் விழாதபடி அதுசம்பந்தமான சோத னைகளில் சிக்குண்டு போகாதபடி மிகவும் எச்சரிக்கையா யிருக்கவேண்டும். இந்தியக் கிறிஸ்தவர்கள் தங்கள் உற்றார் உறவினரைப் பிரியப்படுத்துமாறு இது சம்பந்த மாகத் தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாக நடப்பது எவ்வளவோ எளிது!

ஈ. உபத்திரவமான வழி-*2:6-13.*

கோமேர் என்பவள் தன் கணவனுக்கு விரோதமாய்ச் செய்த குற்றத்தைப் பார்க்கிலும் இஸ்ரவேல் தன் திவ்விய நாயகருக்குச் செய்த துரோகமானது கோடி மடங்கிலும் பெரிது. ஆகையால், பரம நாயகர் தாம் வெகுவாக

நேசிக்கும் தமது நாயகியை இவ்வசனங்களில் குறிப்பிட்டிருக்கிற பிரககரம் சிட்சை செய்வது அவசியமாகும்.

உ. சீர்கேடும் இரக்கமும்—(2:14-23). -2:14-23

பிறகு ஆண்டவர் இஸ்ரவேல் நாட்டாரைத் திரும்பவும் சேர்த்துக்கொள்வார்(1:10,11). கடவுளது அன்பின் அதிசயத் தன்மையை இதனால் காண்கிறோம்.

''ஆகோரின் பள்ளத்தாக்கையும்'' (15). யோசுவா 7:25,26 ஐக் காண்க. யோசுவாவின் நாள்களில், பாவத்தின் பலனாக, அவ்விடத்துக்குக் ''கலங்கப்பண்ணல்'' என்று அர்த்தங்கொள்ளும் ஆகோர் என்னும் பெயர் இடப்பட்டது. வருங்காலத்திலோ இஸ்ரவேவர் தங்கள் பாவங்களைவிட்டு விட்டுக் குணப்பட்டுக் கடவுளோடு ஒப்புரவாகி, அப்படிப்பட்ட இடத்தை நம்பிக்கையின் வாயிலாகப் பெற்றுக் கொள்வார்கள்; அதாவது, ஆண்டவர் தங்களை மறுபடியும் ஆசீர்வதிப்பார் என்கிற நம்பிக்கைக்கு அந்நாள்களில் இடமுண்டாகும்.

''என்னை ஈஷி என்று சொல்லுவாய்'' (16, 17 ப. தி.). பாகால் என்பதற்கு நாயகன் என்றும் ஈஷி என்பதற்குக் கணவன் என்றும் அர்த்தமாம் (பு. தி. யைக் காண்க. பாகால் என்பது அந்நிய தேவதை நாமமான படியால் மெய்க் கடவுள் தம்மை வேறு பெயரால் அழைக்கச் சொல்லுகிறார் (முன்னுரை—இயற்றப்பெற்றவர்கள் என்கிற பிரிவைக் காண்க).

''உன்னை எனக்கு நியமித்துக் கொள்ளுவேன்'' (19,20). மும்முறை கூறியிருக்கும் இத்திவ்விய மொழியை அதிக பயபக்தியாய்க் கவனிப்போமாக.

ஊ தெய்வீக அன்பும் மனித சுபாவமான அன்பும்—3:15.

''இஸ்ரவேலர் பேரில் கர்த்தர் கொண்டுள்ள காதலுக்கு ஒப்பாக, நீ மறுபடியும் போய்.... விபசாரியுமான ஒரு பெண்ணின்மேல் காதல்கொள்'' (1). இந்தத் தீர்க்கன். கடவுளுடைய அன்புக்குத் துரோகஞ் செய்தலின் அகோர

மின்னதெனத் தமது அனுபவத்தினால் ஒருவாறாகக் கற்றாரே. தமது நேசத்தை வேண்டாவெறுப்புடன் தள்ளி விட்டது மன்னிக்கப்படாத குற்றம். அதை செய்தவளை ஒருகாலும் சேர்த்துக்கொள்ளவே கூடாது என்றும் அவ்வாறே கடவுளின் அன்புக்குத் துரோகஞ் செய்தவளாகிய இஸ்ரவேல் என்பவளும் ஆவிக்குரிய விபசாரஞ் செய்து விட்டாள். ஆகவே, ஆண்டவர் ஒருகாலும் அந்தக் குலத்தாருக்கு மன்னிப்பீயாமலும், அவர்களை ஒருகாலும் சேர்த்துக்கொள்ளாமலும் இருப்பது நியாயம் என்றும் யோசித்துப்பார். ஆனால், ஓசியா சகிக்கவொட்டாத மனவேதனையும் பொறுத்துக் கொள்ளமுடியாத கோபமுடையவராயிருக்கும் அத்தருணத்தில் கடவுள் அவரிடம் எதை கட்டளையிட்டார்? நான் இன்னும் என் இஸ்ரவேலை நேசிக்கிறேன்; அவளைத் திரும்பச் சேர்த்துக் கொள்வேன்; அப்படியே நீயும் உன் மனைவியை நேசித்து அவளை உன்னிடம் சேர்த்துக்கொள் என்றாரே!

''அப்பொழுது நான் அவளை எனக்குப் பதினைந்து வெள்ளிக் காசும்....கொடுத்து வாங்கி'' (2). மேற்குறித்த கட்டளையானது தீர்க்கனுக்கு எத்தனை கடினமான பாடமாகும்! இருப்பினும், அவர் உடனே போய்க் கோமேர் என்பவளைத் தேடிக் கண்டுபிடித்தார். அதற்குள்ளாக அவள் ஓர் அடிமை நிலைமைக்குள்ளானாள். ஓசியா அவளை அடிமைகளை விற்கும் சந்தையில் வாங்கிக் கொண்டார்போலும். எப்படியெனில், இவ்வாக்கியத்தில் குறிப்பிட்டுள்ள பணமும் பொருளும் சேர்ந்து சுமார் ஐம்பது ரூபாய்க்குச் சமம் என அனுமானிக்கலாம். அது ஓரடிமையின் கிரயமாகும் (யாத். 21:32). இம்மட்டாகக் கடவுளுக்குக் கீழடங்கி நடப்பவர்கள் மிகவும் அரிதான திருப்பணியாற்றக் கூடியவர்களாவர் என்பது உறுதியாகும். உதா. ஓசியா தீர்க்கன் அதற்குப் பிறகு எவ்வளவோ வைராக்கியம், ஊக்கம், அனுதாபமாகியவற்றுடன் பிரசங்கித்திருப்பார்!

ஓசியா தம் மனைவியை வீட்டிற்குக் கொண்டு வந்த வுடனே அவளைச் சேராமல் அவளை ''அநேக நாள்.... காத்திரு'' என்று சொல்லிப் பிரத்தியேகப்படுத்தி வைத் தார் என்பதை கவனிக்க (3).

''ராஜா இல்லாமலும்'' (4). இவ்வாக்கியத்தினால் நாம் கற்கவேண்டியது யாதெனில், ஓசியா கோமேர் என்பவளை எப்படி ''அநேக நாள்'' தனித்திருக்கச் செய் தாரோ அவ்வாறே''இஸ்ரவேலர் அநேக நாள்'' இராஜா, அதிபதி, பலி, சிலை முதலியவையில்லாமலே இருப் பார்கள் என்கிறார். இந்தத் தீர்க்கதரிசன வாக்கியம், யாவரும் அறியத்தக்கதாக நிறைவேறிற்று. இஸ்ரவேல் இராஜ்யமே அற்றுப்போயிற்று. சற்றுக் குறைய 2000 ஆண்டுகாலம் இவ்வசனத்தில் குறிப்பிட்டவைகளில் ஒன் றும் அவர்களுக்கு இல்லை.

''பின்பு....கடைசி நாள்களில்'' (5). அவர்கள் ஆண்ட வரிடம் திரும்புவார்கள். அந்நாள்கள் இன்னும் வர வில்லை. எனினும், இவ்வருள் வாக்கு ஏற்ற காலத்தில் நிறைவேறுவது நிச்சயமேயாகும். ''தங்கள் இராஜா வாகிய தாவீதையும்'' அரசாளும் இராஜாவின் பெயரைச் சொல்லாமல், அதற்குப் பதிலாகத் ''தாவீது'' என்று சொல்வார்கள். உதா. 1 இரா. 12:16.

2. இஸ்ரவேலர் வாழ்க்கையின் சீர்கேடு-4:18-14.

இப்பொழுது இந்தத் தீர்க்கன் உரைத்த தீர்க்க தரிசன மொழிகளை ஆராய்ச்சி செய்வோம். அவைகள் அவருக்குண்டான மகா துக்ககரமான அனுபவங்களின் மூலம் அவருக்கு அருளப்பட்டன.

அ. மக்கள் எப்படியோ ஆசாரியரும் அப்படியே-4:1-19.

''இஸ்ரவேலரே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்'' (1). ஓசியா இஸ்ரவேலரிடம் இப்படிச்

சொல்லி அவர்களிடத்தில் காணப்பட்ட பாவங்களை வர்ணிக்கிறார். முதலாவது, மூன்று ஆவிக்குரிய குறைகளை எடுத்துக் காட்டுகிறார். அவைகளில் கடவுளை அறியாதிருத்தல் ஒன்றாகும்; அதுவே உண்மை இல்லாமைக்கும் இரக்கமில்லாமைக்கும் காரணமாகும்.

''ஆணையிட்டு........கொலை செய்கிறார்கள்'' (2): மேற்கூறிய மூன்று அந்தரங்கக் குறைகளினால் விளைந்த பல வெளியரங்கமான பாவங்களை இவ்வசனத்தில் காண்கிறோம் (வச. 1 ஐயும் ஆமோஸ் 2:6-8 ஐயும் காண்க). ''இரத்தம்! எங்கும் இரத்தமே!'' அதாவது, கொலைப் பாதகம் நாட்டில் வெகுவாக மேலிட்டுக் கொண்டது. ''இதினிமித்தம் தேசம் துக்கிக்கும்.'' இம்மொழியானது பஞ்சத்தைக் குறிக்கும்.

போதகன்மாராகிய ஆசாரியரே (4-9) மக்கள் கடவுளை அறியாதிருத்தலுக்கு ஆதிகாரணராவர். மக்களைக் கடவுளுக்கேற்ற வழிகளில் நடத்தக் கடமைப்பட்டோர் சகலவித அக்கிரமஞ் செய்து வருகிற மக்களைப் பின்பற்றுவது எத்தனை பயங்கரமான காரியமாகும் (9). இவ்வசனங்களின்மூலம் தீர்க்கன் ஆசாரியரைக் கண்டித்து அவர்கள்மீது விழும் தண்டனையை முன்னறிவிக்கிறார்.

''உன் தாயையோ'' (5) என்பதற்கு ''உன் இராஜ்யத்தையோ'' என்று அர்த்தமாம்.

''புருஷரும். விலகி வேசிகளோடு போய்'' (14). இவ்வாக்கியத்தின் கருத்து யாதெனில், தாம் ஸ்திரீகளை விபசாரம் முதலிய அவர்களது பாவங்களினிமித்தம் தண்டிப்பதில்லை என்பதேயாம். ஏனெனில், புருஷர் விலகி வேசிகளோடும் தாசிகளோடும் போய் இருக்கிறார்கள். கடவுள் இது சம்பந்தமாக நீதிபரர் பாருங்கள். அவர் பாவிகளான ஆண்களையும் பெண்களையும் சமமாகவே பாவித்து நியாயந்தீர்ப்பார். உதா. சிலர் இத்

தகைய பாவஞ்செய்த ஓர் ஆணை ஒன்றும் செய்யாமல், பெண்ணைமட்டும் இயேசு நாதரிடம் கொண்டுவந்த சமயத்தில், அவர் சொன்னதை நினைத்து கொள்ளவும் (யோவான் 8:7,11).

''யூதாவாகிலும் அந்தப் பாவத்துக்குள்ளாகாதிருப்பதாக'' (15-19). யூதேயா நாட்டார் இஸ்ரவேலரின் சீர்கேட்டில் பங்கு பெறாதபடி ஓசியா அவர்களை எச்சரிக்கிறார். ''கர்த்தருடைய ஜீவன் மேலாணை என்று ஆணையிடாமலுமிருங்கள். மக்கள் அந்நிய சுவாமிகளின்பேரில் ஆணையிட்டதுண்டு (ஆமோஸ் 8:14ஐக் காண்க.)

''எப்பிராயீம்'' (17). இஸ்ரவேல் நாட்டின் 10 கோத்திரங்களில் எப்பிராயீமே பெரிதும் பலமுமான கோத்திரமாம். இந்தப் பெயர் அநேக இடங்களில் இஸ்ரவேல் இராஜ்யம் முழுவதையும் குறிக்கிறதற்கு இதுவே காரணமாயிருக்கலாம். ''அவனை விட்டு விடு'' (17). யூதா இஸ்ரவேலின் பாவத்தில் சிக்குண்டு போகாதபடி அவனை விட்டுவிடச் சொல்லுகிறார். இவ்வாக்கியம் நம்மெல்லாருக்கும் ஏற்ற எச்சரிப்பு அன்றோ! நம் சகோதரர் பாவஞ் செய்யும்போது நாம் அவர்களை விட்டு விலகுவது அவசியமேயாம் (1 யோவான் 5:21; வெளி. 18:4).

''காற்று இவர்களைத் தன் செட்டைகளில் இறுகப் பிடிக்கும்'' (19). எதிரிகள் வந்து சடிதியாய் அவர்களை வாரிக்கொண்டு போவதை இம்மொழி குறிக்கும் (ஏசாயா 57:13).

ஆ. பெருமையும் இகழ்ச்சியும்-*5:1-14*.

''ஆசாரியரே, இதை கேளுங்கள்'' (1). இந்தப் பாகத்தில் தீர்க்கன் ஆசாரியரையும் அதிபதிகளையும் திட்டமாகக் கண்டிக்கத் தலைப்படுகிறார். மக்கள் பாவத்தில் சிக்குண்டு போகத்தக்கதாக இவ்விரு வகுப்பார்

கண்ணியும் வலையுமானார்கள். தாபோர் என்பது கலிலேயாவிலுள்ள ஒரு மலையின் பெயராகும் (நியா. 4:6), மிஸ்பா என்பது யோர்தானுக்குக் கிழக்கே கிலேயாத்திலுள்ள ஓரூரைக் குறிக்கும் (நியா. 10:17). இவ்விரண்டு இடங்களில் ஆசாரியரும் அதிபதிகளும் பாகால் முதலிய தேவதைகளை முக்கியமாக வணங்கி வந்தனர்போலும்.

''வேசித்தன ஆவி'' (3, 4). விபசாரமானது இவ் வாகமத்தின் பல வாக்கியங்களில் குறிப்பிட்டிருக்கிறது. ஆனால், அநேக இடங்களில் சரீரத்திற்குரிய பாவங்க ளல்ல, உள்ளத்திற்குரிய அக்கிரமமே குறிப்பிட்டிருப்பதை நன்கு கவனிக்க (2:1-13 ஐப்பற்றிய குறிப்புகளையும் காண்க). இதே கருத்தோடு ''சோரம் போனாயே'' என்றும் ''இஸ்ரவேல் தீட்டுப்பட்டதே'' என்றும் ''வேசித்தன ஆவி'' என்றும் இவ்வசனங்களில் எழுதி யிருக்கிறது (1:2; 4:12).

''யூதாவும் இடறுண்டு விழுவான்'' (5). யூதேயா நாட்டார் இஸ்ரவேலரின் சீர்கேட்டை அறிந்தும் எச்சரிப் படையாமல், அதனால் இழுப்புண்டு போயினர் வச. 8, 10, 12-14 ஐயும் காண்க).

''கிபியா.......ராமா.......பேதாவேன்.... பென்யமீன்....'' (8). இவ்விடங்கள் யூதேயாவிலாவது அதற்கு அருகிலா வது இருந்ததாகத் தோன்றுகிறது (8:1 ஐயும் காண்க).

''யூதாவின் பிரபுக்கள்'' (10). இது யூதேயா நாட்டின் அதிபதிகள்மேல் குற்றஞ் சாட்டலாகும் (உபா. 19:14 ஐக் காண்க). இவ்வசனத்தில் குறிப்பிட்ட பாவம் நிலத்தின் எல்லைகளை ஒற்றிப்போடுதல் மட்டுந்தானோ? அல்லவே, நீதிக்கும் அநீதிக்கும், சத்தியத்துக்கும் அசத்தி யத்துக்கும், யெகோவா வணக்கத்துக்கும் பாகால் வணக் கத்துக்கும் இடையிலுள்ள 'எல்லைகளை' ஒற்றிப்போடு தலும் அதில் அடங்கியிருக்கிறது.

''யாரேப் ராஜாவிடம்'' (13). இந்தப் பெயருக்குப் போர் புரியும் இராஜா என்றர்த்தமாம். அசீரியா ராஜாக் களில் ஒருவரைக் குறிக்கும் எனலாம்.

இ மேற்பாங்கான மனஸ்தாபம்-5:15-6:11.

''நான் என் இடத்துக்குத் திரும்பிப்போய் விடுவேன்'' (15). இவ்வாக்கியத்தை வச. 6 ஓடு ஒத்திட்டுப் பார்க்க. பாவத்தில் நிலைகொண்டிருக்கும் மக்களை ஆண்டவரும் விட்டுவிடவேண்டிய நாள் வரும். அந்நாளில் அவர்கள் அவரைத் தேடினாலும் அவரைக் காணமாட்டார்கள். எனினும் அவர்கள் உண்மையாகவே தங்கள் பாவப் பழியை உணர்ந்து அவரை ''ஆவலாய்த்'' தேடும் நாளில் ஆண்டவர் அவர்களுக்கு இரங்குவார் (உபா. 4:29; சங். 119:2; நீதி. 8:17).

''கர்த்தரிடம் திரும்புவோம் வாருங்கள்'' (6:1). இவ்வசனத்திலும் இதற்கடுத்த இரு வாக்கியங்களிலும் போலி மனஸ்தாபம் காணப்படுகிறது. எத்தனை தேவ பக்தியுள்ள வார்த்தைகள்! ஆண்டவரின் மக்கள் இப் பொழுதாவது மனந்திரும்பியிருக்கிறார்கள் என்கிற அகமகிழ்ச்சி ஒருகால் நமக்கு உண்டாகும். இவ்வசனங் களை முந்திய இரு வாக்கியங்களோடு கீழ்க்காணுமாறு ஒத்திட்டுப் பார்க்க:

''நானே பீறிவிட்டுப்போய்விடுவேன்'' (5:14 ப.தி.); ''நம்மைப் பீறினவர் அவரே'' (6:1).

''நான் என் இடத்துக்குத் திரும்பிப் போய்விடுவேன்'' (5:15); ''திரும்புவோம் வாருங்கள்'' (7:1).

''போய்விடுவேன்'' (5:15); ''நம்மிடம் வருவார்'' (6:3).

முந்தின இரு அதிகாரங்களில் எழுதியுள்ள பயங்கர மான தீர்க்கதரிசன மொழிகளைக் கேட்ட மக்கள் மனந் திரும்புகிறதை இவ்வசனங்களில் காண்கிறோம். ஆயினும்

அவர்கள் ஆண்டவரிடம் தங்கள் முழு இருதயத்தோடும் திரும்பவில்லை என்பது மிகத் தெளிவு (வச. 4ஐ நன்கு கவனிக்க). இச்சமயத்தில் இஸ்ரவேலிடமும் யூதாவிடமும் காணப்படுகிற "பக்தி காலை மேகம்போலவும் பனிபோலவும் விரைவில் ஒழிந்துபோகும்" தன்மையானதே. இதை போன்ற வெளிவேடமான பக்தியை 8:2,3இலும் காணலாம். தாங்கள் ஆண்டவரிடம் திரும்பினபடியால் அவர் வெகு சீக்கிரம் தங்களைப் பரிபூரணமாய் ஆசீர்வதிக்க வேண்டுமென ஆத்திரப்படுகின்றனர்! கடவுளோ அப்படிச் செய்யாமல் அவர்களை அவர்களது பொல்லாப்பினிமித்தம் பின்னும் கண்டித்துக்கொண்டே வருகிறார்! பாவஞ்செய்தல் மகா பழியும் ஆக்கினையும் உடையதென்றும் உண்மையான பாவ உணர்ச்சியும் மனஸ்தாபமும் வெகு சுலபமாயாவது சுருக்கமாயாவது நிறைவேற்றக்கூடியவையல்ல என்றும் சரிவரக் கற்கக் கடவோம் (எரே 6:14; 8:11).

"எப்பிராயீமே" (4). பக்தியுள்ள பேச்சு போதாது (1-3); நிலைவரமான பக்தியே காரியம் (சங். 51:10). ஓசியாவின் நாள்களில் பலவிதமான பக்தியுள்ள பணிவிடைகள் இஸ்ரவேல் நாட்டிலும், யூதேயாவிலும் நடந்தேறிவந்தன. இருநாடுகளிலுமோ நிலைவரமான பக்தியில்லை என்பதாக இவ்வாக்கியத்தால் அறிகிறோம். அதுமட்டுமின்றி, நிலையுள்ள பக்தியற்றோர் நிலையற்றோராவர். இவ்வசனத்தை 13:3 ஓடு ஒத்திட்டுப்பார்க்க.

"தீர்க்கதரிசிகளைக் கொண்டு அவர்களை வெட்டினேன்" (5). கடவுள் தமது தீர்க்கரைக் கொண்டு இருநாட்டின் குடிகள்மேலும் அழிவாகிய தண்டனையைக் குறித்து கூறினதை இது குறிக்கும்.

"இரக்கத்தையும்.... விரும்புகிறேன்" (6). இயேசுநாதர் இவ்வார்த்தைகளை மொழிந்தருளினார் (மத். 9:13). வெளிவேடமான பக்திக்குரிய ஆற்றல்கள் போதா; கடவுளிடமும் மனிதரிடமும் நாம் உண்மையான மன

மாறுதலைக் காட்டவேண்டும்(4:1-ஐயும், 1 சாமு, 15:22 ஐயும் காண்க). ''கடவுளை அறிகிற அறிவையும்''. கடவுளைப்பற்றிய அறிவும் அறியாமையும் இவ்வாகமத்தில் பன்முறை காணப்படுகின்றன. இவைகளே சகலவித நன்மைக்குத் தீமைக்கும் ஆதாரமானவையல்லோ? (2:8, 20; 4:6; 5:4; 6:3; 8:2; 11:3; 13:4). யோவான் 17:3 ஐயும் காண்க. இஸ்ரவேலர் கடவுளை அறியாதிருந்தும் அவர் அவர்களை அறிவார்! (5:3; 13:5).

''கிலியாத்'' (8). இது அடைக்கலப்பட்டணங்களில் ஒன்றாம் (யோசுவா 20:7-9). அடைக்கலப்பட்டணங்களிலுங்கூடக் கொள்ளையிடவும், கொலைசெய்யவும் துணிந்தது எவ்வளவு பயங்கரமான காரியமாகும்! தேசமானது இவை முதலிய பல்வகை அக்கிரமத்தால் நிறைந்திருந்தது.

''ஆசாரியர்.... கொலை செய்கிறார்கள்'' (9). இவர்களே பாவஞ்செய்வதில் முந்திக்கொண்டனர்.

''வேசித்தனம்.... இஸ்ரவேல் தீட்டுப்பட்டது'' (10). மெய்க்கடவுளுக்குத் துரோகஞ் செய்தலாகிய ஆத்தும விபசாரத்தையும் சரீர சம்பந்தமான வேசித்தனத்தையும் குறிக்கும் என நினைக்கத் தகும்.

''யூதாவே, உனக்கும் ... நியமிக்கப்பட்டிருக்கிறது'' (11). யூதாவும் தன் பாவத்தின் பலனை அறுத்துத்தான் ஆகவேண்டியது. அந்த இராஜ்யமும் அழிந்துபோயிற்றன்றோ (கலா. 6:8)?

ஈ. அக்கிரமம் வெளிப்பட்டது-7:1-16.

இந்தப்பாகத்தில் இஸ்ரவேல் நாட்டாரின் பொல்லாப்பான நிலைமை, அடுப்பு, அப்பம், நரைமயிர், புறா, வில் முதலிய உருவகங்களைக் கொண்டு வர்ணிக்கப்பட்டுள்ளது.

அடுப்பு (4—7)—''அனலை மூட்டாதிருக்க எரியும் அடுப்பைப் போன்றவர்கள்.'' சற்றேனும் தணிந்து

போகாத அனலாகிய காமம் முதலிய இச்சைகள் நிறைந்தவர்கள் என்பது இதற்கு அர்த்தமாம். அதாவது அப்பம் சுடுகிறவன் மாவைப் பிசைந்து முடியும்வரைக்கும் சற்றேனும் தணியாத அனலான அடுப்புப்போல இஸ்ரவேலரின் அக்கிரமம் மகா மும்முரமாகவே இருந்தது. வச. 6, 7ஐ நன்கு கவனிக்க.

திருப்பி போடாத அப்பம் *(8)*—இவ்வசனத்தின் முற்பாகம் இச்சொல்லின் கருத்து இன்னதென விளக்குகிறது. எவ்வாறெனில், இஸ்ரவேல் இராஜ்யத்தார் அந்நிய இராஜ்யங்களோடு கடவுளுக்குப் பிரியமில்லாதவகையில் சம்பந்தங் கலந்தனர். வேளா வேளையில் எகிப்தியரோடாவது அசீரியரோடாவது ஒப்பந்தம்பண்ணினார் *(வ. 11; 8:9; 9:6; 12:1)*. அதனால் அவர்கள் அந்த அந்நிய மக்கள் வணங்கும் பாகால் முதலிய சுவாமிகள் மேல் கொழுந்துவிட்டெரியும் வைராக்கியங்கொண்டனர். மெய்க்கடவுள் தொழுகை சம்பந்தமாகவோ அனலற்றுப் போயினர் *(வெளி. 3:16)*. இப்படி அவர்கள் ஒருபுறம் சுட்டுக் கரியாய்ப்போய் மறுபக்கம் கொஞ்சமும் சுடாமல் பச்சையாகவே இருக்கும் சப்பாத்தியைப் போன்றவர்கள் *(2 இரா. 18:21; சங். 106:35,36)*.

நரை *(9)* — தேவபக்தியற்றோரோடு சம்பந்தங் கலத்தல் எப்படியும் பக்தியுள்ளோரைப் பலட்சியப்படுத்தும். அவ்வாறு செய்வோரோ அதன் விளைவு இன்னதென எப்பொழுதும் அறியாதிருப்பர் *(1 கொரி. 15:33; 2 கொரி. 6:14)*. ''அவர்கள்........ கர்த்தரிடம் திரும்பவில்லை'' *(10)*. ஆமோஸ் 4:6, 8-11ஐக் காண்க.

புறா *(11, 12)*—எகிப்தியர் இஸ்ரவேலைத் தாக்கினால் அவன் பேதையான புறாவைப்போல அசீரியரிடம் உதவிதேடப் பறந்துபோவான். அப்படியே அசீரியர் தாக்கினால் எகிப்தியரிடம் அடைக்கலம் புகும்படி பறந்து போவான். அந்நாட்டாரோ ஒரு பட்சியை ஒரு வலையில்

பிடிப்பதுபோல இவனைப் பிடிப்பார்கள். அதுவும் கடவுளே வைத்த வலையாயிருக்கும்!

வில் *(16) — ''தளர்ந்த வில்லைப்போலிருக்கிறார் கள்.'' இம்மொழியைச் சங். 78:57, 53ஓடு ஒத்திட்டுப் பார்க்க. உன்னதமானவரையே தங்கள் இலக்காகக் கொண்டிருக்கவேண்டிய இவர்கள் உள்ளமானது மோசம் போக்கும் தளர்ந்த வில்லைப்போலத் துவண்டு உலகத் தையும் உலகத்தாரையும் நோக்கிற்று. எனவே அவர்கள் ஒத்தாசை தேடி எகிப்துக்குச் சென்றும் எகிப்தில் அவர் களுக்கு நிந்தையும், அவமானமுமேயொழிய வேறொன் றும் கிடைக்கவில்லை. ஏசாயா 30:1-7ஐக் கவனமாய்ப் படிக்க.*

உ. சூறைக் காற்றை அறுப்பது-*8:1-14.*

இவ்வதிகாரத்தில் கடவுள் இஸ்ரவேல் நாட்டாரைத் திரும்பவும் குற்றப்படுத்துவதுடன் அவர்களைத் தாம் வெகு சீக்கிரம் தண்டிப்பதற்கு அறிகுறியாக ஓசியாவை எக்காளமூதச் சொல்லுகிறார் (1). அந்நிய நாட்டார் இஸ்ரவேல் இராஜ்யத்தை அழிக்கப் போகின்றனர் (1, 3, 14; 2 இரா. 18:9-12) இந்தத் தண்டனைக்கு ஆதிகாரணமான இரு பாவங்களை எடுத்துக் காட்டு கிறார். இவை விக்கிரக வணக்கமும் பிரிவினையுமே (4 முதலியன).

''கர்த்தருடைய வீட்டின்மேல்'' (1). இந்தப் பெய ரால் இஸ்ரவேல் நாட்டைக் குறிக்கிறார் என உத்தேசிக் கலாம்.

''எங்கள் கடவுளே'' (2,3). பேச்சு பக்தியுள்ளது தான், நடத்தையோ கடவுளுக்கு அருவருப்பானது. 6:1-4 ஒடு ஒத்திட்டுப்பார்க்க.

''அவர்கள் ராஜாக்களை ஏற்படுத்திக்கொண்டார் கள்'' (4). இஸ்ரவேல் நாட்டார் தங்கள் தேசத்தில்

பிரிவினையுண்டாக்கித் தங்களுக்குத் தனிப்பட்ட இராஜாக்களை ஏற்படுத்தினதைக் கண்டிக்கிறார் தீர்க் கன்.

''தங்களுக்கு விக்கிரகங்களைச் செய்தார்கள்'' (4-6). அவர்கள் மத்தியில் வெகுவாய்க் காணப்பட்ட விக்கிரகா ராதனையையும் தாக்குகிறார்.

''சூறாவளியை அறுப்பார்கள்'' (7-12). மேற்கூறிய பாவங்களுக்கு இயல்பான பலனாகச் சீக்கிரம் உண்டாகும் தண்டனையைச் சற்று வர்ணிக்கிறார். உதாரணமாக, இஸ்ரவேலர் ஏனைய குலத்தார்கள் மத்தியில் சிதறுண்டு போவார்கள்! (வச. 8; 9:17). மற்ற குலத்தார் இவர் களை வெறுப்பார்கள் (8). இவ்விரு சொற்களும் பூரண மாகவே நிறைவேறினவல்லவோ?

''காட்டுக் கழுதை'' (9). யோபு 39:5-12 ஐக் காண்க. ஆண்டவர் தமது மக்களின் முரட்டுக் குணத் துக்கு உவமானமாக இந்த உருவகத்தைப் பயன்படுத்து கிறார் (எரே. 2:24). இது நமது முரட்டுப் புத்தியையும் எவ்வளவு சரியாகக் காட்டுகிறது! ''அசீரியாவுக்குப் போனார்கள்'' (மேலே 7:8,11, 12 இன் குறிப்புகளைக் காண்க).

''பலிபீடங்களைப் பெருகப் பண்ணினார்கள்'' (11). ஓசியா அசுசியான பாவங்களுக்கு ஏதுவான பாகாலின் கன்றுக்குட்டி வணக்கத்தை எதிர்க்கிறார் (1 இரா. 12:28:30).

''எகிப்துக்கே திரும்பிப் போவார்கள்'' (13). 9:3, 6;11:5 ஒடு ஒத்திட்டுப்பார்க்க. அசீரியாவுக்கு மட்டுமல்ல, எகிப்துக்கும் சிறைப்பட்டுப் போவோர்கள். எகிப்து தேசச் சிறையிருப்பபைக் குறித்து நாம் வேதத்தில் அதிகம் படிக்கிறதில்லை எனினும். 1 இரா. 14:25-28; 2 இரா. 23:33-35; 25:25, 26ஐக் காண்க.

''கோவில்களைக் கட்டுகிறான்'' (14, ப.தி.). இஸ்ரவேல் நாட்டார் தங்கள் சுவாமிகளுக்குப் பல கோயில்களைக் கட்டினது யெகோவாவுக்குக் கடுங்கோப மூட்டினது (5). ''அரணான பட்டணங்களை.'' கடவுள் தன்னைத் தண்டியாதபடி ஒருவன் தன்னைப் பலப்படுத்திக் கொண்டாலும் அவன் அந்தத் தண்டனைக்குத் தப்பான்.

3. நிச்சயமாக உண்டாகும் தண்டனை-9:1-11:11.

அ. சிறையிருப்பு நிச்சயமான நிகழ்ச்சி-9:1-17.

இந்தத் தீர்க்கதரிசன வாக்கியங்கள் அறுப்புக் காலத்தில் எழுதப்பட்டதாகத் தோன்றுகிறது (1). இஸ்ரவேல் நாடு மிகவும் நீர்வளமும் நிலவளமுமானது. மக்கள் அறுவடை காலத்தில் அகமகிழ்ந்து, இந்துக்கள் தற்காலம் பொங்கல் வைக்கிறதுபோலத், தாங்கள் வணங்கிவந்த பாகால்களுக்குப் பலிசெலுத்துவார்கள். தீர்க்கன் அதை கண்டு, சீக்கிரம் உண்டாகப்போகும் அழிவைக் கூறி, மகிழ்ச்சியாயிருக்க இடமில்லை என்பதாக மக்களை உணர்த்தப் பார்க்கிறார்.

''தானியக் களமும் திராட்சத் தொட்டியும் அவர்களைப் பிழைப்பூட்டுவதில்லை'' (2). இஸ்ரவேலர் தாங்கள் நடப்பித்த ஆத்தும வேசித்தனத்துக்கு ஆதரவாகத் தானியம் முதலியவற்றைப் பயன்படுத்தியபடியால் கடவுள் பஞ்சத்தினால் அல்லது சத்துருக்களின் தாக்குதலினால் அவர்களுடைய தானியத்தை எடுத்துப்போடுவது அவசியமாயிற்று.

''கர்த்தருடைய தேசத்தில் குடியிருப்பதில்லை'' (3-6). இவர்கள் எகிப்துக்கும் அசீரியாவுக்கும் சிறைப்பட்டுப்போவதாகத் திரும்பவும் கூறுகிறார். அப்பொழுது அவர்கள் விக்கிரகக் கோயில்கள் பாழாய்ப்போம்.

''தண்டனை நாட்கள்....பழிவாங்கும் நாட்கள்'' (7,8). யூதேயா நாட்டார் எரேமியா தீர்க்கனை இம்சைப்படுத்தினர். அதைபோல இஸ்ரவேலர் ஓசியாவைத் துன்பப்படுத்தி அவரைப்பற்றிக் கேவலமாய்க் பேசினர். ஆகவே, அவர் அவர்களுக்குத் தமது அதிகாரத்தை உறுதி படுத்துகிறார் (8). இவ்வசனம் சற்றுக் கருகலானது. ஆனால் மூலமொழிப் பிரதிகளின் கருத்தாவது: கடவுளையும் அவரது ஊழியனையும் பகைக்கிறவர்கள் தீர்க்கனை மடக்கி வதைக்கும் பொருட்டுத் தேவாலயத்திலும் ஏனைய இடங்களிலும் பதிவிருக்கின்றனர் என்பதேயாகும்.

''கிபியாவின் நாட்களில்'' (9). நியா. 19இல் விவரித்திருக்கும் பயங்கரமான நிகழ்ச்சிகளை நினைத்து ஓசியா இவ்வாக்கியத்தை எழுதலானார் போலும் (10:9 ஐயும் காண்க).

''திராட்சைக் குலைகளைக் கண்டாற்போல இஸ்ரவேலைக் கண்டுபிடித்தேன்'' (10-17). ஆண்டவர் இஸ்ரவேலைத் திராட்சச் செடிக்கும் அத்திமரத்துக்கும் ஒப்பிட்டுப் பேசுகிறார். மக்கள் அத்திமரத்தில் முதல்தரம் பழுத்த கனியில் பிரியப்படுவதுபோல அவர் இந்தக் குலத்தாரில் பிரியப்பட்டுத் தமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளத் தெரிந்துகொண்டார் (10). ஆயினும், இவர்கள் கனி கொடாமல் வேர் அற்றுப்போன மரத்தைப்போல ஆனார்கள் (வச. 16; ஏசாயா. 5:1-7 முதலியன). 10 வாக்கியத்தின் பிற்பாகம் எத்தனை பயங்கரமானது! சங். 115:8ஐ நன்கு கவனிக்க.

''அவர்களுக்குள் பிறப்பதுமில்லை....'' (11). மக்கள் செய்துவந்த அசுத்த பாவங்களின் இயற்கையான விளைவைக் கொண்டு கடவுள் அவர்களைத் தண்டிப்பார் (14). மேலே 6:11இன் குறிப்புக்களைக் காண்க.

''என் கடவுள் அவர்களைத் தள்ளிவிடுவார்'' (17). இஸ்ரவேலர் உலகமெங்கும் சிதறுண்டு போவதைத் திரும்பவும் அறிவிக்கிறார் (8:7-12).

ஆ. விதைப்பும் அறுப்பும்–10:1-15.

தீர்க்கதரிசி பின்னும் இஸ்ரவேல் நாட்டாரின் அக்கிரமத்தையும் அதன் தண்டனையையும் கூறுகிறார்.

''பலனற்ற திராட்சச் செடி'' (1 ப. தி.). திராட்சச் செடி உவமானத்தைத் திரும்பப் பயன்படுத்துகிறார் (9:10-17). இந்தச் செடி எந்த நற்கனியையும் கொடுக்கவில்லை. ஏனெனில், இஸ்ரவேலர் வாழ்வடைய முன்னிலும் அதிகமாக விக்கிரக வணக்கஞ் செய்தனர்.

''அவர்கள் பலிபீடங்களை இடித்து.......'' (2). யெகோவா இவர்கள் விக்கிரகங்களாகிய கன்றுக் குட்டிகளை மட்டுமல்ல, அவர்கள் மேடைகள் முதலானவைகளையும் நிர்மூலமாக்குவதாக கூறுகிறார். (வச. 5, 6, 8ஐயும் காண்க).

''அதன் அரசன் நீர் நுரைபோல் ஆனான்'' (7). யுத்தம் எழும்பும், அப்பொழுது இஸ்ரவேல் நாட்டின் அரசன் நீர் குமிழியைப்போல முற்றிலும் ஒழிந்து போவார் (வ. 13; 13:11). அவ்வாறே ஓசியா இராஜாவின் சந்ததியாரில்லாமலே நீக்கப்பட்டார் (2 இரா. 17:1-6).

''எங்களை மூடுங்கள்'' (8). பாவத்தின் முடிவு எவ்வளவு மோசமானது! இந்த வார்த்தைகள் லூக்கா 23:30இலும் வெளி. 6:16இலும் எழுதியிருப்பதை நன்கு கவனிக்க.

''நீதியைக் கருதி விதையுங்கள்'' (12). இந்த மிகவும் துக்ககரமான பாகத்தில் எதிர்பாராத இடத்தில் கண்ட விலையுயர்ந்த புதையல்போல, இவ்வசனம் வெகு

அருமையானது. இந்தத் திவ்விய ஏவல்களின்படி நடக்கும் யாவரும் நல்ல நிலத்தில் விதைத்த விதையைப்போல இருப்பார்கள் என்பது உறுதியாகும்.

இ. கடவுளின் இரக்கம் வெற்றி பெறல்-*11:1-11.*

இவ்வாகமத்தின் முற்பாகங்களில் (முக்கியமாக 2அ, ஆ, இ, இல்) இஸ்ரவேலர் தெய்வீக அன்பை அலட்சியஞ் செய்து தங்களைப் பரம நேசத்தால் நேசித்த ஆத்தும நாயகராகிய யெகோவாவுக்குத் துரோகம் பண்ணினதே அவர்கள் செய்த பிரதான பாவம் எனப் படித்தோம். பிந்திய பாகங்களில் ஓசியா அப்பாதகத்தை மக்களுக்கு உணர்த்தும் பொருட்டுக் கடவுள் இஸ்ரவேலை எக்காலமும் நேசிப்பதாகக் கூறுகிறார். உதாரணமாக, அவர் கடந்த காலத்தில் அவளை நேசித்தது வச. 1இல் காணப்படுகிறது; நிகழ்க்காலத்தில் அவளை நேசிக்கிறதை *12:9; 13:4* இனால் காண்கிறோம்; எதிர்காலத்தில் அவளை நேசிப்பதாக *13:14; 14:4-7* இன்மூலம் கூறுகிறார்.

''இஸ்ரவேல் இளைஞனாயிருந்தபோது'' *(1).* இவ்வாக்கியத்திலும் இதற்குப் பின்வரும் வசனங்களிலும் கடவுள் தம்மை இஸ்ரவேலின் தகப்பன் என்பதாகவும் தாம் அவனைப் பரம நேசத்தால் வளர்த்ததாகவும் கூறுகிறார். அவனோ தன் நேசப் பிதாவை விட்டுப் பாகால்களை வணங்கி வந்தான். ஆகவே அவனைச் சிட்சை செய்வது அவசியமாயிற்று.

''நான் உன்னை எப்படிக் கைவிடுவேன்?'' *(8-11).* தமது மக்களை ஆண்டவர் முற்றிலும் அழிக்காமல், அவர்களிடம் இரங்குவதாக வாக்களிக்கிறார். அவர் தமது எண்ணத்தை மாற்றக்கூடிய மனிதனைப் போலிராமல் பொய்யுரையாத கடவுளாயிருப்பதினால் தமது நித்திய தீர்மானத்தின்படியே இஸ்ரவேலை முடிவு பரியந்தமும் ஆசீர்வதித்துக்கொண்டேயிருப்பார். ஆண்டவர்

தம்மை இவ்வாகமத்தில், தமக்கு விரோதமாக நடப்பவர்களைப் பீறிப்போடும் சிங்கத்திற்கும் தம்மிடம் திரும்புவோருக்குத் துணை நின்று கெர்ச்சிக்கும் சிங்கத்திற்கும் ஒப்பிட்டிருத்தலைக் கவனிக்க (வச. 10; 5:14; 13:17). மீண்டும், உலகமெங்கும் சிதறுண்டுபோகும் இஸ்ரவேல் குலத்தார் திரும்பி வருவதை ஒரு பட்சி தன் கூட்டுக்குப் பறந்துவரும் பாவனையாக எழுதுகிறார் தீர்க்கன் (ஏசாயா 60:8). ''உன் நடுவிலுள்ள பரிசுத்தர்'' (9). ஏசாயா 12:6; எசே. 28:22; யோவேல் 2:27; செப். 3:15,17; சக. 2:10, 11ஐக் காண்க.

4. கடவுள் இஸ்ரவேலைக் கண்டித்தல் 11:12-13:16.

அ. இஸ்ரவேலின் துரோகமும் யாக்கோபின் பக்தியும் -11:12-12:14.

''யூதா இன்னும் தன் இஷ்டப்படி நடக்கிறான்'' (11:12). யூதேயா நாட்டாரும் கண்டிக்கப்பட வேண்டிய பாவங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்கிறார் (4:15; 5:5-15; 8:14ஐக் காண்க).

''க்ர்த்தராகிய அவர்'' (12:5). யாத். 3:14,15; 6:3ஐக் காண்க. நித்தியரும் மாறாதவருமாகிய யெகோவா இஸ்ரவேலரோடு உடன்படிக்கை செய்த நாதர்.

''நீ உன் கடவுளிடம் திரும்பு'' (12:6). மேலே 6:1இல் காணப்பட்ட மனந்திரும்புதல் போதாது (6:1-3 ஐப்பற்றிய குறிப்புக்களைக் காண்க). யாக்கோபுக்கும் (வ. 2-4) அவர் சந்ததியாராகிய உங்களுக்கும் பெருத்த வித்தியாசமுண்டு. அவரது பக்தியை நினைத்துக்கொண்டு கர்த்தரிடம் திரும்புங்கள் என்கிறார் தீர்க்கன். ஓசியா இந்த வார்த்தைகளை உரைத்த காலத்தில் அவரது விருப்பம் ஒன்றே; அதாவது, இப்பொழுதாவது இஸ்ர

வேலர் தங்கள் ஆத்மநேசரிடம் திரும்பவேண்டும் என்பதே யாம்.

''கள்ளத் தராசு'' (12:7). கடவுள் தமது இஸ்ரவேலை நீடுழி காலம் நேசித்து வருகிறபடியால் அவர் அவனை முற்றுமாய்க் கைவிடச் சம்மதியார் (11:8). என்றாலும், அவன் பாவத்தை அவர் பாராமல் விடவில்லை. உண்மையான அன்பு ஒருகாலும் பாவத்திற்கு இடங்கொடுத்து அது சம்பந்தமாக இளக்காரமாயிருக்க முடியாது. ஆகையால் ஆண்டவர் இஸ்ரவேலின் ஒவ்வொரு பாவத்தினிமித்தமும் அவனைக் கண்டிக்கிறார். இவ்வசனத்தில் குறிப்பிட்டிருக்கும் பாவத்தை ஆமோஸ் என்பவரும் கண்டனம் பண்ணினார் (ஆமோ. 8:5).

''திரும்பவும் உன்னைக் கூடாரங்களில் தங்கச் செய்வேன்'' (9). முற்காலத்தில் இவர்களை நேசித்த யெகோவா நிகழ்க்காலத்திலும் நேசிக்கிறதாகக் கூறுகிறார். கடவுள் இஸ்ரவேலரைக் கைவிடாமல் அவர்களுடன் உடன்படிக்கை செய்த தேவனாகவே இருக்கிறார் (13:4). ஆயினுன், திவ்விய நேசத்தை இழிவாகக் கருதினர் இஸ்ரவேலர்.

ஆ. விரைவாகவும் நிச்சயமாகவும் உண்டாகும் அழிவு -13:1-16.

''அவன் பாகாலினால் குற்றத்திற்குள்ளாகி மடிந்து போனான்'' (1). தண்டனையாகிய அழிவு சீக்கிரத்தில் வரும் என்று தீர்க்கன் உரைப்பதை விட்டு, அவ்வழிவு ஆரம்பமாயிற்று என்று சாதிக்கிறார். விக்கிரக வணக்கத்தின் விளைவாக உண்டாகப்போகும் ஆத்மீக மடிவும் அரசியல் மடிவும் தீர்க்கதரிசியின் மனக்கண்ணுக்கு மிகத் தெளிவாய்த் தெரிந்தபடியால் அவைகளை நடந்த சம்பவமாகவே பாவிக்கிறார்.

''அதிகமதிகமாய்ப் பாவஞ்செய்கிறார்கள்'' (2). மக்கள் நடப்பித்த விக்கிரக வணக்கத்தை ஓசியா விவரித்

துச் சொல்லி அதனிமித்தம் அவர்களைப் பகடிபண்ணு கிறார். இவற்றைப்போன்ற பரிகாச மொழிகளைச் சங். 115:4-8 இலும், ஏசாயா 44:10-17 இலும் காண லாம். மனிதர் அருவருக்க வேண்டிய கன்றுக்குட்டி சுவாமிகளை முத்தமிட்டனர் (பு.தி.).

''காலையில் காணும் மேகத்தைப் போலவும்'' (3). மேலே, 6:4 இன் பேரிலுள்ள குறிப்புக்களைக் காண்க.

''எகிப்து தேசத்திலிருந்து உன்னை அழைத்து வந்த உன் கடவுளாகிய கர்த்தர் நானே'' (4,5). இவ்வார்த் தைகளைச் சொல்லி, ஆண்டவர் பிரலாபித்து, தம்மை விட்டு நீங்கின இஸ்ரவேலின் நன்றி கேட்டைத் திரும்ப உணர்த்துகிறார் (9:10; 11;1; 12:13).

''மேய்ச்சல் கிடைத்தபடியால் திருப்தியானார்கள்'' (6). லௌகீக வாழ்வு வைதீக தாழ்வுக்கு ஏதுவாகிறது வழக்கமே (12:8, உபா. 32: 15; மத். 19:24 முதலியன).

''சிங்கம்.... சிவிங்கி....கரடி'' (7,8). மேலே 11:8-11 ஐப் பற்றிய குறிப்புகளைக் காண்க.

''இராஜாவைக் கொடுத்தேன்'' (11). மேலே 10:7 ஐப் பற்றிய குறிப்புகளைக் காண்க.

''அவர்களை நான்.... நீங்கலாக்கி மீட்பேன்;.... விடு விப்பேன்'' (14 ப. தி.), இஸ்ரவேலரைக் கடந்த காலத் தில் நேசித்த யெகோவா தற்காலமும் அவர்களை இன் னும் நேசிக்கிறார்; அதுவுமன்றிக் கடைசி பரியந்தமும் அவர்களை நேசிப்பதாக உறுதி கூறுகிறார். இது சம்பந்த மாக 14:4 ஐயும் யோவான் 13:1 ஐயும் காண்க பாதாள மாவது வேதாளமாவது அவ்வன்பை வெல்லவும் அழிக்க வும் கூடாதே (ரோமர் 8:38,39). இஸ்ரவேல் மக்களின் பாவத்திற்கு விளைவாக அவர்களது அரசியல் எப்படியும் அழிந்து போவது அவசியமாயினும், ஆண்டவர் மர

ணத்தையும் பாதாளத்தையும் தாங்கள் செய்யக்கூடியதைச் செய்ய அறைகூவுகிறார். இவை தங்களாலியன்ற மட்டும் இஸ்ரவேலை அழிக்க முயன்றாலும் தேவகிருபை அவற்றை வென்று காப்பாற்றும். ஓசியா கடவுளது அன்பின் மகத்துவத்தை அதிசயவண்ணம் அறிந்துணர்ந்தார். அதுபோன்று, அதற்குப் பிந்திய காலத்தில் (அருள் நாதர் உயிர்த்தெழுந்த பின்) பவுல் அப்போஸ்தலன்: ''மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?'' நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெபங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்'' என்று ஆர்ப்பரிப்புடன் கூறினார் (1 கொரி. 15: 55, 57). ''நான் மனம் மாறி இரக்கம் காட்டேன்'' (ரோமர் 11: 29ஐக் காண்க). கடவுள் மனம் மாறுகிறவரல்லர் என்பது பொருள்.

5. மனந்திரும்புதலும் முன்னிலையைத் திரும்ப அடைதலும்—14:1-9.

''உன் கடவுளாகிய கர்த்தரிடம் திரும்பு.'' ''கர்த்தரிடம் திரும்புங்கள்'' (1,2). தம் மக்கள் சீரடைவதாக ஓசியா வேளாவேளையில் நம்பினார் (11:8-11;13:14 முதலியன). இந்தக் கடைசி அதிகாரத்தில் அவர்கள் சம்பந்தமாக அவர் முழு நம்பிக்கையுமுள்ளவராகக் காணப்படுகிறார். அந்நம்பிக்கைக் கொண்டு அவர் மிகவும் அன்பார்ந்த வார்த்தைகளால் அவர்களை மனந்திரும்பச் சொல்லுகிறார்.

''அசீரியா....குதிரைகள்....தேவர்கள்'' (3). இந்தப் பதங்கள் இஸ்ரவேலின் முக்கியமான மூன்று பாவங்களைக் குறிக்கின்றன. அவையாவன: (1) அசீரியாவை நம்பிச் சார்ந்தது; (2) குதிரைகள் கிடைக்கக்கூடிய நாடாகிய எகிப்து தேசத்தை நம்பிச் சார்ந்தது; (3) விக்கிரக வணக்கம் என்பவைகளே.

''குணமாக்குவேன்;'' ''மனதார அன்புகூறுவேன்;'' ''இஸ்ரவேலுக்குப் பனிபோலிருப்பேன்'' (4-7). இந்தக் கிருபார்ந்த வாக்குறுதிகளைக் அளித்துத் தமது தீர்க்க தரிசன ஆகமத்தை முடிக்கிறார் ஓசியா (சங். 110;3; 133;3; நீதி. 19: 12ஐக் காண்க).

இவ்வாகமத்தின்மூலம் தெய்வீக அன்பின் அதிசய பண்பும் அவ்வன்பை அலட்சியஞ் செய்தலாகிய பாவத்தின் அகோரமும் பலவாறாக விளங்குகின்றன. நண்பர்களே! ஓசியாவின் ஆகமத்தைப் பக்தியுடனும் கவனத்துடனும் படிக்கும் எவறும் தங்கள் பாவமான தன்மையையும் செய்கைகளையும் அருவருத்து அன்பு மயமான அருள்நாதரைப் பற்றிக் கொள்வர் என்பது உறுதி. நீங்கள் அவ்வாறு செய்வீர்களா (ஏசாயா 1:18ஐக் காண்க)?

4

யோவேல்

முன்னுரை

எழுத்தாளர்-1:1.

யோவேல் என்கிற பெயருக்கு ''யெகோவா கடவுளாயிருக்கிறார்'' என்று அர்த்தமாம். சத்திய வேதத்தில் இப்பெயர் கொண்ட 15 வெவ்வேறு ஆள்களைப்பற்றி எழுதியிருப்பதால் இந்தப் பெயர் யூதருக்கு அதிகப் பிரியம் என அறியலாம் (தமிழ் வேதாகம ஒத்த வாக்கிய அகராதி பக்கம் 405ஐக் காண்க). இவரது பெயரின் பொருளும் இவர் இயற்றிய நூலின் முக்கியமான போதனையும் ஒன்றே என்பது கவனிக்கத்தக்க பொருளாகும் (கீழே இயற்றிய நோக்கம் என்பது என்னும் தலைப்பின் அடியிலுள்ள குறிப்புகளைக் காண்க). இவரது தகப்பன் பெயரைத் தவிர இவரின் வாழ்க்கையையாவது குலத்தாரையாவது குறித்து நமக்கு ஒன்றும் தெரியாது. ஆண்டவர் தமது தாசராகிய இவர்மூலம், தமது தூதை மக்களுக்குத் தெளிவுற வெளிப்படுத்தும் நோக்கமுடையவராய், வேண்டுமென்று அவரை மறைத்து வைத்தார் போலும். எனினும், யோவேல் தீர்க்கனைப்பற்றிப் பின்வருபவைகளை அனுமானிக்கலாம்.

1. இவர் ஆசாரியரில் ஒருவர் என்று பலர் அபிப்பிராயங்கொள்ளுகின்றனர். ஏனெனில், இவர் ஆசாரியர், அவர்களின் திருப்பணி, தேவாலயம் ஆகியவை சம்பந்தமாகப் போதிய அறிவும் அனுபோகமுடையவராக எழுதினார் (1:9,13, 14, 16; 2:1,14,15,17, 3:17,21).

2. மேற்குறிப்பிட்ட வாக்கியங்களிலும் வேறு சில வசனங்களிலும் எருசலேமையும் சீயோனையும் குறித்து யோவேல் எழுதியபடியால் இவர் யூதேயா நாட்டானும் எருசலேமிலாவது அதற்கு அருகிலாவது வசித்தவனுமாயிருந்ததாக உத்தேசிக்க வேண்டியது. இவரது ஆகமத்தில் வடநாட்டையாகிலும் அதற்குரிய எதையாகிலும் குறித்து ஒன்றும் காணப்படுகிறதில்லை என்பதும் இதற்குப் பொருத்தமாகும். எனவே, இவர் தென்னாட்டாராகிய யூதேயா இராஜ்யத்தாருக்கு எழுதினார் என்பது உறுதியாகும்.

3. யோவேல் என்பவர் கல்வி, ஞானம், திறமை வாய்ந்தவர் என நிதானிக்க இடமுண்டு. எப்படியெனில், அவர் இயற்றிய நூல் அதிகச் சுருக்கமாயினும் எளிதாக விளங்கக்கூடியதும் வாசிப்போரின் கவனத்தைக் கவர்ந்து கொள்ளக்கூடியதுமான நூலாகும். மேலும் இது தன் பொருளைக் குறிப்பும் விவரமுமாக எடுத்துரைக்கும் மிகவும் முக்கியமான ஓர் ஆகம உறுதியாகும்.

இயற்றிய காலம்

சுமார் கி.மு. 900—850இல் யோவேல் இதை எழுதினார்போலும். யூதேயா நாட்டார் சிறைப்பட்டுப் போனதாக இவ்வாகமத்தில் ஒரு குறிப்பும் காணப்படாமையால் இது பாபிலோன் சிறையிருப்பின் காலத்திற்கு முன்னரே இயற்றப்பெற்றதென நினைக்கத் தகும். ஆதிமுதற்கொண்டு திருச்சபையில் வழங்கிவரும் பாரம்பரியமும் அவ்வாறே கூறுகிறது. தற்கால வேத சாஸ்திரிகளில் பலர் சிறிய தீர்க்கதரிசன நூல்களில் யோவேலின் ஆகமமே முதன் முதல் எழுதப்பெற்றது என்பர். எனவே, இவர் ஏசாயா தீர்க்கனின் காலத்துக்குச் சற்று முந்தி அல்லது அவரது வாலிபக் காலத்தில் வாழ்ந்தார் என்பதாகக் கூறலாம்.

இயற்றிய சமயம்

எண்ணிறந்த வெட்டுக்கிளிகளும் மழைத்தாழ்ச்சியினாலுண்டான பஞ்சமும் யூதேயா நாட்டை வாதித்த சமயம் *(1:4, 10, 17 முதலியன)*.

இயற்றிய நோக்கம்

1. மக்கள் தீமையைவிட்டு நன்மையையே நடப்பிக்கும்படி ஏவிவிடும் நோக்கம்.

2. வெட்டுக்கிளிகளுண்டாக்கிய அழிவு, பஞ்சம் ஆகியவை ஆண்டவர் தம் மக்களைச் சிட்சை செய்யும் கருவிகள் என்று யூதேயா நாட்டாருக்கு உணர்த்தும் நோக்கம். ''கர்த்தருடைய நாள்'' என்னும் சொல் இவ்வாகமத்தில் ஐந்து முறை காணப்படுகிறது கவனிக்கத்தக்க பொருளாகும்.

3. சமீபக் காலத்தில் நடந்த சம்பவங்களைக் கொண்டு மக்கள் ஞானமடைந்து ஆண்டவரிடம் திரும்பாவிடில் அந்த நிகழ்ச்சிகளைக் காட்டிலும் இன்னும் அதிக பயங்கரமான வாதைகள் உண்டாகும் என்பதை உணர்த்துவது நோக்கம். ''கர்த்தருடைய நாள்'' யுத்தம் எழுப்பும் நாளாயிருக்கும் என்கிறார்.

4. யுத்தத்தினால் வாதிக்கப்பட்டும் மக்கள் இன்னும் உணராதிருந்தால் சகல நாள்களையும் எல்லா சம்பவங்களையும்விட மகா பயங்கரமான கடைசி நாள் ஒன்று வரும். அதுவும் ''கர்த்தருடைய நாள்'' எனப்படும். அந்நாளில் ஆண்டவர் பாவிகளைத் தண்டித்து அழித்தே போடுவார் என்கிறார் யோவேல். இச்சத்தியத்தை மக்களுக்கு உணர்த்துவதும் தீர்க்கதரிசியின் நோக்கம்.

இவ்வண்ணமாக யெகோவா மக்களை ஆளவும் நியாயம் விசாரிக்கவும் அதிகாரமுடைய கடவுள் என்றும் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு அவற்றை விட்

டோய்ந்து நடப்போரை ஆசீர்வதிக்கும் கருணைநாதர் என்றும் போதிப்பதே இந்நூலின் முக்கிய நோக்கங் களாகும்.

இயற்றப் பெற்றவர்கள்

ஆசாரியர்கள், அதிகாரிகள், பொதுமக்களாகிய யூதேயா நாட்டாருக்கு யோவேல் தமது ஆகமத்தை எழுதலானார். மேல்போங்காக இவர்கள் பக்தியுள்ளோர் எனச் சொல்லலாம். இவர்களது இருதயமோ ஆண்டவருக்குத் தூரமாய் விலகியிருந்தது (யோவேல் 2:13; ஏசாயா 29:13).

இவ்வாகமத்தில் முன்னறிவிக்கப்பட்டிருக்கும் இரு மிகவும் முக்கியமான நிகழ்ச்சிகள்

1. இரட்சகர் பரமேறினபின் தமக்குப் பதிலாகத் திருச்சபைக்கு அருளப்போகும் பரிசுத்த ஆவியானவர் அதிசயவண்ணம் வருஷிக்கப்படுவது இவ்வாகமத்தில் திட்டமாகவும் விவரமாகவும் முன்னறிவித்திருக்கிறது (2:28, 29; அப். 2:16-21ஐக் காண்க).

2. கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குச் சம்பந்தமான பல சம்பவங்கள் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன (2:31,32; 3:1-21).

புதிய ஏற்பாட்டில் கூறியிருக்கிற யோவேலின் தீர்க்கதரிசன வாக்கியங்கள்

1. பரிசுத்த ஆவியானவர் இறங்கி வருதலைப்பற்றியவை (2:28, 29). அப். 2:17-21இல் காணப்படும்.

2. யோவேல் 2:33 (அப். 2:21). இவ்வாக்கியத்தைப் பவுல் அப்போஸ்தலன் ரோமர் 10:13இல் கூறியிருக்கிறார்.

பிரிவுகள்

1. சரித்திரம்-1:1-2:17.

அ. முன்னுரை-1:1.

ஆ. உண்டான வாதை, வெட்டுக்கிளிகள்-1:2-12.

இ. ஆசாரியர் மனந்திரும்ப வேண்டுமென்றேவல்-1:13-20.

ஈ. உண்டாகப்போகும் வாதையுத்தம்-2:1-11.

உ. மக்கள் மனந்திரும்ப வேண்டுமென்றேல்-2:12-17.

2. முன்னறிவிப்பு-2:18-3:21.

அ. ஆண்டவர் சீக்கிரம் அருளப்போகும் ஆசீர்வாதம்-2:18-27.

ஆ. ஆண்டவர் பிற்காலத்தில் அருளப்போகும் ஆசீர்வாதம்-2:28-32.

இ. கடவுளின் சத்துருக்கள் கடைசி நாள்களில் அழிக்கப்படல்-3:1-21.

விளக்கவுரை

1. சரித்திரம்-1:1-2:17.

அ. முன்னுரை-1:1.

''பெத்தூவேலின் குமாரன் யோவேல்'' முன்னுரை, எழுத்தாளர் என்னும் தலைப்புகள் காண்க.

ஆ. உண்டான வாதை வெட்டுக்கிளிகள்-1:2-12

''முதியோரே, இதைபற்றி உங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லுங்கள்'' (2,3) தங்கள் நாட்டில் முன் ஒருகாலும் நடவாத மகா பயங்கரமான அழிவு கொஞ்சக் காலத்

திற்கு முன்னே உண்டானபடியால் முதியோர் அதனால் உணர்வடைந்து பின்னடியாருக்கு அதையும் அதன் காரணத்தையும் தெரிவிக்குமாறு தீர்க்கன் ஏவுகிறார்.

''பச்சைப்புழு.... வெட்டுக்கிளி.... பச்சைக்கிளி ... முசுக் கட்டைப்பூச்சி'' (4). இப்படி மொழிபெயர்த்திருக்கும் நான்கு எபிரெய பதங்கள் நாலு வகையான வெட்டுக்கிளி களைக் குறிக்கின்றன என்று வேத சாஸ்திரிகள் நிதானிக் கின்றனர். இந்த மூலமொழி பதங்களின் அர்த்தங்கள் இன்னின்னதெனத் திட்டமாய்க் கூறுவது சாத்தியமன்று. எனினும், அவை கோடானுகோடியாய் யூதேயா நாட்டில் இறங்கிச் செடி, மரம் முதலியவைகளின் தழையை முற்றி லுமாகப் பட்சித்துப் போட்ட பூச்சிகளைக் குறிக்கின்றன என்பது உறுதியாகும். நமக்குத் தெரிந்தமட்டில் வெட்டுக் கிளிகள் மட்டுமே அவ்வாறு செய்யக்கூடியது. அதனால் மக்களுக்குச் சொல்லடங்காக் கஷ்டமும் நஷ்டமுமுண்டா யிருக்கும்.

''வெறியரே,....அழுங்கள்'' (5). யோவேல் என்பவர் வெறிகொள்ளல் என்கிற ஒரே பாவத்தினிமித்தம் தம் நாட்டாரைக் கண்டனம் பண்ணினார். ஆனால், அவர் கள் இனி குடிக்க முடியாது. ஏனெனில், திராட்சச் செடி கள் அழிந்துபோயின (7).

''ஒரு ஜனம்'' (9). வெட்டுக்கிளிகளினால் உண்டான வாதையை ஒரு பலத்த சேனை தேசத்தைத் தாக்கு வதற்கு ஒப்பிடுகிறார்.

''ஏன் திராட்சச் செடியை....என் அத்திமரத்தை'' (7). ஆண்டவர் யூதரைப் பயங்கர விதமாய்ச் சிட்சை செய்ய நேர்ந்த போதிலும் அவர் இன்னும் அவர்கள் சம் பந்தமாகச் சொந்தம் பாராட்டுவதைக் கவனிக்க (ஏசாயா 5:1-7ஐப் படிக்கவும்).

''ஆசாரியர்.... பயிரிடுவோர்........திராட்சத் தோட் டக்காரர்'' (9-12). இவ்வாக்கியங்களில் மூன்று வெவ்

வேறு வகுப்பார் துக்கங்கொண்டாட வேண்டுமாய்த் தீர்க்கன் ஏவுகிறார். அக்காலத்தில் நாட்டின் நிலைமைக்கும் 1 இரா. 4:25இல் கூறிய நிலைமைக்கும் எவ்வளவோ பெரிதான வேற்றுமையுண்டு! உண்டான மாறுதலுக்குக் காரணமேது?

இ. ஆசாரியர் மனந்திரும்ப வேண்டுமென்றேவல் -1:13-20.

தீர்க்கதரிசி தம் நாட்டிற்குண்டான அழிவை எவ்வளவு தெளிவாகவும் விவரமாகவும் வர்ணித்திருக்கிறார் என்பதை நன்கு கவனிக்க. இவ்வதிகாரத்திலும் 2-ஆம் அதிகாரத்திலும் இவர் வெட்டுக்கிளிக் கணங்கள் தேசத்தைப் பாழ்ப்படுத்தினதைப்பற்றி எழுதியது போன்று இத்தனை தெளிவான வர்ணிப்பு உலகத்திலுள்ள வேறு எந்தப் புத்தகத்திலாகிலும் காணப்படுகிறதில்லை.

''என் கடவுளுக்கு....உங்கள் கடவுளின்'' *(13)*. தீர்க்கனது கடவுள் மக்கள் மனந்திரும்ப வேண்டும் என்கிறார்; ஆசாரியரோவெனில், அவர் பலிகளையும் காணிக்கைகளையும் மட்டும் விரும்புகிறவர் என நினைக்கக் கூடியவர்களாயிருந்தனர். ''போஜனபலியும் பானபலியும் அற்றுப்போயின.'' இதை வச. 9 ஒடு ஒத்திட்டுப் பார்க்க; பஞ்சம் மிகவும் கொடிதாயிருந்தமையால் மக்கள் ஆசாரியரிடம் ஒப்புவிக்க வேண்டிய பலிசம்பந்தமான பொருள்கள் இல்லாமல் போயின. எனவே, தீர்க்கதரிசி கடவுளின் ஊழியரை ஜெபதபத்துடன் ஆண்டவர்முன் தங்களைத் தாழ்த்த வேண்டுமாய் ஏவுகிறார்.

''உபவாசத்தை நியமியுங்கள்'' *(14)*. ஆசாரியர் மக்களைக் கூடிவரச் செய்து ஆண்டவர்முன் மனஸ்தாபப்பட வேண்டுமென அவர்களை ஏவிவிடக்கடவர்.

''கர்த்தருடைய நாள்'' *(15)*. கர்த்தரின் நாள் எப்பொழுதுமே சமீபமாயிருப்பது யோவேலின் முக்கிய

மான தூதாகும். ஆண்டவர் தமது மக்களை அவர்களின் கீழ்ப்படியாமையினிமித்தம் சிட்சை செய்யும் பொருட்டுப் பல்வகை தொல்லைகளினால் வாட்டும் நாளெல்லாம் ''கர்த்தருடைய நாள்'' எனக் கூறுவது சரியாகும். ''கடவுள் விசாரணை செய்யும் நாள்'' என்பதும் ''கடவுள் (அவர்களைச்) சந்திக்கும் நாள்'' என்பதும் இதை போன்ற கருத்துடையன எனலாம் (ஏசாயா 10:3; 1 பேதுரு 2;12).

''பயிர் தீய்ந்துபோயிற்று'' (17). அதாவது, பயிரானது வெட்டுக்கிளிக் கணங்களினால் மட்டுமன்றி மழைத் தாழ்ச்சியினாலும் அழிந்துபோயிற்று. தமிழ் நாட்டில் சில ஆண்டுகளுக்கு முன்னே கொடிய பஞ்சம் உண்டாகி மக்கள் அதிகமாய் வருந்தினர். இச்சம்பவமானது கடவுள் நம்மை நமது பாவங்களினிமித்தம் சந்தித்து, விசாரித்துச் சிட்சித்து, மனந்திரும்ப வேண்டுமென்று ஏவுகிற நாளே யல்லாமல் வேறல்ல என்கிற உணர்வடைவோமாக (ஆமோஸ் 3:12; 2 சாமு. 24:12-14ஐக் காண்க).

''கர்த்தாவே'' (19). மேற்கூறியவாறு அவதிப்படும் மக்களுக்காக யோவேல் மன்றாடுகிறார்.

''நீரோடைகள் வறண்டுபோயின'' (20). இது கொடிதான மழைத்தாழ்ச்சியைக் குறிக்கும் (17).

ஈ. உண்டாகப்போகும் வாதை யுத்தம்-2:1-11.

''கர்த்தருடைய நாள்'' (1). இன்னொரு விசாரிப்பின் நாள் வரப்போகிறது. அது யுத்த நாளாயிருக்கும் என்கிறார் தீர்க்கன். முதலாம் அதிகாரத்தில் தாம் விவரித்த வாதையைத் திரும்பவும் இவ்வதிகாரத்தில் பின்னும் வெகு தெளிவுற எடுத்துக்காட்டிய நோக்கம் யாதெனில், இன்னொரு தாக்குதல் வரப்போகிறது என்பதை மக்களுக்கு உணர்த்துவதே நோக்கமாகும். இவ்வாக்கியங்கள் வெட்டுக்கிளி கணங்களின் தாக்கு

தலைமட்டுமின்றி ஒரு பட்டாளத்தின் தாக்குதலையும் குறிக்கக்கூடியவை என்பது கவனிக்கத் தகுந்த பொருளாகும். மேலும், வெட்டுக்கிளிகளின் உருவம் குதிரைகளின் உருவம்போலப் பார்வைக்குக் காணப்படுகிறது (4ஐக் காண்க). இதற்கு முந்தின தீர்க்கதரிசன வார்த்தைகளைப்போன்று இந்த வாக்கியமும் மக்கள் தங்களைக் கடவுள்முன் தாழ்த்தித் தங்கள் பாவங்களை விட்டுத் திரும்ப வேண்டுமாய் ஏவும்படி கூறப்பட்டது. ''கர்த்தருடைய நாள் என்னும் சொல் வச. 11, 31, ; 3:14இலும் காணப்படும்.

''அதற்கு முன்னாக அக்கினி பட்சிக்கும்'' (3). தேசம் வெட்டுக் கிளிகளினால் அடைந்த அழிவு எத்தன்மையுடையதெனில், நிலமானது அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதாகத் தோன்றிற்று (5ஐயும் காண்க).

''ரதங்களின் இரைச்சல்போல'' (5). வெட்டுக்கிளிகளின் இரைச்சல் மிகப் பயங்கரமாகவே இருந்தது.

''ஆயுதங்களுக்குள் விழுந்தாலும்'' (8). இவைகள் எண்ணிக்கையிறந்த வண்ணம் வந்தமையால் எந்த ஆயுதமாகிலும் அவற்றை மேற்கொள்ளுவதற்கில்லை என்பது இவ்வாக்கியத்தின் கருத்தாகும்.

''திருடன்போல உள்ளே நுழையும்'' (9). நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் அவர் சீடர்களும் கடைசி நியாயத்தீர்ப்பு நாளைக் குறித்துப் போதனை செய்தபோது இந்த வாக்கியத்தை நினைவில் வைத்திருப்பர் என்று அனுமானிக்கலாம் (மத். 24:43, 44;1தெச. 5:2; 2 பேதுரு 3:10; வெளி. 16:15ஐக் காண்க).

''பூமி....வானங்கள்....சூரியன்....சந்திரன்....நட்சத்திரங்கள்'' (10). இவ்வசனத்தின் கருத்து யாதெனில், வெட்டுக்கிளி வாதையும் யுத்தமாகிய வாதையும் இனி வரப்போகிற மகா பயங்கரமான கர்த்தருடைய நாள்

ஒன்றிற்கு முன்னடையாளமானவையாகும் என்பதே. *2:31*ஐயும் *3:15*ஐயும் நமது ஆண்டவர், மனுஷ குமாரன் திரும்ப வருவதற்குமுன் உண்டாகும் நிகழ்ச்சிகளைக் குறித்து லூக்கா *21:25-27*இல் கூறியதுடன் ஒத்திட்டுப் பார்க்க.

உ. மக்கள் மனந்திரும்ப வேண்டுமென்றேவல்-*2:12-17*.

வச. *11*இன் இறுதியில் கேட்ட கேள்விக்குப் பதிலுரைக்காமல் விட்டுவிட்டு மக்கள் அந்தப் பயங்கர மான கேள்வி தங்கள் சம்பந்தமாகக் கேட்கப்படாதபடி கர்த்தரிடம் உண்மையோடும் ஊக்கத்தோடும் திரும்பும் படி யோவேல் ஏவுகிறார்.

''அவர் திரும்ப மனமாறி...'' (14). மக்கள் மனஸ்தாபத்துடன் தங்கள் தீவினைகளை விட்டுக் கடவுளிடம் மனந்திரும்புகையில் அவர் அவர்களைத் தண்டிப்ப தாகக் கூறிய ஆக்கினை சம்பந்தமாக மனஸ்தாபமுற்று அவர்களை ஆசீர்வதிக்கும்படி அவர்களிடம் திரும்புவார் என்பது உறுதியாகும். இது எத்தகைய அருமையான உண்மையாகும்! யோனா *3:9*ஐயும் காண்க.

''பரிசுத்த உபவாசத்தை நியமியுங்கள், உற்சவத்தை அறிவியுங்கள்'' (15, 16). *1:14*ஐக் காண்க. மக்கள் தன்னந்தனி ஆள்களாக மட்டும் ஆத்மீகச் சீரடைவது போதாது. சிறுவர்கள் முதலாய் மக்கள் யாவருமே கூட்டங்கூடிக் கர்த்தரிடம் பாவ அறிக்கை செய்வதவசிய மாகும்.

''கர்த்தரின் ஊழியராகிய ஆசாரியார்.... அழுது'' (17). தேவனுடைய தாசர்கள் பக்தியுள்ள ஆற்றல்' களில், முக்கியமாக மெய்மனஸ்தாபம் காட்டுவதில் பொது மக்களுக்கு உத்தம முன்மாதிரி காட்டுவது அவகியமே யாகும்,

2. முன்னறிவிப்பு-2:18-3:21.

அ. ஆண்டவர் சீக்கிரம் அருளப்போகும் ஆசீர்வாதம்- *2:18-27.*

தம்மண்டை முழு இருதயத்தோடும் திரும்புகிறவர்களை ஆண்டவர் ஆவிக்குரிய வகையாக மட்டுமல்ல, அவர்களது நிலம் முதலாய் அவர்களுக்குரிய யாவற்றையும் ஆசீர்வதித்துச் செழித்தோங்கச் செய்வார் என்பது இப்பாகத்தினால் விளங்கும்.

''அப்பொழுது கர்த்தர் தமது தேசத்துக்காக வைராக்கியங்கொண்டு.... இரக்கங்காட்டினார்'' *(18).* கடவுளின் மக்கள் அனுபவித்த கொடிய இன்னல்களினிமித்தம் ஏனைய குலத்தார் அவர்களை நிந்தித்தனர் போலும் *(17).* ஆண்டவரே இதற்கு இடங்கொடாமல் உடனே தம் மக்களைத் தப்புவித்து ஆசீர்வதிப்பதாக வாக்களிக்கிறார். ''அப்பொழுது'' என்கிற பதம் மக்கள் தங்கள் பாவங்களைவிட்டுத் திரும்பி மனஸ்தாபப்படும் நாளைக் குறிக்கிறது. ''அப்பொழுது''தான் கர்த்தர் ஆசீர்வதிப்பார் என்பது யோவேலின் தூதாகும்.

''நான் உங்களுக்குத் தானியத்தையும் திராட்ச ரசத்தையும் எண்ணெயையும் கொடுக்கிறேன்'' *(19).* அதாவது, தேசமானது வாழ்வடைந்து ஏராளமான தானியம் முதலானவைகளை விளைவிக்கும் *(22, 25).*

''வடதிசைச் சேனை'' *(20).* இது அசீரியரின் சேனையைக் குறிக்கும். (வெட்டுக்கிளிகள் தென்திசையினின்று வந்தன).

''முன்மாரியைக் கொடுப்பார்....முன்மாரியையும் பின்மாரியையும்....வருஷிக்கப் பண்ணுவார்'' *(23).* இனி மழைத்தாழ்ச்சியிராது. ஏனென்றால், கர்த்தர் வருடத்தின் மூன்று மழைக்காலங்களிலும் போதுமான மழையை தந்தருளுவார் என்பது அர்த்தமாகும்.

''வெட்டுக்கிளிகளும்....பட்சித்த வருஷங்களின் விளைவையளிப்பேன்'' *(25)*. இது *1:4*க்கு எவ்வளவோ வேற்றுமையான சொல்! இது எத்தனை அருமையான அருள்வாக்காகும்.

ஆ. ஆண்டவர் பிற்காலத்தில் அருளப்போகும் ஆசீர்வாதம்- *2:28-32*.

பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு அப்போஸ்தலன் இந்த 5 வாக்கியங்களையும் எடுத்துரைத்தார் (அப். *2:1-14*). யோவேல் தீர்க்கன் இயற்றிய இவ்வார்த்தைகள் பரிசுத்த ஆவியானவர் திருச்சபையார்மீது இறங்கி வருதலை முன்குறித்தன என்பதாகத் திட்டமாய்க் கூறப் பேதுரு தேவ ஆவியால் ஏவப்பட்டார் என்பது உறுதியாகும்.

மக்கள் தங்கள் நாட்டிற்குப் பெரிதான ஆபத்து நேரிடும் காலங்களில் தங்கள் பாவங்களினிமித்தம் மனஸ்தாபப் படுவது போதாது; தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் மக்கள் நெஞ்சத்தில் தங்கவேண்டுவது அவசியம் என யோவேல் அறிந்து உணர்ந்தார் போலும். எனவே ஆவியானவர் அவ்வாறு ஆற்றப்போகும் சம்பவத்தை முன்னறிவிக்க இத்தீர்க்கன் ஏவப்பட்டார்.

''மனுமக்கள் யாவர்மேலும்'' *(28)*. யோவேல் என்பவர் யூதனாயினும், தேவ ஆவி யூதர்மீது மட்டுமன்றிச், சகல குலத்தார் மேலும் அமருவதாக வெளிப்படுத்தினது எவ்வளவோ அதிசயமான நிகழ்ச்சியாகும்.

''அடிமைகள் மேலும் அடிமைப்பெண்கள் மேலும்'' *(29)*. அந்தஸ்தும் அதிகாரமுமுடையவர்கள்மேல் மட்டுமல்ல, எளிமையுள்ளோரும் தாழ்ந்த வேலை செய்யும் பொது மக்களும் கடவுள் மகிமைக்கென வாழத்தக்கதாக அப்படிப்பட்டவர்கள் மேலும் அமருவார் என்பதாகக் கூறியிருப்பதைக் கவனிக்க.

இதை வாசிப்பவரே! பரிசுத்த ஆவியானவர் நமது தமிழகத்தார்மேல் வல்லமையாகவும் ஆசீர்வாதமாகவும் இறங்கும் நாளை ஆவலோடு எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறீரா? இந்த அவா கொண்டு ஆண்டவரிடம் மன்றாடிக் கொண்டேயிருக்கிறீரா? (அப். 2:1-5).

''வானத்திலும் பூமியிலும்...அற்புதங்களைக் காட்டுவேன்.'' ''சூரியன், சந்திரன்....மாறும்'' (30, 31). மேலே வச. 10ஐப்பற்றிய குறிப்பைக் காண்க. உண்மையில் மனந்திரும்பும் மக்களுக்குக் கர்த்தர் இயற்கையான ஆசீர்வாதங்களையும் ஆவிக்குரிய நன்மைகளையும் மிகுதியாய் அருளுவதாக யோவேல் கூறியபின் கடைசி நாளாகிய கர்த்தரின் பெரிதான நாளைக் குறித்து இவ்வாக்கியங்களில் எழுதியுள்ளார். அந்நாளில் தேவன் தம் சத்துருக்களுக்குப் பயங்கரமான அழிவு சடிதியாகவே உண்டாக்குவார் என்றும் மனந்திரும்பினவர்களுக்கோ மகிமையான இரட்சிப்பு அருளுவார் என்றும் தீர்க்கன் கூறுகிறதைக் கவனிக்க.

இ. கடவுளின் சத்துருக்கள் கடைசி நாள்களில் அழிக்கப்படல்-*3:1-21*.

தீர்க்கதரிசி, தாம் முந்திய மூன்று வாக்கியங்களில் சுருக்கமாய்க் குறிப்பிட்ட கடைசி நாள் சம்பவங்களை இப்பாகத்தில் சற்று விவரமாக வர்ணித்துள்ளார்.

''நான் சகல ஜாதிகளையும் கூட்டி'' (2). கடவுளின் ஜனமாகிய யூதரை ஒடுக்குகிற பல குலத்தார் கடைசி காலத்தில் பல தேசங்களினின்று வந்து கூடி, அவர்களோடு போர் புரிவர். அப்பொழுது கிறிஸ்து நாதர் சடிதியாக வந்து யூதரை விடுவித்து அவர்களின் எதிரிகள் யாவரையும் அழித்துப்போடுவார். அந்தக் கடைசி யுத்தமானது சொல்லடங்காப் பயங்கரமாயிருக்கும். ''யோசாபாத்தின் பள்ளத்தாக்கிலே.'' இந்தப் பள்ளத்தாக்கைப் பற்றி வச. 12 இலும் படிக்கலாம். வச. 14இல் இது

நியாயத்தீர்ப்பின் பள்ளத்தாக்கு என்னும் பெயரால் அழைக்கப்பட்டிருக்கிறது. இவ்விடம் எருசலேமுக்கு அருகிலுள்ளது. யோசாபாத் என்னும் பெயர் யெகோவா நியாயந்தீர்க்கிறார் என்று பொருள்படும். இந்தப் பொருளுக்கு ஏற்றவாறு கடவுள் இவ்விடத்தில் மக்களை நியாயந்தீர்த்துத் தண்டிப்பார் என்பது கவனிக்கத் தக்க பொருளாகும்.

''சீட்டுப்போட்டார்கள்'' (3). புறஜாதியார் தாங்கள் சிறையாக்கினவர்களைப் பட்டாளத்தாரிடம் ஒப்புவிப்பார்கள். அப்பொழுது சிப்பாய்கள் அவர்களைத் தங்கள் இஷ்டப்படி இம்சை செய்வர்.

''பெலிஸ்தியாவின் சகல நாடுகளே'' (4). இம்மொழி பெலிஸ்தியரின் நாட்டைக் குறிக்கும் போலும்.

''நீங்கள்.... எடுத்து'' (5). இது 2 நாளா. 21:16, 17 இல் கூறியிருக்கும் சம்பவத்தைக் குறிக்கும் எனலாம்.

''யவனரிடம்'' (6); ''கிரேக்கரிடத்தில்'' (ப.தி.). சீதோனியரும் தீருவின் குடிகளும் (4). யூதரான தங்கள் சிறைகளைக் கிரேக்கரிடம் விற்றுப்போட்டார்கள். அவர்கள் கப்பல் யாத்திரை செய்து பல நாடுகளுக்குச் சென்றபடியால் இவ்வாறு செய்ய அவர்களுக்கு வேண்டிய வாய்ப்பு இருந்திருக்கும்.

''ஷேபாவியரிடம்'' (8). இது எத்தியோப்பியா தேசத்திலுள்ள சேபா (ஷோபா) என்கிற நாட்டின் குடிகளைக் குறிக்கும். இவ்வாக்கியத்தின் கருத்தாவது, பெனிக்கேயரும் பெலிஸ்தியரும் சிறைப்பட்டு எகிப்து தேசத்துக்குத் தெற்கிலுள்ள எத்தியோப்பியாவுக்குத் ''தூரதேசத்தார்'' இடம் கொண்டு போகப்படுவர். இவ்வாறு தண்டிக்கப்படுவர் என்பதேயாகும்.

''யுத்த பிரதிஷ்டை செய்யுங்கள்....உங்கள் கலப்பைக் கொழுக்களைப் பட்டயங்களாக....அடியுங்கள்'' (9,10).

அதாவது, கடவுள் தேவபக்தியில்லாத ஜாதியினரைப் பரிகாசம் செய்யுமாப்போல, அவர் அவர்களைத் தண்டிக்கும்படி வருவாரே, அந்தக் கடைசி நாளில் அவர்கள் தங்களைக் காக்கும்படி ஆயுதங்களைத் தயாரித்து வைக்கச் சொல்லுகிறார். அக்காலத்தில் புறஜாதியரான பல நாட்டாருக்கு ஏசாயா **2:4** இல் காணப்படும் சமாதானமான காட்சிக்கு முற்றும் எதிரிடையான நிகழ்ச்சி உண்டாகும். ஏசாயா தீர்க்கதரிசி **2:4**இல் கூறுவது, ஆண்டவருக்குக் கீழடங்கி நடப்பவர்களுக்கு அருளப்படும் சமாதானமாகிய ஆசீர்வாதமேயாகும்.

''அரிவாளையெடுத்து அறுங்கள்'' *(13)*. இப்பொழுது யோவேல் யுத்தமாகிய ஒப்பனையை மாற்றிக் கடைசி நாளின் ஆக்கினைத் தீர்ப்புச் சம்பவங்களைத் தானிய அறுப்புக்கு ஒப்பிடுகிறார். இந்த உவமானப் பொருள் வெளி. *14:5-20*இலும் பயன்பட்டிருக்கிறது.

''சூரியனும் சந்திரனும் அந்தகாரப்படும்'' *(15)*. மேலே **2:10,30,31** ஐப்பற்றிய குறிப்புகளைக் காண்க.

''வானமும் பூமியும் அசையும்'' *(16)*. எபி. *12: 25:29*ஐக் காண்க. ''இப்பொழுது அறிந்துகொள்வீர்கள்'' *(17)*. இந்தப் பயங்கரமான தண்டனைகள் அனைத்துக்கும் நோக்கம் ஒன்றேயாகும். அது யாதெனில், யெகோவாவே மெய்க்கடவுள் என்றும் தமது மக்களின் ஆண்டவராகிய தேவன் என்றும் சர்வ குலத்தாரும் அறிவதே ஆகும், ''உங்கள் கடவுள் எங்கே?'' *(2:17)*. என்கிற கேள்விக்கு இதுவே ஏற்ற விடையாகும்.

''எகிப்து பாழாம்; ஏதோம் பாழ்வனாந்தரமாம்;.... யூதாவோ சதாகாலமாகவும்....குடியேற்றப்பட்டிருக்கும்'' *(18-21)*. இந்தக் கடைசி நான்கு வாக்கியங்களில் யோவேல் பெரிதும் நித்தியமுமான ஆசீர்வாதங்களைக் கர்த்தர் தமது மக்கள்மேல் பொழிந்தருளுவதாகவும்

அவர்களை எப்பொழுதும் எதிர்த்து வந்த இரு குலத்தாரை அவர் பாழாக்குவதாகவும் கூறுகிறார். ஆயினும், எகிப்து ஏதோமாகிய இந்த இருநாட்டார் மட்டுமன்றி, ''கடவுளை மறக்கும் சகல ஜாதிகளும்'' (சங். 9:17) அழிக்கப்படுவர். (ஏதோம் இராஜ்யம் அழிந்து வெகு காலமாயிற்று).

எருசலேமையும் யூதேயா நாட்டையுமோ கடவுள் நிலைவரப்படுத்துவார். இஸ்ரவேல் சாம்ராஜ்யம் ஆவிக்குரிய வகையாகச் சீர்பொருந்தும். ஆண்டவர் அதனுள் இராஜரீகம்பண்ணுவார். இதுவே யோவேலின் முடிவான தூதாகும். மீண்டும், இவ்வசங்களின்மூலம் ஆவிக்குரிய இஸ்ரவேலாகிய திருச்சபை இனி அனுபவிக்கப்போகும் மகா முக்கியமும் நிலைவரமுமான ஆசீர்வாதங்களும் முன் குறித்திருக்கின்றன என்பது உறுதியாகும்.

5

ஆமோஸ்

முன்னுரை

எழுத்தாளர் - *1,1; 7:14, 15.*

ஆமோஸ் என்பவர் எருசலேமுக்குச் சுமார் 12 மைல் தூரத்திலுள்ள தெக்கோவா ஊர் மேய்ப்பன். இவர் தீர்க்கரின் பள்ளியில் பயிற்சி பெறாவிடினும் இவர் கல்வி கற்காதவர் என்றாவது நாகரிகமற்றவர் என்றாவது நினைக்கலாகாது. தீர்க்கதரிசன ஆகமங்களுள் இவரது தீர்க்கதரிசன நூல் அதிக மேன்மையாகப் பாவிக்கப்படத் தகுதியானது. தேவ திருத்தொண்டாற்றத் திவ்விய அழைப்புப் பெற்றும் ஒரு கலாசாலையில் பயிற்சி பெற வாய்ப்பில்லாதவர்களை இவ்வுண்மை ஊக்குவிக்கக்கூடிய தாகும். மேய்ப்பர்களாயிருந்த மோசே தாவீதாகிய இரு வரைப்போன்று ஆமோஸ் என்பவரும் ஆடுமேய்க்கும் போதே ஆண்டவரிடம் அழைப்பு பெற்றார் *(7:15; யாத். 3:1, 10; சங். 78:70, 71).*

ஆமோஸ் தென்னாட்டாராயினும் கர்த்தர் அவரை வடநாட்டிற்குத் தீர்க்கதரிசனமுரைக்க அனுப்பினார் *(1:1; 7:15).* அவர் அநேகமாய்ப் பெத்தேலில் தமது ஊழியத்தை நிறைவேற்றினார் போலும் *(3:14; 4:4; 5:5, 6; 7:10, 13).*

ஆமோஸ் ஆட்டு மயிரைச் சந்தைகளில் கொண்டு போய் விற்பார். சந்தைகளில் நடக்கும் அக்கிரமச் செய் கைகளைக் கண்டு பிற்பாடு அவைகளைக் குறித்து

மக்களைக் கண்டனம் பண்ணினார். அப்பாவங்களாவன: கள்ளத் தராசு. அடிமை வியாபாரம், ஏழைகளை ஒடுக்குதல் (2:6; 8:5),

இயற்றிய காலம்

ஆமோஸ் தமது ஆகமத்தை யோனாவின் காலத்திலாவது அதற்குச் சற்றுப் பின்பாவது எழுதலானார். வட இராஜ்யமாகிய இஸ்ரவேல் நாட்டின் குடிகள் சிறைப்பட்டுப்போகுமுன் தீர்க்கதரிசனம் உரைத்த கடைசி தீர்க்கன் இவர் என்று அனுமானிக்க இடமுண்டு. அக்காலத்தில் யெரொபெயாம் II அரசன் இஸ்ரவேலிலும் உசியா இராஜா யூதோவிலும் அரசு புரிந்தனர் (1:1; 7:10). அந்நாள்களில் இஸ்ரவேல் நாட்டினர் அதிகமாய் வாழ்வடைந்து கொண்டிருந்தனர். மேலும், அந்நாட்டில் சீரியர் பிடித்திருந்த சில கிராமங்கள் யோனா தீர்க்கன் உரைத்தபடியே திரும்பவும் அந்நாட்டோடு சேர்க்கப்பட்டன (2 இரா. 14:25). அது நிம்மதியும் செழுமையும் பெருத்த காலம், மக்களின் வாழ்க்கையோ மிகவும் சீர் குலைந்து போயிற்று. அநியாயம், கொடுமை, வஞ்சகம், இலஞ்சம் வாங்குதலும் கொடுத்தலும், தாறுமாறான வாழ்க்கை, விக்கிரக வணக்கம் முதலியன இஸ்ரவேல் நாட்டில் மேலிட்டுக்கொண்டன.

இயற்றப்பெற்றவர்கள்

ஆமோஸ் இஸ்ரவேல் நாட்டாரிடம் இந்நூலை எழுதலானார் (1:1). ஆமோஸின் காலத்தில் வட இராஜ்யத்தில் வாணிகம் வெகுவாய் விருத்தியடைந்திருந்தது. கட்டடங்களைக் கட்டும் தொழிலும் அதிகமாக நடந்து வந்தது (3:15). தலைநகரமாகிய சமாரியாவில் அரசனுக்கும், வணிக முதலாளிகளுக்கும் பல மாளிகைகள் கட்டியிருந்தன. மக்களின் வாழ்க்கைத்தர விஷயத்தில் பெரிதான வேற்றுமை காணப்பட்டது. சிலர் பெரிய தனவந்த

ராகவும் வேறு பலர் வறியராகவும் இருந்தனர். பணக்காரர் ஏழைகளை ஒடுக்கி வஞ்சித்துப் பல்வேறு வகையாக அவர்களுக்கு அநியாயஞ் செய்தனர்.

கடவுள் தொழுகை சம்பந்தமாக வெளித்தோற்ற மெல்லாம் ஒழுக்கமாகவேயிருந்தது. எனினும் பாகால் வணக்கம் இன்னும் மக்கள் மத்தியில் நிலைகொண்டிருந்தது. உள்ளான மெய்க்கடவுள் வணக்கமோ வெகு சொற்பம். இந்த நிலையுள்ள மக்களிடம் ஆமோஸ் உரைக்க வேண்டிய தூது யாதெனில், ''கனிந்த பழங்கள் நிறைந்த கூடை'' யைப்போன்று அவர்கள் நியாயத்தீர்ப்புக்கும் தண்டனைக்கும் பாத்திரர் என்பதேயாகும் (8:1,2).

முக்கியப் பொருளும் நோக்கமும்

ஆமோஸ் என்பவரின் சிறப்பான செய்தி யாதெனில், இஸ்ரவேல் மக்களுக்குண்டாகும் நீதி விசாரணையும், தண்டனையுமாம். அவர்கள் வெளிப்படையாக மிகுந்த வாழ்வடைந்தபோதிலும் கடவுளின் ஆக்கினை சீக்கிரத்தில் அவர்கள் மீது விழும் என்றார். உள்நாட்டுக் கலகத்திற்குரிய அறிகுறிகள் ஏற்கெனவே காணப்பட்டன. அதன் பின் சிறிது காலத்திற்குள் ஒரே ஆண்டில் மூன்று அரசர்கள் ஒருவர்பின் ஒருவர் அரசாண்டனர். அதற்குள் இஸ்ரவேல் இராஜ்யத்தின் ஒரு பங்கு எதிரிகளின் வசமாயிற்று. ஐயோ! இஸ்ரவேல் நாட்டார் முந்திய நாள்களில் தீர்க்கதரிசன முரைத்தவர்களுக்குச் செவிசாய்க்காததுபோலவே ஆமோஸ் கூறிய எச்சரிப்பின் மொழிகளையும் கவனியாது போயினர்.

ஆமோஸ் ஓசியா என்பவர்கள் சுமார் ஒரே காலத்தில் தங்கள் ஊழியத்தை நிறைவேற்றினர். மேலும், இருவரும் அநேகமாக ஒரே வகையான தீர்க்கதரிசன பொருளைக் கூறவேண்டியிருந்தது. ஆனால் ஆமோஸ் இஸ்ரவேல் நாட்டாருக்கு மட்டுமன்றி யூதேயா நாட்டின

ருக்கும் சில ஏனைய நாட்டாருக்கும் உண்டாகப்போகும் தண்டனையை முன்னறிவித்தார்.

புதிய ஏற்பாட்டில் கூறியிருக்கும் ஆமோஸ் ஆகமத்தின் வாக்கியங்கள் - ஆமோஸ் 5:25-27

ஸ்தேவான் பக்தன் இவ்வாக்கியங்களைக் கூறினார் (அப். 7:42,43). ஆமோஸ் 9:11,12. யாக்கோபு என்பவர் எருசலேமில் கூடியிருந்த அப்போஸ்தலருக்கும் திருச்சபை மூப்பர்களுக்கும் இவ்வாக்கியங்களை எடுத்துரைத்தார் (அப். 15:16-18).

ஆமோஸ் பயன்படுத்திய உவமானங்கள்

ஓசியா முதலிய சில தீர்க்கர்கள் செய்ததுபோன்று ஆமோஸ் என்பவரும் பல உவமானங்களைப் பயன்படுத்தினார் (ஓசியாவின் வியாக்கியானம், முன்னுரை, உபகரணங்கள் என்னும் தலைப்புகளினடியிலுள்ள குறிப்புகளைக் காண்க).

உ-ம் தானியத்தை போரடித்தல் (ஆமோஸ் 1:3). ஏழைகளை ஒரு ஜோடு செருப்புக்கு விற்றல் (2:6;8:6). கேதுரு, கர்வாலி மரங்களின் உயரமும் வைரமும் (2:9). அரிக்கட்டுகள் நிறைந்த வண்டி (2:13). சிங்கம் (3:4:8, 12;5:19). சுருக்கில் அகப்படும் குருவி (3:5). எக்காளச் சத்தம் (3:6). படுக்கையும் மஞ்சமும் (3:12). மேய்ப்பன் ஓர் ஆட்டின் சில சிறிய உறுப்புகளைச் சிங்கத்தின் வாயினின்று தப்புவிப்பது (3:12). பசுமாடுகள் (4:1,3). மீன் பிடித்தல் (4:2). பற்களுக்கு ஓய்வு (4:6). கொள்ளிக் கட்டை (4:11). கன்னிகை (5:2). நீரோடை (5:24). ஏர் உழுதல் (6:12). தூக்கு நூல் (7:7). கனிந்த பழங்கள் நிறைந்த கூடை (8:1,2). கோதுமையைச் சல்லடையினால் சலிப்பது (9:9).

பிரிவுகள்

1. முன்னுரை - *1:1, 2.*

2, பல நாட்டாருக்கு உண்டாகும் அழிவு - *1:3-2:16,*

அ. தமஸ்கு (சீரியா நாடு) - 1:3-5.
ஆ. காசா (பெலிஸ்தியா நாடு) - 1:6-8.
இ. தீரு நகர் - 1:9, 10.
ஈ. ஏதோம் - 1:11, 12.
உ. அம்மோன் - 1:13-15.
ஊ. மோவாப் - 2:1-3.
எ. யூதேயா நாடு - 2:4, 5.
ஏ. இஸ்ரவேல் நாடு - 2:6-16.

3. தீர்க்கன் தமது முக்கியத் தூதை அறிவித்தல் *- 3:1-6:14.*

அ. முதலாம் செய்தி - 3:1-15.
ஆ. இரண்டாம் செய்தி - 4:1-13.
இ. மூன்றாம் செய்தி - 5:1-6:14.

4. கடவுளின் திட்டம் இன்னதெனக் கூறுதல் *- 7:1-9:10.*

அ. எல்லாவற்றையும் பட்சிக்கும் வெட்டுக்கிளியின் தரிசனம் - 7:1-3.

ஆ. எல்லாவற்றையும் அழிக்கும் அக்கினியின் தரிசனம் - 7:4-6.

இ. பரிசோதனை செய்யும் தூக்குநூலின் தரிசனம் - 7:7-9,

ஈ, நிகழ்ந்த சில சம்பவங்கள் - 7:10-17.

உ. கனிந்த பழங்களுள்ள கூடையின் தரிசனம் - 8:1-14.

ஊ. பலிபீடத்தண்டை ஆண்டவர் நிற்பதன் தரிசனம் -9:1-10.

5. முடிவுரை-9:11-15.

விளக்கவுரை

1. முன்னுரை-1:1-2.

''தெக்கோவா ஊர்.......ஆமோஸ்'' (1). முன்னுரை, எழுத்தாளர் என்கிற தலைப்பினடியிலுள்ள குறிப்புகளைக் காண்க. பழைய ஏற்பாட்டில் குறிப்பிட்டிருக்கும் ஆமோஸ் என்பவர் இவர் மட்டுமே. தெக்கோவா என்னும் சிற்றூர் 2 சாமு. 14:2,4,9; 2 நாளா. 11:6; 20:20; நெகே. 3:5,27; எரே 6:1 ஆகிய வாக்கியங்களிலும் குறிப்பிட்டிருக்கக் காணலாம்.

''உசியாவின் நாள்களிலும்....பூமியதிர்ச்சி உண்டாவதற்கு இரண்டு வருஷத்துக்கு முன்னே'' (1). ஆமோஸ் இஸ்ரவேல் நாட்டில் திருப்பணி ஆற்றிய காலம் இன்னதென்பதற்குத் திட்டமான குறிப்பு இதுவே (முன்னுரை, இயற்றிய காலம் காண்க). இவ்விடத்தில் குறிப்பிட்ட பூகம்பம் சக. 14:5இலும் ஏசாயா 5:25இலும் கூறியிருக்கிறது. இருநூறு ஆண்டுகளுக்குப் பின்பும் பொது மக்கள் இந்த நில நடுக்கத்தைக் குறித்துப் பேசியதால் அந்நிகழ்ச்சி மகா பயங்கரமானதென்பதற்கு ஐயமில்லை.

''கர்த்தர்.......கெர்ச்சித்து'' (2). இது ஒரு சிங்கம் தனக்கு இரையாகும் மிருகத்தின்மேல் பாயும்போது இடும் சத்தத்தைக் குறிக்கும். இவ்வாக்கியம் ஆமோஸ் ஆகமத்தின் சிறப்பான போதனை இன்னதெனக் காட்டுகிறது. அந்தப் போதனையாவது: ஆண்டவர் இஸ்ரவேலருக்கு விரோதமாய் எழும்பி ஒரு பயங்கரமான அழிவினால் அவர்களின் நாட்டையே அதிரப்பண்ணும் நாள் வருகிறது என்பதேயாகும்.

''கர்மேலின் சிகரம் காய்ந்துபோகும்'' (2). 400 மீட்டர் உயரமான இம்மலை வட பலஸ்தீனாவிலுள்ள மிகவும் செழிப்புள்ள இடங்களில் ஒன்றாகும். கர்மேல் மலையின் புல்லுங்கூடக் காய்ந்துபோகும் என்றால் ''மேய்ச்சற்காடு புலம்பும்'' என்பது ஆச்சரியமானதன்று.

1. பல நாட்டாருக்கு உண்டாகும் அழிவு -1:3-2:16.

அ. தமஸ்கு (சீரியா நாடு)-*1:3-5.*

''தமஸ்குவின் மூன்று பாதகங்களினிமித்தமும் நாலு பாதகங்களினிமித்தமும்'' (1:3). 1:3-க்கும் 2:6-க்கு மிடையில் எட்டு முறை பயன்பட்டிருக்கும் இம்மொழியினால் கடவுளது நீடிய பொறுமை நன்குற இலங்கும். எவ்வாறெனில், ''மூன்று பாதகங்கள்'' என்பது நிறைவான பாவத்தைக் குறிக்க ''நாலு பாதகங்கள்'' என்பது கடவுள் சகிக்கவொட்டாத மிஞ்சின பாவத்தைக் குறிக்கும். பாவிகளின் குற்றங்கள் அளவுகடந்துபோகு மட்டும் ஆண்டவர் அவர்களைத் தண்டியாமல் பொறுத்துக் கொள்ளுகிறார். அவை மிஞ்சிப்போகும் பட்சத்திலோ அவர் மற்றைய மக்களின் நலனைக் கருதியே அத்தகைய பாவிகளைத் தண்டிப்பது அவசியமேயாகும் (மத். 23:32; 1 தெச. 2;16 ஐக் காண்க).

''தமஸ்கு'' (1:3). இந்நகர் சீரியா நாட்டின் தலைநகராயிருந்தமையால் அதன் பெயர் இவ்விடத்தில் சீரியா நாட்டையே குறிக்கிறது எனலாம். இஸ்ரவேல் நாட்டிற்கு அருகிலுள்ள இராஜ்யங்களில் இதுவே தலைசிறந்ததாகும். யெரொபெயாம் II அரசனின் காலத்திற்கு முன்னே இஸ்ரவேல் இராஜ்யம் வெகு காலமாகச் சீரியரோடு கடும்போர் செய்து கொண்டிருந்தது.

''கிலெயாத்தை இருப்புக் கருவிகளினால் போர் அடித்தார்களே'' (1:3). அதாவது, சீரியர் கிலெயாத்தின் வாசிகளை இப்படிப்பட்ட குரூரமான வகையாக

வதைத்தனர்போலும். இது அநேகமாக அசாவேல் (கசாவேல்-ஆமோஸ் 1:4) என்பவர் கிலியாத்தைத் தோற்கடித்த சமயத்தில் நடந்தது (2 இரா. 10:32, 33ஐக் காண்க).

''கசாவேலின் வீட்டில் தீ வைப்பேன்.'' ''தமஸ்குவின் தாழ்ப்பாள்களை நான் உடைத்து'' (1:4,5). இச்சொற்களின் கருத்தாவது: சீரியாவின் அரசகுலத்தார் யாவரும் சங்கரிக்கப்படுவர். ஆகையால், தமஸ்கு நகர் தன் எதிரிகளுக்கு முன்பாகத் திறப்பாகவேயிருக்கும் என்பதே. ''ஆவேன்'' ''பேதேதேன்'' (1:5). இவ்விடங்களைப்பற்றி நமக்கு ஒன்றும் திட்டமாய்த் தெரியாது. எனினும், அவை தமஸ்குவைச் சுற்றியுள்ள விஸ்தாரமான சமபூமியில் இருந்திருக்கலாம்.

ஆ. காத்சா (பெலிஸ்தியா நாடு)-*1:6-8.*

ஆமோஸ் தீர்க்கன் வட திசையிலுள்ள நாட்டாரை விட்டு இப்பொழுது தெற்கிலுள்ள நாடுகளை நோக்கித் தீர்க்கதரிசனமுரைக்க ஆரம்பிக்கிறார். காத்சா ஊர் பெலிஸ்தியரின் மற்றப் பட்டணங்களுக்குத் தென்கோடியிருந்தது. இவ்விடத்தில் அதன் பெயர் ஒரு வேளை பெலிஸ்தியர் நாடு முழுவதையும் குறிக்கலாம்.

''ஜனம் முழுவதையும் அவர்கள் சிறைபிடித்து ஏதோமியரிடம் ஒப்புவித்தார்களே'' (6). காத்சா ஊர் வணிகர் கூட்டங்கள் செல்லும் இரு வழிகள் சேரும் இடமானபடியால் அவ்வூர் அடிமை வாணிகம் நிறைந்த ஊர். அவ்வூரார் தங்கள் அடிமைகளை ஏதோமியரிடம் விற்பது வழக்கம்.

''காத்சாவின் மதிலில் தீவைப்பேன்'' (7) கடவுள் சீரியருக்குச் செய்தது போலவே பெலிஸ்தீயருக்கும் செய்வார். அவர்கள் பல குலத்தாரை எப்படித் துன்புறுத்தினார்களோ அப்படியே அவர் அவர்களையும் யுத்தமாகிய தீயினால் தண்டிப்பார்.

''அஸ்தோத்....அஸ்கலோன்....எக்ரோன்'' (8). இவை காத்சாவைப்போலப் பெலிஸ்தியரின் தலை சிறந்த நகரங்களாகும்.

இ. தீரு நகர்—1:9,10.

''ஜனம் முழுவதையும் சிறை பிடித்து....ஒப்புவித்தார்களே'' (9). அதாவது, பெலிஸ்தியர் செய்தது போன்று பெனிக்கேயரும் அடிமை வாணிகத்தில் ஈடுபட்டனர். அவர்களும் யுத்தத்தில் தண்டிக்கப்படுவர் (10). இந்தத் தீர்க்கதரிசன மொழியின்படி அசீயரும் பின்னால் நேபுகாத்நேச்சாரும் தீரு நகரைத் தாக்கினர். அதற்குப் பின்பு மகா அலெக்சாந்தர் என்பவர் அந்நகரைப் பிடித்து அதன் வாசிகளில் பலரை அடிமைகளாக்கினார்.

ஈ. ஏதோம் 1:11,12.

மற்ற ஜாதியினர் குற்றங்களில் ஏதோமியரும் பங்கு பெற்றதாக வ. 6,9 இனால் அறிந்து கொள்கிறோம். ஆகையால், ஆண்டவர் ஏதோமியரையும் யுத்தமாகிய தீயைக் கொண்டு தண்டிக்கப் போவதாகத் தீர்க்கன் கூறுகிறார்.

''அவன்....தன் சகோதரனைப் பிடிக்கத் தொடர்ந்து இரக்கமற்றவனானான்'' (11). ஏதோமியர் யாக்கோபின் சகோதரனாகிய ஏசா என்பவரின் சந்ததியாரானபடியால் அவர்கள் இஸ்ரவேலருக்கு நெருங்கிய இனத்தார். எனினும், அவர்கள் தங்கள் ''சகோதரன்'' ஆகிய இஸ்ரவேலை ஓயாமல் பகைத்தனர்.

''தேமான்....பொஸ்றா'' (12). ஒபதியா 9ஐக் காண்க. தேமான் என்பது ஏதோம் நாட்டின் வடபாகத்திலுள்ள ஒரு மாவட்டத்தையும் பொஸ்றா என்பது அம்மாநாட்டிலுள்ள ஒரு முக்கியமான நகரையும் குறிக்கும் போலும்.

உ. அம்மோன்—*1:13-15.*

''கிலெயாத்தின் கர்ப்ப ஸ்திரீகளைக் கீறிப்போட்டார் களே'' *(13)*. ஆண்டவர் தண்டிக்க வேண்டிய இவர்கள் குற்றம் மகா குரூரமும் அருவருப்புமானது. பண்டைக் காலத்தில் யுத்தம் நடக்கும்போது இது சாதாரணமான தேயாகும் *(2 இரா. 8:12; ஓசியா 13:16*ஐக் காண்க*)*.

''ரப்பர்'' *(14)*. இது அம்மோன் இராஜ்யத்தின் தலைநகர். சவக்கடலுக்கு வட கிழக்குத் திசையில் 25 மைல் தூரத்திலுள்ளது. இந்நகர் எதிரிகள் கையில் அகப் பட்டு அழிக்கப்படும். அதன் அரசனும் பிரபுக்களும் சிறைப்பட்டுப் போவார்கள் *(15)*.

ஊ. மோவாப்—*2;1-3*

''ஏதோம் இராஜாவின் எலும்புகளை அவன் நீறாகச் சுட்டுப்போட்டானே'' *(2:1)*. அம்மோன் புத் திரர் இன்னும் பிறவாத சிசுக்களைக் சித்திரவதை செய் திருக்க மோவாபியர் ஏதோம் இராஜ்யத்தின் அரசனு டைய பிரேதத்தை அவமானப்படுத்தினார்கள். இந்தப் பாவம் இஸ்ரவேலரின் முக்கியமான எதிரிகளில் ஒருவரு குச் செய்யப்பட்டபோதிலும் ஆண்டவர் அதை தண்டிக் காமல் விடமுடியாது. யுத்தமும் அழிவும் முந்திக் கூறப் பட்ட ஜாதியினருக்கு மட்டும் அன்றி மோவாபியருக்கும் உண்டாகும் என்பதாகத் தீர்க்கதரிசி கூறுகிறார்.

''கொரியோத்'' *(2)*. இந்தப் பதம் நகரங்கள் என்று அர்த்தங்கொள்ளும் பன்மையான பெயர் சொல்லாகும். அது மோவாபியரின் தலைநகராய் இருந்தது. ஒருவேளை அதில் சில வெவ்வேறு ஊர்கள் சேர்ந்திருக்கலாம். இது சம்பந்தமாக அது அநேகத் தற்காலப் பட்டணங்களைப் போலிருக்கலாம்.

''நியாதிபதி அதனுள்ளே இராதபடி நான் அழித்து'' *(3)*. மோவாபியரின் நீதிபதியை யெரொபெயாம் அரசன்

ஏற்படுத்திய அதிகாரி எனப்பலர் அனுமானிக்கின்றனர். ஆறு புறஜாதிகளைப்பற்றி ஆமோஸ் இந்தப் பாகத்தில் தீர்க்கதரிசனமுரைத்த படியால் யெகோவா என்பவர் யூதருக்கு மட்டுமல்ல, சகல ஜாதியினருக்கும் தேவனானவர் என்பது புலப்படும். யோனா தீர்க்கனும் இவ்வுண்மையை வலியுறுத்தினார்.

எ. யூதா-*2:4, 5.*

''கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை அவர்கள் அசட்டை பண்ணி, அவருடைய நியமங்களைக் கைக்கொள்ளாமல்'' (4). மக்களுக்கு விரோதமாகச் செய்த குற்றங்களினிமித்தமல்ல, கடவுளுக்கு விரோதமான பாவங்களுக்காகவே யூதேயா நாட்டார் தண்டிக்கப்படல் வேண்டும். ஆனால், இவ்விரண்டுக்கும் யுத்தம், அழிவு ஆகிய தண்டனையே விதிக்கப்படும் என்பது இப்பாகத்தினால் விளங்கும். இந்தத் தீர்க்கதரிசன மொழியின் நிறைவேறுதல் 2 நாளா. 36:9இல் காணப்படும்.

''தங்கள் பிதாக்கள் வணங்கி வந்த பொய்யானவற்றினால் மோசம் போனார்களே'' (4). பிதாக்களின் தவறான நடத்தை பிள்ளைகளுக்குப் பிரமாணமாகிறது மோசமான காரியமாகும்!

ஏ. இஸ்ரவேல்-*2:6-16.*

இஸ்ரவேல் இராஜ்யத்திற்கு அருகிலுள்ள ஏழு நாட்டாரின் குரூரப் பாவங்களைக் குறித்துத் தீர்க்கதரிசி எழுதியபின் இஸ்ரவேலரின் பாவங்களைக் குறித்து எழுதுகிறார். மற்ற ஜாதியினருடைய பாவங்களைவிட இஸ்ரவேலரின் குற்றங்களை அதிக விவரமாக எடுத்துக் காட்டுகிறார். அவர்கள் செய்து வந்த ஏழு பாவங்களைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: அடிமை வியாபாரம், பொருளாசை, அநீதி, துர்வாழ்க்கை, குடிவெறி, கடவுள் தங்களுக்குச் செய்த நன்மைகளை மறத்தல், மற்றோரை மிரட்டல் என்பவைகளே.

''இஸ்ரவேலின் மூன்று பாதகங்களினிமித்தமும் நாலு பாதகங்களினிமித்தமும் வரப் போவதைத் திருப்பமாட்டேன்;'' (6). தமஸ்கு என்னும் தலைப்பினடியிலுள்ள குறிப்புக்களை மேலே காண்க. முன்னே விவரித்த ஏழு நாட்டாரைப்போலவே இஸ்ரவேல் நாட்டாரும் நிறைந்த பாவத்தையும் தேவன் சகிக்கவொட்டாத மிஞ்சின பாவத்தையும் செய்துவந்தனர். அவர்கள் விரைவில் மனந்திரும்பாவிடில் முன்சொன்ன பாவிகளைப்போன்று அவர்களும் மாண்டு போவார்கள்.

''ஏழையை ஒரு ஜோடு செருப்புக்கும் விற்றுப்போட்டார்களே.'' இது லேவி. 25:39இல் கூறியுள்ள சட்டத்திற்கு முரணானதாகும். இக்காலத்தில் நமது தேசத்தில் இப்படிப்பட்டவைகள் நடக்கிறதுண்டா? ஒருவன் பட்ட கடன் ஒரு ஜோட்டின் கிரயத்துக்குச் சமானமான அற்பத் தொகையாயினும் அவனையாவது அவனது பிள்ளைகளையாவது அடிமையாக விற்றுப் போடுவது எவ்வளவோ அநியாயம்! (8:6ஐயும் 2 இரா. 4:1ஐயும் காண்க).

''மகனும் தகப்பனும் ஒரே தாசியினிடம் சென்று'' (7). மக்கள் இத்தனை கேவலமான காரியத்தைச் செய்தார்கள் பாருங்கள். வேசித்தனமானது விக்கிரகக் கோயில்களில் நடந்தேறிவருவது வழக்கமாயிற்று. இஸ்ரவேலரும் இந்த இழிவான பழக்கத்தை அனுசரித்து வந்தனர் போலும். உபா. 23:17-இன்மூலம் கடவுள் இந்தக் கேவலமான நடத்தையை விலக்கும்படி கண்டிப்பாகக் கட்டளையிட்டார்.

''சிறுமைப்பட்டவர்களின் வழக்கிலே நியாயத்தைப் புரட்டுகிறார்கள்'' (7). யெகோவாவைச் சேவித்துவந்த ஏழைகளுக்கு நீதிமன்றத்தில் நியாயம் செய்யப்படவில்லை (ஏசாயா 10:2).

''அடைமானமாய் வாங்கின வஸ்திரங்களைச் சகல பீடங்களருகிலும் விரித்துத் தண்டம் விதிக்கப்பட்டவர்களின் திராட்சரசத்தைத் தங்கள் தெய்வத்தின் கோவிலிலே குடிக்கிறார்கள்'' (8). பொருளாசையும் குடிவெறியும் பக்திவினயமான அலுவல்களினால் மூடப்பட்டு நடந்தேறி வந்தன. குடிவெறியைக் குறித்து வச. 12இலும் கூறியிருக்கிறது. தற்காலத்திலும் தேவாலய ஆராதனை கூட்டங்களுக்கு ஒழுங்காய்ச் செல்லுகிற எத்தனையோ பேர் தங்கள் வேலைக்காரரை ஒடுக்குகின்றனர்.

''நான் அல்லவோ அவர்கள்முன் எமோரியனை அழித்தேன்....அவன்• கனியையும்...அவன் வேரையும் அழித்துவிட்டேன்....எகிப்து தேசத்திலிருந்து உங்களை வரப்பண்ணி....உங்கள் பிள்ளைகளை....ஏற்படுத்தினேன் (9-11). ஆண்டவர் தங்களுக்குச் செய்த இந்தப் பெரிதான நன்மைகளை மறந்து விட்டனர்.

''நீங்களே நசீரருக்குத் திராட்சரசம் குடிக்கக் கொடுத்து'' (12). எண். 6:1-21ஐக் காண்க. இந்த நசீரர் (நசரேயர் ப. தி.) கடவுளின் சேவைக்கெனப் பிரித்தெடுக்கப்பட்டவர்கள். மதுவிலக்குப் பொருத்தனை செய்தவர்கள். தேவனுக்குப் பொருத்தனைபண்ணினவனை அதற்கு மாறாக நடக்கும்படி ஏவுவது மிகவும் பயங்கரமான பாவமல்லோ? நியா. 13:3-5ஐ நன்கு கவனிக்க. ''தீர்க்கதரிசனம் உரைக்க வேண்டாமென்று தீர்க்கதரிசிகளுக்குக் கட்டளையிட்டீர்கள்'' (12). கடவுள் தனக்குத் தந்த தூதை ஒருவன் கூறும்போது அவனைத் தடுப்பது இன்னொரு மகா பெரிய பாவமாகும்.

''இதோ, அரிக்கட்டுகள் நிறைந்த வண்டி கீச்சிடுவது போல....கீச்செனக் சத்தமிடச் செய்வேன்'' (13). இதை பழைய திருப்புதலோடு ஒத்திட்டுப் பார்க்க.

''அப்பொழுது வேகமாய் ஓடுகிறவனுக்கும் புகலிடமில்லை;'' (14). அதாவது, தண்டனை உண்டாகும்

நாளில் ஒருவன் தப்பிக்கொள்வதில்லை? இந்தத் தீர்க்க தரிசன மொழி ஆசீரியர் இஸ்ரவேல் நாட்டைத் தாக்கின போது நிறைவேறிற்று.

5. தீர்க்கன் தமது முக்கியத் தூதை அறிவித்தல்-3:1-6:15.

அ. முதலாம் செய்தி-*3:1-15.*

''நான் சொல்லிய இந்த வசனத்தைக் கேளுங்கள்'' (1). ஆமோஸ் தமது இரண்டாம் செய்தியையும் மூன்றாம் செய்தியையும் இதே வகையாக ஆரம்பித்தத்தைக் கவனிக்க *(4:1;5:1).*

i. மக்கள் தனது தூதைக் கவனித்துக் கேட்க வேண்டும் என்பதற்கு ஆமோஸ் நியாயம் கூறுகிறார். கடவுள் அவரை அழைத்த அழைப்பே அந்த நியாயமாகும் (வ. *1-8*).

''இஸ்ரவேல் புத்திரரே,....முழு குடும்பமாகிய உங்களுக்கு விரோதமாய்'' (1). கர்த்தருக்கும் யூதருக்கும் (''முழு குடும்பம்'') உள்ள சம்பந்தத்தைத் தீர்க்கதரிசி கூறி, அவர்கள் அதற்கு விரோதமாய்க் குற்றஞ்செய்த படியால் அவர்களை ஆண்டவர் சிட்சை செய்வதாக எழுதுகிறார். கடவுள் தங்களைத் தெரிந்தெடுத்ததினால் இஸ்ரவேலர் பெருமை பாராட்டுவதற்கு முகாந்தரமில்லை என்பதும் சிறப்பான சிலாக்கியம் பெற்றவர்கள்மேல் சிறப்பான பொறுப்பு அமரும்; அவற்றைச் சரிவர நிறைவேற்றாவிடில் பெரிதான தண்டனை உண்டாகும் என்பதும் இதனால் தெளிவாகிறது (வச. 2ஐ முக்கியமாக கவனிக்க).

''இருவர் ஒத்திருந்தாலொழிய ஒன்றாய் நடப்பார்களோ?'' (3). வச. *3-8*இல் காணப்படும் ஒன்பது கேள்விகளில் இது முதலாம் கேள்வியாகும். இந்த ஒன்பது கேள்விகளுக்கு ஒரே முக்கியமான கருத்து உண்டு.

அதாவது, ஒவ்வொரு காரியத்துக்கும் அதற்குரிய காரணமுண்டு என்பதேயாம். மேலும், தாம் இஸ்ரவேல் நாட்டில் எழும்பினதற்கு ஏற்ற காரணமுண்டு என்பதாகச் சாதிக்கிறார்.

''கர்த்தராகிய ஆண்டவர் பேசுகிறார், தீர்க்கதரிசனம் சொல்லாதிருப்பவன் யார்?'' *(8)*. இந்தக் கடைசி கேள்வியை மற்றக் கேள்விகளுக்குத் தகுந்த முடிவாகப் பயன்படுத்துகிறார். இவ்வசனத்தில், ஆண்டவர் தம்மை அழைத்தபடியால் தாம் அவரது தூதைப் பேசாதிருப்பது கூடாத காரியம் என்று ஆமோஸ் விளக்குகிறார். ''தீர்க்கதரிசிகளாகிய தம் ஊழியருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் கர்த்தராகிய ஆண்டவர் ஒரு காரியத்தையும் செய்யார்'' *(7)*. இம்மொழியின் கருத்தாவது: ஆமோஸ் ஆண்டவரின் இரகசியத்தை அறிந்தவராகப் பேசியதால் அதற்குரிய அதிகாரத்தோடு தமது தூதை சொல்லக்கூடியவர் என்பதேயாம். முந்திய வசனங்களில் காணப்படும் பதங்களாகிய ''சிங்கம்,'' ''சுருக்கு,'' ''பொறி,'' ''எக்காளம்'' என்பவைகள் இஸ்ரவேலுக்கு உண்டாகப்போகும் அழிவைக் குறிக்கின்றன.

ii. *சாட்சிகளை அழைத்தது-வச. 9, 10.*

''நீங்கள் கூடி'' *(9)*. பெலிஸ்தியரும் எகிப்தியருமாகிய புறதேசத்தார் வந்து சமாரியாவில் நடக்கிற தீமைகளைப் பார்க்க அவர்களை அழைக்கிறார். கொடுமையும் ஏழைகளை ஒடுக்குதலும் தீர்க்கன் முக்கியமாகச் சுட்டிக்காட்டின பாவங்களேயாம். செல்வந்தர் தங்கள் மாளிகைகளில் ''நேர்மையானதைச் செய்ய அறியாதிருக்கிறார்கள்'' *(10)*.

iii. *நியாயத்தீர்ப்பைக் கூறுதல்-3:11-15.*

''சத்துரு வந்து தேசத்தைச் சூழ்ந்துகொண்டு'' *(11)*. அசீரியர் மூன்று ஆண்டு காலம் சமாரியாவைச்

சூழ்ந்து கொண்டு பிறகு அதை பிடித்தனர் (2 இரா. 17:5,23).

''மேய்ப்பன் ஒருவன் இரண்டு கால்களையாவது ஒரு காதின் துண்டையாவது....தப்புவிப்பது போலவே'' (12). சமாரியாவில் தப்பிக்கொள்பவர்கள் மகா சொற்பப் பேர் என்பதை இந்த உவமானத்தினால் மிகவும் தெளிவாகக் காட்டுகிறார். ''சமாரியாவாசிகளாகிய இஸ்ரவேலர் தப்புவிக்கப்படுவார்கள்'' (12). அதாவது, அவர்கள் சிறையாக்கப்பட்டு வேறு நாட்டுக்குக் கொண்டு போகப் படுவர்.

''கேளுங்கள்'' (13). வச. 9இல் சொல்லிய இரு நாட்டாரிடம் இப்படிக் கூறுகிறார். அவர்களும் சமாரி யாவுக்கு விரோதமாய்ச் சாட்சி கூறவேண்டும். மெய்க் கடவுளை அறியாதவர்கள் அவரைத் தொழுது கொள்ளு கிறவர்கள் பாவஞ் செய்வதைக் கண்டு அவர்களைக் கண்டிக்க நேரிடுவது எவ்வளவு வெட்ககரமான காரிய மாகும்!

''பெத்தேலின் பலிபீடங்களைத் தண்டிப்பேன்''(14), சமாரியாவுக்கு சம்பவிக்கும்போகும் அழிவில் விக்கிரகக் கோயில்களும் பங்கு பெறும் என்பது இதன் பொருளாகும்.

''மாரிகால வீட்டையும் கோடைகால வீட்டையும் இடிப்பேன்; தந்தத்தால் அலங்கரிக்கப்பட்ட வீடுகள் அழியும்; பல வீடுகள் நாசமாகும் (15). தனவந்தர்கள் தண்டிக்கப்படும் நாளில் அவர்கள் மாளிகைகளும் நாச மாகும் என்பது இதற்கு அர்த்தமாகும்.

ஆ. இரண்டாம் செய்தி-*4:1-13*.

i. சமாரியாவின் பெண்கள்-4:1-3.

''பாசானின் பசுக்களே'' (1). பெண்பால் பதத் தைப் பயன்படுத்தினதைக் கவனிக்க. பாசான் நாடு அதிக வளமானதாயிருந்தது. அதன் ஆடு மாடுகள்

பெயர் போனவைகள் (உபா. 32:14; எசே. 39:18ஐக் காண்க). ஆமோஸ் சமாரியாவிலிருந்த தனவந்தப் பெண்களைப் பாசான் நாட்டின் கொழுத்த பசுக்களுக்கு ஒப்பிட்டு அவர்களை மிகவும் கடினமாகக் க்ண்டனம் பண்ணினார். ''எஜமான்கள்'' என்கிற பதம் முன்கூறிய ஸ்திரீகளின் கணவரைக் குறிக்கும். அவர்கள் தங்கள் கணவர்கள் செய்ததுபோலவே தரித்திரரை ஒடுக்கினர். இந்தப் பாவமும் குடிவெறி என்னும் தவறான நடத்தை யும் அவர்களில் முக்கியமாய்க் காணப்பட்ட பாவங்களாம். சுகபோகமாகவும் உல்லாசமாகவும் வாழுவதையே விரும்பி வேறு எதையாகிலும் அவர்கள் கவனிக்கவில்லை. சாப் பிடும் பதார்த்தங்களையும் அருந்தும் பானங்களையும் வாங்குவதில் ஏழைகளைப் பல வகையில் ஒடுக்கினார்கள்.

''சத்துரு உங்களைத் துறடுகளாலும்....மீன் பிடிக்கிற தூண்டில்களாலும் இழுத்துக்கொண்டு போகும் நாட்கள் வரும்'' (2). இதற்கு எடுத்துக் காட்டாக, அசீரியரின் பண்டைக்கால சிலைகள் ஒன்றில் அவர்கள் பிடித்த சிறை களின் வாயில் துறடு போட்டு இழுப்பதன் படம் ஒன்று வரைந்துள்ளது.

''ஒவ்வொருத்தியும் தனக்கு எதிரேயுள்ள பிளப்பின் வழியாய் வெளியேறுவாள்'' (3). அதாவது, பட்டணத் தின் மதிலில் உண்டாக்கப்படும் திறப்புகளின் வழியாய்ப் புறப்பட்டுச் சிறையாக்கப்படுவர் (5:27ஐக் காண்க).

ii. சமாரியாவின் தொழுகை (4:4, 5).

''பெத்தேலுக்கு வாருங்கள், வாருங்கள், துரோகம் பண்ணுங்கள்;........புளிப்புள்ளதை ஸ்தோத்திர பலியாகத் தகனியுங்கள்'' (4, 5). தீர்க்கதரிசி போலி பக்தியுள்ள மக்களைப் பரிகாசம்பண்ணுகிறார். முக்கியமான தொழு கை ஸ்தலங்களாகிய பெத்தேலுக்கும் கில்காலுக்கும் சென்று தேவ துரோகம்பண்ணவும் புளிப்புள்ளதை

ஸ்தோத்திர பலியாகத் தகனிக்கவும் சொல்லுகிறார் பாருங்கள். இப்படிப்பட்ட தொழுகையைக் கடவுள் ஏற்றுக்கொள்ள மாட்டார். மேலும், இது லேவி. 2:11 இல் கண்டிப்பாக விலக்கப்பட்டிருப்பதைக் கவனிக்க (லேவி. 7:12 ஐயும் காண்க).

iii. இஸ்ரவேலின் குணப்படாமை-4:6-13.

''நீங்களோ என்னிடம் திரும்பவில்லை. கர்த்தர் உரைத்த வாக்கு இதுவே'' (வச. 6, 8, 9, 10, 11). இந்த விசனகரமான சொல் இந்தச் சுருக்கமான பாகத்தில் ஐந்துமுறை பயன்பட்டிருப்பதைக் கவனிக்க. ஐந்து வெவ்வேறு வாதைகள் இஸ்ரவேல் நாட்டை அழித்தன. எனினும், ஒவ்வொன்றிற்கும் பின்னால் ''நீங்களோ என்னிடம் திரும்பவில்லை'' என்று ஆண்டவர் கூறவேண்டியிருந்தது.

''பற்களுக்கு ஓய்வையும்....ஆகாரக் குறைவையும்'' (6). இது கர்த்தர் தமது மக்களைச் சிட்சை செய்த முதலாம் வாதையாகிய பஞ்சத்தைக் குறிக்கும். ஒரு சமயம் இந்தப் பஞ்சம் யோவேல் தீர்க்கனின் காலத்தில் உண்டானதாயிருக்கலாம் (யோவேல் 1:16, 20).

''மழையை நான் தடுத்தேன். ஒரு ஊரில் மழை பெய்யவும் ஒரு ஊரில் மழை பெய்யாதிருக்கவும் செய்தேன்'' (7). இவ்வசனத்தில் பஞ்சத்தின் இரு முக்கியக் காரணங்கள் காணப்படுகின்றன. அவையாவன: மழைத் தாழ்ச்சியும், மழை பெய்தாலும், நாடெங்கும் பெய்யாமல் சில இடங்களில் மட்டும் பெய்தலுமாகும். ஆனால், இதெல்லாம் மக்களைக் கடவுளிடம் திருப்ப இயலாமற் போயிற்று (8).

''கருக்காயினாலும் விஷப் பனியினாலும் உங்களை வாதித்தேன்....பச்சைப் புழு அரித்துப்போட்டது'' (9). வெட்டுக்கிளிகள் முதலிய பூச்சிகளைக்கொண்டு மரம்

செடி கொடியாகியவற்றைக் கர்த்தர் அரித்துப் போட்டார். இதுவும் பஞ்சத்திற்குக் காரணமாயிற்று. இவ்வசனம் யோவேல் *1:4*ஐயும் *2:25*ஐயும் நமக்கு நினைப்பூட்டக் கூடியதாகும். ஆனாலும் இஸ்ரவேலர் இன்னும் மனந்திரும்பவில்லை.

''கொள்ளை நோயை உங்களுக்குள் அனுப்பினேன்'' *(10)*. பஞ்சத்திற்கு அடுத்ததாகக் கொள்ளை நோய் உண்டாயிற்று. இந்த வியாதி எகிப்து தேசத்தில் உற்பத்தியாயிற்று என்பது உத்தேசம். ''உங்கள் வாலிபரைப் பட்டயத்தாலே கொன்றேன்''. ஏதோ ஒரு தேசத்திலிருந்து எதிரிகள் வந்து இஸ்ரவேல் நாட்டைத் தாக்கினதுபோல தோன்றுகிறது. யுத்த வீரரும் யுத்தக் குதிரைகளும் ஏராளமாய் மாண்டுபோய் வெளியில் கிடந்தினால் கொள்ளை நோய் அதிகமாய்ப் பரவிற்று. இதுவும் உணர்ச்சியற்றவர்களின் இருதயத்தை எழுப்பவில்லை.

''சோதோமையும் கொமோராவையும் கடவுள் கவிழ்த்ததுபோல உங்களிலும் பலரைக் கவிழ்த்தேன்'' *(11)*. கடவுள் அக்காலத்தில் தமது மக்களைச் சிட்சை செய்த கடைசி வாதை பூகம்பம் என இவ்வசனத்தில் அறிகிறோம். ஆனால் இஸ்ரவேலின் பிடிவாதம் எங்ஙனம்; இன்னும் மனஸ்தாபப்படக் காணோம்! *1:1*ஐக் காண்க.

''அக்கினியினின்று பறிக்கப்பட்ட கொள்ளி போல்'' *(11)*. தேவனது அதிசயமான அருள் மறுபடியும் உதாரணமாகிறது. அவர் தமக்கு விரோதமாய் எண்ணிக்கையற்ற குற்றங்களைச் செய்த பாவிகளைத் தமது கோபத்தினின்று ஒரு கொள்ளியை நெருப்பினின்று பறிப்பதுபோல பறிக்கிறார் பாருங்கள். லோத்து என்பவர் சோதோம் நகரினின்று விடுவிக்கப்பட்ட நிகழ்ச்சி கடவுளின் கருணைக்கும் இரக்கத்திற்கும் மிகவும் சிறந்த எடுத்துக்காட்டாகும் (ஆதி. *19:15, 29*).

''உன் கடவுளைச் சந்திக்க ஆயத்தப்படு'' (12). இவ்வாகமத்தின் மிகவும் முக்கியமான வாக்கியங்களில் இது ஒன்றாகும். கர்த்தர் பாவத்தில் மூழ்கின மக்களுக்குக் கடைசி எச்சரிப்பு தருவதுபோல தம்மைச் சந்திக்க ஆயத்தப்படும்படி அவர்களை அறை கூவுகிறார். ''நான் உனக்கு இப்படிச் செய்வேன்'' என்னும் சொல் 3:11இல் கூறிய வெளிநாட்டாரின் தாக்குதலைக் குறிக்கும், ''உருவாக்கினவர் அவர்.................சிருஷ்டித்தவர் அவர் ....தெரியப்படுத்துகிறவர் அவர்.......அந்தகாரமாக்குகிறவர் அவர்.......அவருடைய நாமம் சேனைகளின் கடவுளாகிய யெகோவா என்பதே'' (13). இது கடவுள் வாழ்த்தான வசனமாகும். இஸ்ரவேலர் வழிபட்ட பொய்யான தேவர்களைவிட மெய்க்கடவுள் அளவு கடந்த வண்ணம் உயர்ந்தவர். அவர்கள் தம்மை பரியாசம்பண்ணவொட்டார்.

இ. மூன்றாம் செய்தி-5:1-6:14.

i. இஸ்ரவேலின் பரிதாபமான வீழ்ச்சி (5:1-3).

''இந்த வசனத்தைக் கேளுங்கள்'' (1). மேலே 3:1ஐப் பற்றிய குறிப்பைக் காண்க.

''பிரலாபக் கவி'' (1). இது வெகு சீக்கிரத்தில் அழிந்துபோகும் இஸ்ரவேல் இராஜ்யத்தைக் குறித்த ஒரு நீண்ட பிரலாபப் பாகத்தின் ஆரம்பமாகும். 2 சாமு. 1:19. 25, 27 இலுள்ள தாவீதின் புலம்பலை இத்துடன் ஒத்திட்டுப் பார்ப்பது நலம்.

''இஸ்ரவேலின் கன்னிகை'' (2). ஏசாயா தீர்க்கன் பன்முறை எருசலேமைக் குறித்து இம்மொழியைப் பயன் படுத்தியுள்ளார். ஆனால், இவ்விடத்தில் இஸ்ரவேல் நாடு முழுவதையும் குறிக்கும் போலும்.

''ஆயிரம்பேரை அனுப்பிய நகரத்துக்கு நூறுபேரும். நூறுபேரை அனுப்பிய நகரத்துக்குப் பத்துப்பேரும் மீந்தி

ருப்பார்கள்'' (3), இது எத்தனை பயங்கரமான தோல்வி யும் நஷ்டமுமாயிருந்திருக்கும்! எப்படியெனில், அசீரியர் இஸ்ரவேல் நாட்டைத் தாக்கும்போது பத்தில் ஒருவன் தான் உயிருடன் தப்புவான்.

ii. யெகோவா மிகுந்த தாபந்தத்தோடு தம் மக்களை அழைக்கிறார் - 5;41-5.

''என்னைத் தேடுங்கள்'' (4). பெத்தேலைத் தேடா திருங்கள்'' (5). ''கர்த்தரைத் தேடுங்கள்'' (6). 'தீமை யைத் தேடாதிருங்கள்.... நன்மையைத் தேடுங்கள்'' (14). இவ்வசனங்களில் ஐந்துமுறை பயன்பட்டிருக்கும் ''தேடுங் கள்'' என்கிற பதத்தை ஆராய்ச்சி செய்வது மிகவும் நல மாகும். இஸ்ரவேலரின் வீழ்ச்சி எவ்வளவு விசனகரமாயி ருந்தும் அவர்கள் ஆண்டவரிடம் திரும்புவார்களேயாகில் அவர்கள் திரும்பவும் ஆசீர்வதிக்கப்படுவதற்கு நம்பிக்கை யுண்டு.

''பெத்தேலைத் தேடாதிருங்கள், கில்காலுக்குப் போகாதிருங்கள், பேயேர்ஷெபாவுக்குக் கடந்து செல்லா திருங்கள்'' (5). இந்த முக்கியமான தொழுகை ஸ்தலங் களுங்கூட வெளி நாட்டாருக்கு இரையாகும் நாளில் அங்கு வணங்குகிறவர்களை அந்த ஸ்தலங்களில் எப்படித் தப்புவிக்கக்கூடும்?

''பட்சிக்கும் அக்கினி யோசேப்பின் வீட்டில் பற்றி யெரியும்'' (6). கடவுளது கோபாவேசம் அளவு கடந்த வண்ணம் பற்றியெறிந்தால் ஒருவனும் அதை தணிக்க முடியாது. முழு சங்காரமும் உண்டாகும்?

''நியாயத்தை எட்டியாக மாற்றுகிறீர்கள்'' (7). 6:12ஐயும் காண்க. கர்த்தருக்கு நீதியானது பிரியம், இனிப்பு; அநீதியோ அவருக்கு அருவருப்பு, எட்டியைப் போன்ற கசப்பு.

''கார்த்திகையையும் மிருகசீரிஷத்தையும் உண்டாக்கினவரும்.... அவருடைய நாமம் யெகோவா என்பதே'' (8). இவ்வசனமாவது மெய்க்கடவுளின் மாட்சிமையை விளக்குகிறது (4:13ஐக் காண்க). இஸ்ரவேலின் கடவுள் திரும்ப திரும்பத் தம்மை சர்வ சிருஷ்டி கர்த்தர் என உறுதிபடுத்துகிறார். இவ்வாக்கியமானது அவரை வான ராசிகளையும் இயற்கை சத்துவங்களையும் உண்டாக்கினவராகக் காட்டுகிறது.

''மரண இருளை'' (8 ப. தி.). இது பு. தி.இல் காரிருள் என்று மொழி பெயர்த்திருப்பது பொருத்தமாகும். இது ஒரு மிகவுப் துக்ககரமான அனுபவத்தைக் குறிக்கும் (சங். 23:4). நமது துக்கத்தை மகிழ்ச்சியாக மாற்றக்கூடியவர் நமது ஆண்டவரே. எனவே, எல்லா விதத்திலும் அவருக்குக் கீழடங்கி நடப்பது நீதியும் விவேகமுமாகும்.

''ஊர் வாசலிலே நியாயம் பேசுகிறவர்களை'' (10). பண்டைக் காலப் பட்டணங்களில் வாசலானது மக்கள் கூட்டம் கூடும் இடமும் வாணிகத் துறையாகவும் நகர மூப்பர்களின் நீதி ஸ்தலமாகவும் இருந்தது (உபா. 21:19). எரேமியா தீர்க்கனும் ஏசாயா தீர்க்கனும் ஊர் வாசலில் மக்களைக் கண்டனம்பண்ணினர் (எரே. 17:19; 19:2; ஏசாயா 29:21). ஆமோஸ் என்பவரும் அவ்விடத்தில் அதே விதமாய்ச் செய்திருப்பார். அவர்களைப்போன்ற உண்மையான சாட்சிகளை மக்கள் பகைத்து வெறுத்திருந்தனர்.

''உங்கள் பாதங்கள் மிகுதிஎன்றும் உங்கள் பாவங்கள் ஏராளமென்றும் அறிவேன்'' (12). கடவுளின் உக்கிர கோபாக்கினைக்குக் காரணமான சில பாவங்கள் இங்கு விவரமாகக் குறிப்பிட்டுள. உதா: அநீதியும் கொடுமையும் ஆண்டவர் சகிக்கவொட்டாத அக்கிரமங்களாகும். முக்கியமாக, அவை ஏழைகளுக்கும் ஒழுக்கமுள்ளவர்களுக்கும்

விரோதமாய் நடப்பிக்கப்படும்போது கடவுள் அவற்றினிமித்தம் கோபாவேசம் கொள்ளுகிறார். இப்படிப்பட்ட கொடிய பாவங்களுக்கு ஆளாகாதபடி எச்சரிக்கையாயிருக்கக்கடவோம்.

''தீமையைத் தேடாதிருங்கள்,....நன்மையைத் தேடுங்கள்; தீமையை வெறுத்து நன்மையை விரும்புங்கள்'' *(14, 15)*. இவ்விரு வசனங்களின்மூலம் ஆமோஸ் தீர்க்கன் உண்மையானதும் ஆழ்ந்ததுமான மனஸ்தாபமும் மனந்திரும்புதலும் அவசியம் என்பதாகப் போதிக்கிறார். பக்தியுள்ள தீர்மானங்கள் போதா; உண்மையான மாறுதல் வாழ்க்கையில் காணப்பட வேண்டும். மக்கள் நீதியுள்ள ஒழுக்கத்தை நிலைநாட்ட வேண்டும். அவர்கள் அவ்வாறு ஆற்றினால்தான் கடவுள் அவர்களுக்குக் கருணை அளிப்பார்.

iii. யெகோவின் கார்மேகம் போன்ற நாள் *-5:16-20.*

''கர்த்தரின் நாள்........வெளிச்சமல்ல அந்தகாரமே'' *(18,20)*. யோவேல் *2:2,11, 31*ஐயும் யோவேல் வியாக்கியானத்தின் முன்னுரை, இயற்றிய நோக்கம், 2ஐயும் காண்க. இஸ்ரவேலர் உண்மையாக ஆண்டவரிடம் திரும்புவதேயொழிய வாழ்வடைய அவர்களுக்கு வேறு வழியில்லை என ஆமோஸ் அறிந்துகொண்டார். எனினும், அவர்கள் அவ்வாறு திரும்புவது அரிதாயிருக்கும் என்றும் நினைத்தார் போலும். ஏனெனில், அவர்களது தீய ஒழுக்கம் ஆழமாய் வேர் ஊன்றிப் போனது. ஆனபடியால் ஆண்டவர் தமது மக்களைச் சிட்சிக்கும் நாள் நெருங்கி வந்துவிட்டது என்ற உணர்ச்சி ஆமோஸுக்கு உண்டாயிற்று. மனந்திரும்பாத பாவிகள் அந்நாளை மனமகிழ்ச்சியுடன் எதிர்பார்க்கக் கூடியதன்று. ஐயோ! அவர்கள் யாவராயினும் அந்நாள் அவர்களுக்குச் சர்வ சங்காரமான நிகழ்ச்சியாகும்.

''சிங்கத்துக்குத் தப்பியோடினவன்'' (19). இவ்வாக்கியத்தின் தாற்பரியம் யாதெனில், ஆண்டவர் ஒருவனைத் தண்டிக்கும் நாளில் அவன் ஒரு சமயம் ஒரு தீங்குக்குத் தப்பித்துக்கொள்ளலாம். அப்படித் தப்பித்துக்கொண்டாலும் அதைவிட மோசமான தீங்கில் நிச்சயமாய் அகப்படுவான் என்பதேயாகும்.

(iv) இஸ்ரவேலரின் வீண் விக்கிரக வணக்கம்-5:21-27.

''உங்கள் திருவிழாக்களைப் பகைத்து வெறுக்கிறேன்'' (21). மக்கள் தேவ வணக்கத்திற்குரிய வெளி பிரகாரமான சடங்காசரங்களைக் கைக்கொள்வதில் மிகுந்த ஊக்கமுடையவர்களாய் இருந்தனர் போலும். ''திருவிழாக்களையும்'' ''உற்சவங்களையும்'' மிகக் கரிசனையாக அனுசரித்தனர். உ-ம்: யாத். 23:14 17இல் கூறியுள்ள மூன்று முக்கியமான பண்டிகைகளை ஆசரிக்கச் சகல ஆண்களும் கூடி வந்தனர். மேலும், எல்லாவிதப் பலிகளையும் செலுத்தினர் (22). அவர்களது இருதயமோ கடவுளுக்குப் பிரீதியாயில்லை. அவர்களின் வாழ்க்கை அக்கிரமமும் சீர்குலைந்ததுமாயிருந்தது. ஆகவே, ஆண்டவர் அவர்கள் ஆசரித்து வந்த மார்க்கானுசாரமான ஆசரிப்புகளை வெறுத்தார். ஏனெனில், உண்மையும் தேவ பக்தியுமான வாழ்க்கை ஒருவனிடம் காணப்படாவிடில் அவனது தொழுகை எல்லாம் கடவுளுக்கு அருவருப்பானதேயாகும்.

''நியாயம் தண்ணீரைப்போலவும் நீதி வற்றாத நீரோடையைப்போலவும் புரண்டு ஓடுவதாக'' (24). திரும்பவும் தீர்க்கன் இஸ்ரவேலரைத் தேவ பக்தியும் பரிசுத்தமுமான வாழ்க்கையை நடப்பிக்க வேண்டுமாய் ஏவுகிறார் (மேலே வச. 15ஐக் காண்க). மக்கள் சீர் குலைந்த விதம் நடந்துகொண்ட அக்காலத்துக்குப் பொருத்தமான செய்தி இதுவே: தற்காலமும் இதே

செய்தி அத்தியாவசியமல்லோ? பக்தியுள்ள தீர்மானங்களைச் செய்தபின் வெகு சீக்கிரம் அவற்றை மறந்துவிடுகிறோம்! நீதியாகிய நீரோடைகள் வற்றிப்போகின்றன. நமது வாழ்க்கையில் நீதியானது எப்பொழுதும் வற்றாத நீரோடைகளைப்போலவே ஓடிக்கொண்டேயிருப்பதாக.

''இப்பொழுதே உங்கள் இராஜாவாகிய சிக்கூதையும் உங்கள் தெய்வத்தின் நட்சத்திரமாகிய கீயூனையும் சுமந்து போவீர்கள்'' (26). இஸ்ரவேலர் வனாந்தரத்தில் கர்த்தருக்கென்று பலிகளையும் காணிக்கைகளையும் செலுத்தினது மெய்தான். எனினும் அவர்கள் அசீரிய தேவர்களின் கூடாரங்களையும் சுமந்தபடியால் அவர்கள் செலுத்தினவைகளை ஆண்டவர் அங்கீகரிக்கவில்லை (அப். 7:42,43).

''உங்களை தமஸ்குவுக்கு அப்பால் குடியேறச் செய்வேன்'' (27). அவர்கள் வணங்கிவந்த தெய்வங்கள் உற்பத்தியான தேசமாகிய அசீரியாவுக்கே சிறைப்பட்டு போவது அவர்களுக்கு நியமிக்கப்பட்ட தண்டனையாகும்.

V. சுகஜீவிகளாகிய இஸ்ரவேலர்-6:1-6.

''சீயோனில் சுகஜீவிகளாயிருக்கிறவர்களே, சமாரியா மலையில் கவலையற்றவர்களாயிருக்கிறவர்களே.... ஐயோ! உங்களுக்குக் கேடு வரும்'' (1). முந்திய அதிகாரத்தைப் போலவே இவ்வதிகாரமும் இஸ்ரவேலரைப்பற்றிய பிரலாபமான சொற்களுடையதேயாகும் (5;1). இவ்வாக்கியத்தின்மூலம் ஆமோஸ் இஸ்ரவேலரை மட்டுமன்று யூதாவையும் கண்டனம்பண்ணுகிறார். எனினும் பிற்பாடு இஸ்ரவேலரையே முக்கியமாகத் தாக்குகிறார். இவ்வசனத்தில் சுகமாய் வாழ்ந்துகொண்டிருக்கும் தனவந்தர்களைத் திரும்பவும் குறிப்பிடுகிறார். ''தேடி வருகிறவர்களே.'' இது தேசிய தலைவர்களைக் குறிக்கும். மக்கள்

நீதியான ஆட்சியைத் விரும்பித் தலைவர்களிடம் சென்ற போதிலும் நியாயஞ்செய்வோர் இல்லாமல் தவித்தனர்.

''கல்னேமட்டும் போய்ப் பாருங்கள், அங்கிருந்து பெரிய ஆமாத்துக்குச் செல்லுங்கள், பெலிஸ்தியர் ஊராகிய காத்துக்குப் போங்கள்'' (2). இம்மூன்று பெயர்கள் ஆண்டவர் சமீபத்தில் தண்டித்தவைகளும் யூதரின் தேசத்திற்கு அருகிலுள்ளமைகளுமான இராஜ்யங்களாகும். இஸ்ரவேலர் இம்மூன்று அரசாங்கங்களின் மக்களைக்காட்டிலும் நல்லவர்களா? அவர்கள் தண்டனைக்கு ஆளாயிருக்க இவர்கள் தப்புவார்களா?

''தந்தக் கட்டில்களில் படுத்துத் தங்கள் மஞ்சங்களில் சாய்ந்து.... மதுபானத்தைக் குடங்குடமாய்க் குடிக்கிறார்கள்; ஆனாலும் யோசேப்புக்கு நேரிடும் ஆபத்தைக் குறித்து அவர்கள் கவலைப்படவில்லை'' (4-6). 2:6,8; 3:12; 4:1-இல் கூறிய குறைகூறுதல் இதுவே. டாம்பீகத்தோடு வெகு சௌக்கியமாய்த் ''தங்கள் மஞ்சங்களில் சாய்ந்திருந்து'' அந்தஸ்தும் சொத்துமுடையவர்கள் ஏழைகளை ஒடுக்கி அவர்களின் நியாயத்தை நீதி மன்றங்களில் புரட்டினார்கள். இப்படி உல்லாசமாய் வாழ்ந்து குடித்து வெறித்து அசுசியமான பாடல்களைப் பாடினர்.

vi. இஸ்ரவேல் நாட்டார்மீது சீக்கிரத்தில் விழும் ஆக்கினை-6:7-14.

''ஆதலால், சிறைப்பட்டுப் போகிறவர்களின் முன்னணியில் இப்பொழுதே அவர்கள் போவார்கள்'' (7). அக்கிரமஞ் செய்வதில் முந்திக்கொண்ட செல்வந்தர்களே முதன்முதலாகத் தண்டிக்கப்படுவதாகத் தீர்க்கன் கூறுகிறார்.

''ஒரு வீட்டில் பத்துப்பேர் மீதியிருந்தால் அவர்களும் மாண்டுபோவார்கள்''(9). யுத்தத்திற்குப்பின் கொள்ளை நோய் பரவுவது சர்வசதாரணமான நிகழ்ச்சியாகும்.

அதனால் ஏராளமான மக்கள் மாண்டுபோவர் (4:10ஐக் காண்க).

''பிரேதத்தைத் தகனிக்கிறவனாவது'' (10). யூதர்கள் பிரேதங்களைச் சுடுவது வழக்கமன்று. எனினும், கொள்ளைநோய் ஏராளமானவர்களை வாரிக்கொண்டு போகும் காலத்தில் அவ்வாறு செய்ய நேரிடும் என்பது கருத்தாகும்.

''கர்த்தருடைய நாமத்தை உச்சரிக்கலாகாது.'' அத்தகைய பயங்கரமான நிகழ்ச்சியினால் கடவுள் தங்கள் பேரில் கோபம் கொண்டிருக்கிறார் என்கிற உணர்ச்சி மக்களுக்கு உண்டாகி அவரது நாமத்தை உச்சரிக்கப் பயப்படுவர்.

''பெரிய வீடு....சிறிய வீடு'' (11). சொத்துடையவர்களின் பெரிய வீடுகள் இடித்துப் போடப்படும். ஏழைகளின் சிறிய வீடுகளும் உண்டாகப்போகும் அழிவுக்கு முற்றுமாய்த் தப்புவதில்லை என்பது இவ்வாக்கியத்தின் பொருளாகும்.

''நீதியின் கனியை எட்டியாகவும் நீங்கள் மாற்றினீர்களே'' (12). மேலே 5:7ஐப் பற்றிய குறிப்பை காண்க. கடவுளின் அருளால் சுகமாய் வாழ்ந்துகொண்டிருக்கும் மக்கள் அநியாயமும், அநீதியுமாய் நடப்பது மகா அதிசயமல்லோ? அவ்வாறு நடப்பது அநீதமாகமட்டுமல்ல, வெறும் பாறையை உழப்பார்ப்பது போன்ற மூடத்தனமாகவும் இருக்கிறது.

''இல்லாத பொருளைப்பற்றிப் பெருமை பாராட்டுகிறீர்கள்'' (13). இது தெய்வமல்லாத பொன் கன்றுக்குட்டியாகிய சுவாமியைக் குறிக்கும் (1 கொரி. 8:4ஐக் காண்க).

''ஆமாத்துக்குப் போகிற வழிதொடங்கி அராபாவின் நீரோடை வரைக்கும்'' (14). அசீரியர் வந்து யூதரின்

முழு தேசமாகிய இஸ்ரவேல் நாட்டையும், யூதேயா நாட்டையும் தாக்கி, வட எல்லையாகிய ஆமாத்து தொடங்கி தென்முனையிலுள்ள நீரோடைவரைக்கும் மக்களை ஒடுக்குவார்கள் என்பது அர்த்தமாகும். இவ்வாகமத்தின் மூலம் எபி. 10:31 எவ்வளவு அதிசயமான உதாரணமாகிறது பாருங்கள்!

4. கடவுளின் திட்டம் இன்னதெனக் கூறுதல்-7:1-9:10.

இஸ்ரவேலர் மனந்திரும்பாமல் இருந்தபடியால் அவர்களைத் தண்டிப்பதே கடவுளின் திட்டமாயிற்று. ஆமோஸ் தீர்க்கன் இந்தத் தூதை முன்னமே பன்முறை கூறியுள்ளார். இப்பொழுதோ அவர் அதை சற்று விவரமாக உரைக்கிறார். இது சம்பந்தமாகத் தாம் கண்ட 5 தரிசனங்களைப் பயன்படுத்துகிறார்.

அ. எல்லாவற்றையும் பட்சிக்கும் வெட்டுக்கிளிகளின் தரிசனம் - 7;13.

''கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் காண்பித்ததாவது'' (1). வ. 4, 7; 8:1ஐயும் காண்க. இந்தத் தரிசனங்களைக் கொண்டு தாம் இஸ்ரவேலர் சம்பந்தமாகச் செய்த திட்டம் இன்னதெனத் தமக்குக் காட்டினதாக ஆமோஸ் இச்சொல்லின்மூலம் கூறுகிறார்.

''இராஜாவின் புல்லறுப்புக்குப் பின்பு...வெட்டுக்கிளிகளை உண்டாக்கினார்'' யெரொபெயாம் அரசன் புல்லறுப்பு தமக்கு வேண்டுமென்று ஆசித்து அதை மக்களிடம் அநியாயமாகப் பிடுங்கினார் போலும். ஆண்டவரோ வெட்டுக்கிளிகளைக் கொண்டு புல்லை அழித்துவிட்டு அவரைத் தண்டிப்பதாக எச்சரிக்கிறார். அதுவுமன்றி புல்லைமட்டுமல்ல, பூண்டு செடி மரமாகியவைகளையும், அழித்து மக்களுக்கு ஆகாரமில்லாதபடி தண்டிப்பதாகவும் எச்சரிக்கிறார்.

''கர்த்தராகிய ஆண்டவரே, மன்னித்தருளும்'' (2). கர்த்தர் அதை குறித்து மனமாறினார் (3). ஆமோஸ் என்பவர் மக்களுக்காக மன்றாடினார். ஆண்டவர் உடனே தாம் குறித்த வாதையை வருவியாமல் இன்னும் நீடிய பொறுமையைக் காட்டினார்.

ஆ. எல்லாவற்றையும் அழிக்கும் அக்கினியின் தரிசனம் -7;4-6.

''கர்த்தராகிய ஆண்டவர் அக்கினியால் நியாயம் விசாரிக்கும்படி அழைத்தார்'' (4). ''அது மகா ஆழத்தைப் பட்சித்தது; அது வயல் நிலத்தையும் பட்சிக்க வரும்''. ஆமோஸ் இவ்விரண்டாம் தரிசனத்தில் பயங்கரமாய்ப் பிரவாகித்துக் கொண்டிருக்கும் அக்கினியைக் கண்டார். அது சமுத்திரத்தின் தண்ணீரைப் பட்சித்துப் போட்டு, வயல் நிலத்தையும் பட்சிக்க வந்தது. வெட்டுக்கிளிகளுக்குத் தப்பிப் பின்னால் வளர்ந்த புல் முதலியவைகளை அக்கினியானது அழிக்கத் தலைப்பட்டது. தீர்க்கன் பாவஞ்செய்த மக்களுக்காகத் திரும்பவும் பரிந்து பேசின போது ஆண்டவர் அவர்களுக்கு இன்னும் தவணை அளிக்கச் சித்தங்கொண்டார்.

இ. பரிசோதனை செய்யும் தூக்கு நூலின் தரிசனம் -7:7-9.

''....நடுவே தூக்கு நூலை விடுகிறேன்'' (8). இஸ்ரவேலின் மார்க்கானுசாரமானவையும் (''மேடைகள்....... பரிசுத்த ஸ்தலங்கள்'' வ. 9. அரசியலின் அதிகாரிகளும்- ''யெரொபெயாம் வம்சத்தார்'' வச. 9). செம்மையான நிலையில் இல்லாமல், சாய்ந்த மதிலைப்போன்று சீக்கிரத்தில் விழுந்துபோகும் நிலையிலுள்ளது என்பதாக ஆண்டவர் இத்தரிசனத்தின்மூலம் காட்டுகிறார். அவ்விராஜ்யமாகிய கட்டடம் இடிந்துபோகும் நிலையிலிருந்து சீக்கிரத்தில் விழுந்து அழிந்துபோகும். ஆண்டவர் தமது

தூக்கு நூலைக்கொண்டு அதை பரிசோதனை செய்த போது அது நேரே நிற்கவில்லை என்பது புலப்பட்டது. ஆகவே, அது இனி நிற்கமுடியாது. ''வாளோடு வருவேன் என்றார்'' (9). அதாவது, உண்டாகும் அழிவானது யுத்தத்தினால் உண்டாகும் (2 இரா. 21:13; ஏசாயா 34:11ஐக் காண்க).

ஈ. நிகழ்ந்த சில சம்பவங்கள்-7:10-17.

''பெத்தேலில் ஆசாரியனாயிருந்த அமத்சியா''(10). ஆமோஸ் என்பவர் தூக்குநூல் தரிசனத்தைப் பெத்தேலில் இருந்த சுவாமி கோவிலண்டை மக்களுக்குத் தெரிவித்தார் போலும். தீர்க்கன் பேசும்போது அரசனைக் குறிப்பிட்ட வுடனே (''யெரொபெயாம் வம்சத்தாருக்கு'') அந்தக் கள்ள ஆசாரியன் அதை கேள்வியுற்றுக் கோயிலை விட்டு வெளியேறி ஆமோஸ் பேசாதபடி நிறுத்திவிடப் பார்த்தான், அதுவுமன்றி, அவர் இராஜதுரோகம் பண்ணுகிறதாக அரசனுக்குத் தெரிவித்தான்.

''தரிசனக்காரனே, நீ போய்விடு, யூதா தேசத்துக்கு விரைந்தோடு'' (12). கள்ள ஆசாரியன் உண்மையான தீர்க்கனை இகழ்ந்து பேசித் தன் சுய நாடாகிய யூதேயா வுக்குப் போகச் சொன்னான் (ஏசாயா 30:10;2 தீமோ. 4:3 ஐக் காண்க).

''அமத்சியாவுக்கு மறுமொழியாக ஆமோஸ்'' (14-17). ஆமோஸ் சற்றேனும் அமத்சியாவுக்காவது அரசனுக்காவது அஞ்சாமல் தாம் பெற்ற தேவ அழைப் பின் அதிகாரத்தைச் சாதித்து, தாம் முன்னே கூறியதை விட மகா கடினமாகத் தேசத்தின் மார்க்கத் தலைவனை யும் அரசாங்கத் தலைவனையும் கண்டித்துப் பேசினார்.

''உன் மனைவி....வேசியாவாள்'' (17). அதாவது, உண்டாகப் போகும் யுத்தத்தில் எதிரிகளின் பட்டாளத் தார் எல்லாப் பெண்களையும் வேசிகளைப்போல கையாடு

வர். ''திட்டான தேசத்திலே.'' இது அசீரியாவாகிய அந்நிய நாட்டைக் குறிக்கும்.

உ. கனிந்த பழங்களுள்ள கூடையின் தரிசனம்-*8:1-14.*

ஆமோஸ் தீர்க்கன் உரைத்த பதிலைக் கேட்ட அமத்சியா அடங்கினான்போலும். அது எப்படி இருந்தாலும் அவன் அதற்குப்பின் ஆமோசைத் தொந்தரவு செய்ததாகத் தெரிகிறதில்லை. ஆகவே, தீர்க்கன் திரும்பவும் தீர்க்கதரிசனம் உரைக்க ஆரம்பித்தார். கனிந்த பழங்களுள்ள கூடையின் தரிசனத்தைக் கீழ்க்காணும் மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்:

i. தண்டனை வெகு சீக்கிரத்தில் விழும் என்கிற தூது-*1-3.*

''இதோ, கனிந்த பழங்கள் நிறைந்த கூடை'' *(1,2)*; பழம் பழுத்து நைந்துபோகிறதே. அதுபோன்று இஸ்ரவேலரின் பாவமும் தண்டனைக்கு ஏற்றவாறு முற்றிப் போயிற்று.

''என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு முடிவு வந்தது'' *(2)*. இதன் பொருள் யாதெனில், உண்டாகும் தண்டனையானது வெகுவாய்க் கிட்டிற்று என்பதேயாகும். ''பாவம் பூரணமாக, அது மரணத்தை ஜெனிப்பிக்கும்'' (யாக். *1:15*).

ii. செல்வந்தரின் பொருளாசையும் அநீதியும் அளவு கடந்ததேயாகும்-*4-6.*

ஏழைகளை மிதித்து....என்று சொல்லுகிறவர்களே'' *(4,6)*. ஏழைகள் வைத்துள்ள சிறு நில உடைமைகளை வாங்கிக்கொண்டு அவர்களைத் தங்களுக்கு அடிமைகளாக்கிக்கொண்டனர் போலும்.

''மரக்காலைக் குறைத்துச் சேர்க்கல் நிறைய அதிகமாக்கிக் கள்ளத் தராசை வைத்து'' (5). முன் சொன்ன

பாவங்காளாடு ஆமோஸ் இன்னொரு பாவத்தைக் குறித்து மக்களைக் கண்டனம் பண்ணினார். அது யாதெனில், வர்த்தகம் செய்வதில் வஞ்சகம்பண்ணுதல் என்பதே. ஏனெனில், மக்கள் நிறை, அளவு, காசாகியவைகள் சம்பந்தமாக அநியாயஞ் செய்யும் வேளை எப்போது வாய்க்கும் என்று ஆவலாய்க் காத்திருந்தனர் (லேவி. 19:35,36; உபா. 35:15; மீகா 6:11ஐக் காண்க).

''தரித்திரரைப் பணத்துக்கும்.... வாங்குவோம்'' (6). மேலே 2:6ஐப் பற்றிய குறிப்பைக் காண்க.

iii. தண்டனையின் உறுதி, முழுமை, விளைவு ஆகியவை-7-14.

அ. தண்டனை உண்டாவது மகா உறுதியானது (7). ''கர்த்தர்....ஆணையிட்டு, அவர்கள் செய்த யாவற்றையும் நான் ஒருபோதும் மறப்பதில்லை.'' தீர்க்கனின் கருத்தாவது: அக்கிரமத்தை மறவாமலும் அதைக் கண்சாடையாய் விடாமலும் இருக்கும் வானாதி கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பது எவ்வளவு உறுதியோ கடவுளது ஆக்கினையானது இஸ்ரவேலரின்பேரில் விழுவது அவ்வளவு உறுதியாகவேயிருக்கிறது என்பதே.

''யாக்கோபின் மகிமை.'' இஸ்ரவேலரின் உண்மையான மகிமை யெகோவாவின் மகத்தான நாமமாகும். அந்நாமத்தின்பேரில் ஆண்டவர் ஆணையிடுகிறார். 6:8இல் தாம் ''யாக்கோபுடைய மேன்மையை'' வெறுத்தாக அவர் கூறியுள்ளார். ஆனால், அவர் வெறுக்கும் அவர்களது மேன்மை அவர்கள் மெய்க் கடவுளுக்குப் பதிலாகத் தேடி வந்த கள்ள சுவாமிகளின் நாமமேயாகும்.

ஆ. வரும் தண்டனை முழுமையான அழிவாகவேயிருக்கும் (8), ''பூமியெல்லாம் நீலநதிபோல உயர்ந்து பொங்கிக் கொதித்து....'' ஒரு நதி பிரவாகித்துத் தன் கரையைக் கடந்து ஓடும்போது சுற்றியுள்ள நிலத்தை

அழிப்பதுபோன்று உண்டாகப்போகும் அழிவானது நாட்டையே நிர்மூலமாக்கும் என்பது அதன் கருத்தாகும். ''எகிப்தின் நதிபோல'' அதாவது, பிரவாகித்தோடும் நீலநதி எல்லாப் பொருள்களையும் வாரிக்கொண்டு போய்ச் சமுத்திரத்தில் கொட்டுவது போன்று, இஸ்ரவேல் இராஜ்யம் ஓர் அந்நிய நாட்டில் சேரும்வரைக்கும் வாரிக்கொண்டு போகப்படும்.

இ. தண்டனையின் விளைவு *(9-14)*. ''அந்நாளிலே, நான் பட்ட பகலிலே பூமியை அந்தகாரப்படுத்துவேன்'' *(9)*. இவ்வாக்கியம் ஒருவேளை கி. மு. 763-ஆம் ஆண்டில் நிகழ்ந்த சூரியக் கிரகணத்தைக் குறிக்கும். எனினும், அதை காட்டிலும் மகா பயங்கரமான ஒரு நிகழ்ச்சியையும் ஆமோஸ் இங்கு குறிப்பிட்டது உறுதியாகும். மேலே *3*, இ *(3)*இல் யெகோவாவின் கார்மேகம் போன்ற நாளைப்பற்றிய குறிப்பைக் காண்க *(5:16:20)*. தீர்க்கன் இவ்விடத்தில் இயற்கையற்றதும் தேவாதீனமுமான ஓரதிசய காரிருள் உண்டாகும் என்பதாக முன்னறிவித்திருக்கிறார். அது வரும் தண்டனையின் முதல் அம்சமாகும். ஒரு சமயம் இரண்டு ஆண்டுகளுக்குப்பின் உண்டான பூகம்பத்தோடு சம்பந்தப்பட்டிருக்கலாம் *(1:1)*.

''உங்கள் திருவிழாக்களைப் புலம்பலாகவும்....மாற்றுவேன்'' *(10)*. இஸ்ரவேலரின்மீது விழும் ஆக்கினையாகிய அழிவின் இரண்டாம் அடையாளம் இதுவே. இந்தத் தீர்க்கதரிசனம் மிகவும் அதிசயவண்ணம் நிறைவேறினதை யூதரின் பிற்கால வரலாற்றின்மூலம் அறிந்துகொள்ளுகிறோம். இஸ்ரவேலர் பாபிலோனில் புலம்பின புலம்பல் மகா மனக் கசப்புடையது என்பதை 137-ஆம் சங்கீதம் தெளிவுறக் காட்டுகிறது.

''பஞ்சம் உண்டாகச் செய்வேன்'' *(11-13)*. இந்தப் பஞ்சம் இருவகைப்படும். அவையாவன: ஆண்டவரின்

வசனம் கேட்கக் கிடையாத பஞ்சம், இயற்கையான தண்ணீரில்லாத பஞ்சம் என்பவைகளே. தமது திருவசனத்தைக் கேட்க மாட்டாத மக்களைக் கர்த்தர் அகோரத் தண்டனையால் தண்டிப்பார். அவர்கள் படாத பாடு படுகையில் நோக்கிக் கூப்பிடுவர். அவரோ அவர்களுக்குத் தமது தாசரைக் கொண்டு வாக்களிக்கமாட்டார். திருமறைப்படி நடக்க மனமற்ற மக்கள் அந்தத திவ்விய மொழியை இழந்துவிடுவர். நாமும் இந்த வாக்கியங்களினால் எச்சரிப்படைவோமாக. மேலும் ஆவிக்குரிய பஞ்சத்தோடு இயற்கையான பஞ்சமும் உண்டாகும் என்கிறார் தீர்க்கன் *(13)*.

''சமாரியாவின் பாவத்தின்மேல் ஆணையிட்டு'' *(14)*. வரும் தண்டனையின் கடைசி முடிவாக, விக்கிரக வணக்கம் செய்பவர்கள் நிர்மூலமாவர். எவ்வாறெனில், கார்மேகம் போன்ற கடவுளின் பயங்கரமான நாளில் அவர்கள் கும்பிடும் சுவாமிகள் அவர்களைக் கடவுளின் கைக்குத் தப்புவிக்க இயலாது போவர். ''பெயேர்செபாவைக் காப்போன்.'' பொன் கன்றுக்குட்டிகளின் பேரிலும் ''பெயேர்செபாவைக் காப்போன'' பேரிலும் ஆணையிடுவது இஸ்ரவேலரின் வழக்கமாயிருந்ததுபோலும். அதுபோல, தற்காலத்திய இஸ்லாம் மதத்தினர் மெக்காவுக்குச் செல்லும் புனித வழியின்பேரில் ஆணையிடுகின்றனர்.

ஊ. பலிபீடத்தண்டை ஆண்டவர் நிற்பதின் தரிசனம் *-9:1-10.*

''ஆண்டவரைப் பலிபீடத்தண்டை நிற்கக் கண்டேன்'' *(1)*. ஆமோஸ் என்பவர் முந்திய நான்கு தரிசனங்களைத் தெரிவித்ததுபோன்று இவ்வைந்தாம் தரிசனத்தையும் பெத்தேலிலுள்ள மக்களுக்குத் தெரிவித்தார் போலும். இதுவும் மற்ற நான்கு தரிசனங்களைப்போலத் தேவபக்தியற்ற மக்கள்மேல் விழும் ஆக்கினைக்கும் தண்டனைக்கும் உதாரணமான காட்சியேயாகும். ஆண்டவர்

பெத்தேலிலுள்ள பொன்கன்றுக்குட்டிக்குப் பிரதிஷ்டை செய்யப்பட்ட பலிபீடத்தினண்டை அதிகாரமுடைய வராய் ஏறி நிற்பதைத் தீர்க்கதரிசி கண்டார்.

''போதிகைகளை அடித்து....'' அதாவது, அந்தச் சுவாமி கோயிலின் அஸ்திபாரமே அதிரவும் கோயிலில் தொழுபவர்கள்மேல் விழுந்து அவர்களைக் கொல்லவும் தக்கதாக அந்தக் கோயிலின் வாசலிலுள்ள போதி கைக் கட்டைகளை ஓங்கி அடிக்கச் சொல்லுகிறார் ஆண் டவர். இது சீர்குலைந்து மக்களை அவர் நாசப்படுத்து வதற்கு உவமானமான காட்சியாகும். அரசியலும் அதன் சுவாமி கோயிலும் ஒரே சமயத்தில் அழிந்துபோக வேண்டும்.

''பாதாளபரியந்தம் அவர்கள் தோண்டி இறங்கினா லும்....வானபரியந்தம் அவர்கள் ஏறினாலும்....அவர்கள் ஒளித்துக்கொண்டாலும் .... சமுத்திரத்தின் ஆழத்திலே அவர்கள்... மறைந்துக்கொண்டாலும்....அவர்கள்....சிறைப் பட்டுப் போனாலும்'' (2-4). சங். 139:7-12ஐக் காண்க. இதன் கருத்து யாதெனில், இஸ்ரவேல் நாட்டில் ஒருவரும் தப்பிக் கொள்ளாதபடி சகலரும் மாண்டுபோகவாவது சிறைப்பட்டுப் போகவாவது வேண்டுமென்று ஆண்டவர் தீர்மானித்திருக்கிறார். அதுவுமன்றி, சிறைப்படுபவர் களும் சிறையிருப்பில் மாளுவர் என்பதே. இவ்வாக்கியங் களிலடங்கிய தீர்க்கதரிசனம் எப்படி நிறைவேறிற்று எனில், இஸ்ரவேல் நாட்டார் 200ஆண்டுகளுக்கு மேலாக நெடுநாள் அடிமைகளாகக் கழித்தனர். ஆகவே, சிறைப்பட்டுப்போன யாவரும் அவர்கள் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் பாபிலோன் நாட்டில் இறந்துபோ யினர்.

''சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர்....அவருடைய நாமம் யெகோவாவே....இஸ்ரவேலரை எகிப்து தேசத்திலி ருந்தும்....நான் அழைத்துவரவில்லையோ?'' இப்போது ஆமோஸ் வரப்போகிற தண்டனையைவிட்டு அதை விதிக்

கும் நீதிபதியைக் முக்கியமாகக் குறிப்பிடுகிறார். அவர் சர்வவல்ல நாதராயிருப்பதால்தான் அவர் விதிக்கும் தண்டனை உறுதியாகவே விழும். ஆண்டவர் தமது தாசன் மூலமாய்த் தமது மகத்துவம் இன்னதென்றும் முற்காலத்தில் தாம் அளித்த ஆசீர்வாதங்கள் இன்னின்னதென்றும் தமது மக்களுக்கு நினைவுறுத்துகிறார் (2:9, 10ஐக் ஒத்திட்டுப் பார்க்க).

''நீங்கள் எத்தியோப்பியரைப் போன்றவர்கள் அல்லவோ?'' (7). இஸ்ரவேலர் அவர்கள் இழிவாகப் பாவித்த எத்தியோப்பியரைக் காட்டிலும் கடவுள் பார்வையில் மேலானவர்களல்ல என்பது இதன் பொருளாகும்.

''இஸ்ரவேலை எகிப்து தேசத்திலிருந்தும் பெலிஸ்தியரைக் கப்தோரிலிருந்தும் சீரியரைக் கீரிலிருந்தும் நான் அழைத்துவரவில்லையோ?'' (7). (கீர் என்கிற இடம் தமஸ்குவுக்கு அப்பால் இருந்தது). அதாவது, கடவுள் இஸ்ரவேலரை எகிப்தைவிட்டு மட்டுமல்ல, அவர்கள் பகைத்த பெலிஸ்தியரைக் கிரேத்தா தீவை விட்டும் சீரியரைத் தமஸ்கு நகருக்கு அப்பாலிலிருந்தும் கொண்டுவந்த சர்வ வல்லவராவர் என்பதே.

''பாவமுள்ள இராஜ்யத்துக்கு விரோதம்....அதை அழித்து விடுவேன்....எனினும் யாக்கோபின் வம்சத்தாரை முற்றிலும் அழிக்கமாட்டேன்'' (8). இவ்வாக்கியத்தின் மூலம் ஆண்டவர் தாம் இஸ்ரவேல் அரசாங்கத்தை முற்றுமாய் அழிப்பதாகவும் இஸ்ரவேல் வம்சத்தாரையோ முற்றுமாய் அழிப்பதில்லை என்பதாகவும் விளம்புகிறார். இத்தீர்க்கதரிசன மொழிகள் சொல்லடங்கா அதிசய வண்ணம் நிறைவேறின பாருங்கள். எவ்வாறெனில், இஸ்ரவேல் அரசு பூமியிலிராதபடி முழுமையாக அற்றுப்போயிற்று; யூத குலத்தினரோ உலகமெங்கும் சிதறுண்டு போயினும் யாவரும் அறிந்து வியந்து கொள்ளத்தக்கதாக கடவுளால் பாதுகாக்கப்பட்டு இந்நாள்மட்டாகத் தனி குலமாக இருந்து வருகின்றனர்.

5. முடிவுரை (9:11-15)

''அதை நான் எடுத்துக்காட்டி....பூர்வ நாட்களில் இருந்ததுபோல அதை கட்டுவேன்....அவர்களை அவர்கள் தேசத்தில் நாட்டுவேன்'' (11-15). ஆமோஸ் என்பவர் கூறிய தூது காரிருளடைந்த இரவு போன்றதல்லோ? ஆயினும், மிகவும் மனமகிழ்ச்சிக்கினமானதும் பட்ட பகல் போன்றதுமான காலம் திரும்ப வரும் என்பது உறுதியாகும்.

''தாவீதின் கூடாரம்'' (11). இதன் தாற்பரியம் என்னவெனில், தாவீதின் வம்சத்தாரான அரசர்கள் ஒன்றாக இணைக்கப்பட்ட இஸ்ரவேல் அரசாங்கத்தைத் திரும்ப ஆளுவர் என்பதே.

''உழுகிறவன் அறுக்கிறவனைத் தொடர்ந்து பிடிப்பான்'' (13). அதாவது, பலஸ்தீனா நாட்டின் நிலமானது வெகுவாகச் செழித்தோங்கும். யோவேல் தீர்க்கன் இதே தீர்க்கதரிசனமுரைத்தார் (யோவேல் 3:18). மேலும், ஆண்டவரின் சகோதரராகிய யாக்கோபு இந்த மொழியை எடுத்துரைத்தார் (அப். 15:15-17). தற்காலம் இத்திரு வாக்கு கொஞ்ச கொஞ்சமாக நிறைவேறி வருகிறது.

''துன்ப நிலையை மாற்றுவேன்'' (14). இவ்வசனத்தின் பிரகாரம் யூத குலத்தார் பாபிலோன் நாட்டை விட்டு பலஸ்தீனாவுக்குப் திரும்பிச் சென்றனர். அதுமட்டு மன்றித், தற்காலம் அவர்களில் ஏராளமானவர்கள் பல தேசங்களினின்று தங்கள் சுய நாட்டிற்குப் போய்க் குடியேறி வருகின்றனர். இஸ்ரவேல் அரசு மறுபடியும் ஏற்பட்டிருக்கிறது.

''உன் கடவுளாகிய கர்த்தர் சொல்லுகிறார்'' (15). இஸ்ரவேலின் தேவனாகிய யெகோவா என்பவர் இந்த மொழிகளைத் தமது தாசனாகிய ஆமோசுக்கு உரைத்தார் என்பது திண்ணம். ஆகவே அவை ஏற்றகாலத்தில் நிறைவேறும் என அறிந்துகொள்ளவோமாக.

6

ஒபதியா

முன்னுரை

எழுத்தாளர்

பழைய ஏற்பாட்டாகமத்திலடங்கிய மற்றெல்லா நூல்களைக்காட்டிலும் மிகவும் சுருக்கமான ஆகமம் இது. இது ''ஒபதியாவின் தரிசனம்'' எனப்படும் (1). திருமறையில் ஒபதியா என்று பெயர்கொண்ட பன்னிரண்டு வெவ்வேறு மனிதரைக் குறித்துப் படிக்கலாம். (தமிழ் வேதாகம ஒத்த வாக்கிய அகராதி பக்கம் 103 ஐக் காண்க). இந்த 12 பேரில் இவ்வாகமத்தை இயற்றியவர் இன்னாரென அறிந்துகொள்வதற்கு வகையில்லை. ஒபதியா என்கிற எபிரெய பெயருக்கு ''யெகோவாவின் தாசன்'' என்றர்த்தமாகும்.

இயற்றிய காலம்

நேபுகாத்நேச்சார் அரசன் எருசலேம் நகரை அழித்த பின்பு ஒபதியா தீர்க்கன் இதை எழுதலானார் (அதாவது, கி. மு. 586—ஆம் ஆண்டுக்குப் பின்பு), ஏனெனில், ஒபதியா 11-14, 20இல் எருசலேமின் அழிவையும் யூதரின் சிறையிருப்பையும் குறித்துப் படிக்கிறோம். யூதேயா நாட்டார் பாபிலோன் நாட்டிற்குச் சிறைப்பட்டுப்போய்ச் சில நாள்களான பின்னர் இந்தத் தீர்க்கதரிசனத் தூதை எழுதினார்போலும்.

பொருள்

ஏதோமியர் யூதேயா நாட்டாருக்குச் செய்த துரோகம், கொடுமை ஆகியவைகளினிமித்தம் அந்தக் குலத்தாரைக் கண்டித்து அவர்களது அரசு முற்றுமாக அழித்துப் போடப்படும் எனக் கூறுவதே இச்சுருக்கமான நூலின் பொருளாகும். ஏதோமியர் யூதருக்கு நெருங்கிய உறவினர் என்பது இந்தப் பொருளுக்கு முக்கியமான ஒரு நிபந்தனையாகும். எவ்வாறெனில், யூத குலத்தார் யாக்கோபு என்பவரின் சந்ததியாராயிருக்க ஏதோமியர் யாக்கோபின் சகோதரனாகிய ஏசாவின் சந்ததியாராயிருந்தனர் (ஏசாவின் மறுபெயர் ஏதோம் என்பது). ஆதி. 36:1, 8, 9ஐக் காண்க. ஏசா, யாக்கோபு என்கிற இவ்விரு சகோதரரைக் குறித்தும் அவர்கள் ஒருவரையொருவர் நடத்திய விதத்தைக் குறித்தும் கடவுள் அவர்களையும் அவர்கள் சந்ததியாரையும்பற்றி கூறியதைக் குறித்தும் ஆதி. 25:21-34 இலும் ஆதி. 36இலும் படிக்கலாம்.

ஏசா என்பவன் ''சீர்கெட்டவன்'' எனத்திருமறையில் எழுதியிருக்கிறது. அதாவது, அவன் ஆவிக்குரியவைகளை உணராதவன் (எபி. 12:16). தன் சேஷ்ட புத்திர சிலாக்கியத்தை விற்றுப்போட்டுக் கடவுள் தனது பாட்டனாகிய ஆபிரகாமுடன் செய்த ஒப்பந்தத்தை அசட்டை செய்தான்.

ஆண்டவர் யாக்கோபில் அன்புகூர்ந்தார்; ஏசாவையோ பகைத்தார் (மல். 1:2, 3). ஆதிமுதற்கொண்டு ஏதோமியருக்கும் யூதரின் பல கோத்திரத்தாருக்கும் பகை இருந்துகொண்டே வந்தது. ஏதோமியரின் சரிதைக்குரிய இன்னும் சில விவரங்கள் ஒபதியாவின் ஆகமத்தில் கீழ்க் காணுமாறு அடங்கியிருக்கிறன.

பிரிவுகள்

1. ஏதோம் நாட்டின் அரசு சீக்கிரத்தில் அழிந்து போதல்-1-9.

2. ஏதோமியர் யூதரைப் பகைத்து இம்சை செய்தல் -10-14.

3. ஏதோம் முதலிய அரசுகளுக்குக் கர்த்தரின் நாளில் உண்டாகும் தண்டனையும் யூதேயாவின் அரசாட்சி திரும்ப ஏற்படுதலும்-15-21.

விளக்கவுரை

1. ஏதோம் நாட்டின் அரசு சீக்கிரத்தில் அழிந்துபோதல்-1-9.

''கர்த்தராகிய ஆண்டவர் ஏதோமைப்பற்றிச் சொல்லுகிறது இதுவே'' (1). ஏதோம் நாடு சவக் கடலுக்குத் தென்திசையிலுள்ளது. அது சுமார் 160 கி. மீ. நீளமும் 32 கி. மீ. அகலமுமான மிகவும் சிறிய நாடாகும். அந் நாட்டாரின் அக்கிரமத்தையும் அவர்களுக்குண்டாகும் அழிவையும் குறித்து ஒபதியா என்பவர் மட்டும் எழுதினார் என நினைக்கலாகாது. பின்வரும் வேத பாகங்களிலும் இவைகளைக் குறித்று எழுதியிருக்கக் காணலாம் (ஏசாயா 34:5-17; எரே. 25:21;49:7-22; புல. 4:21, 22; எசே. 25:12-14;32:29; 35:1-15; யோவேல்3:19; ஆமோஸ் 1:11,12;9-11; சங். 137:1-9; மல். 1:2-5).

''தூதுவன் ஒருவன் ஜாதிகளிடம் அனுப்பப்பட்டதாக'' (1). இவ்வாக்கியத்தை வச. 7 ஒடு ஒத்திட்டுப் பார்த்தால் ஏதோமியருக்கு நண்பர்களாயிருந்த பல்வேறு நாட்டார் அவர்களுக்குத் துரோகம்பண்ணுவதாக இங்கு கடவுள் கூறுகிறார் என்பது புலப்படும். மேலும், அந்தப் பல அரசுகள் தங்களுக்கு அருகிலுள்ள அரசுகளை ஏதோமியரைத் தாக்கும்படி அழைப்பர் என்பதும் பொருள்படும்.

''உன் இருதயத்தின் அகந்தை'' (3). ஆண்டவர் இந்தக் குலத்தாரைத் தண்டிக்க வேண்டிய சகல பாவங்களுக்கும் ஆணிவேர் அகந்தையே.

''கன்மலை வெடிப்புகளில் வாசம்பண்ணி உயரத்தில் உன் ஆசனத்தை வைத்திருப்பவனே'' (3). ஏதோமியர் தங்கள் அரணிப்பான மலைகளில் வெகுவாய்ப் பெருமை பாராட்டினர். ஏனெனில், அவர்கள் நாட்டில் 300 அடி வரைக்கும் உயரமும் மகா செங்குத்துமான பல மலைகள் இருந்தன. அம்மலைச் சரிவுகளில் எண்ணிறந்த கெபிகளு முண்டு.

''நீ கழுகைப்போல உயரப்போனாலும், நீ நட்சத்திரங்களுக்குள்ளே உன் கூட்டைக் கட்டினாலும்'' (4). தற்காலம் இத்தியாவிலுள்ள சில மலைவாசிகளான குலத்தார் தங்கள் கிராமங்களை ஒருவரும் ஏறமுடியாத செங்குத்தான மலைச் சரிவுகளில் கட்டுவதுபோன்று ஏதோமியரும் செய்தனர். அதைபோல அந்நாட்டிலுள்ள கழுகு அந்த மலைச் சரிவுகளில் தன் கூட்டைக் கட்டும்.

''நட்சத்திரங்களுக்குள்ளே'' என்னும் பதத்தின் பொருள் யாதெனில், ஏதோம் அரசு தானே தேவனென்று சொல்லி வேறொரு சுவாமியையும் வணங்க வேண்டுவதில்லை என நினைத்தனர் என்பதே. ஆயினும், மெய்க் கடவுள் அகந்தையை வெறுக்கிறவர்; அப்பாவத்தில் ஈடுபடுகிறவர்களை அவர் கீழேவிழப்பண்ணுவார் என்பது உண்மையாகும்.

''ஐயோ, உனக்கு எவ்வளவு அழிவு!'' (5). ''கொல்லப்பட்டு அழிவார்கள்'' (9). ''என்றுமாக அழிக்கப்பட்டுப் போவாய்'' (10). இவ்வாறு ஒபதியா தீர்க்கன், கடவுள் ஏதோம் அரசுக்கு வருவிக்கும் சர்வ சங்காரத்தை வர்ணிக்கிறார். வச. 6-9 இல் இந்தச் சங்காரத்தின் சில விவரங்கள் கீழ்க்காணுமாறு அடங்கியுள்ளன.

அ. ''ஏசாவுக் குரியவைகளோ எவ்வளவாய்த் தேடிப் பார்க்கப்படும், அவனுடைய அந்தரங்கப் பொக்கிஷங்கள்

எவ்வளவாய் ஆராய்ந்தெடுத்துக் கொள்ளப்படும்'' (6). அதாவது, அவர்கள் தங்கள் துருக்கங்களில் ஒளித்து வைத்திருக்கும் சகலமும் அவர்கள் எதிரிகளுக்குக் கொள்ளைப் பொருளாகும்.

ஆ. ''உன்னோடு உடன்படிக்கை செய்த எல்லா மனுஷரும்,'' ''உன்னோடு சிநேகமாயிருந்த மனுஷர்'' (7). அதாவது, இவர்களுக்கு முற்காலத்தில் துணை நின்றவர்கள் சத்துருக்களாவார்கள் (மேலே வச. 1ஐப் பற்றிய குறிப்பைக் காண்க). இந்தச் சொல்லானது அநேகமாய் மோவாப், அம்மோன், தீரு, சீதோன் ஆகிய அரசுகளைக் குறிக்கும் (எரே. 27:3).

இ. ''நான்....ஞானிகளையும் அழியாதிருப்பேனோ?'' (8). ஏதோமியரின் விவேகம் பெயர் போனது (எரே. 49:7). எனினும், அவர்களில் கடவுள் ஒரு ஞானியையும் விடப்போகிறதில்லை.

ஈ. ''உன் பராக்கிரமசாலிகள் திகைப்பார்கள்'' (9). இவர்களின் சேனாவீரர் யாவரும் மடிந்து போவார்கள்.

2. ஏதோமியர் யூதரைப் பகைத்து இம்சை செய்தல்-10-14.

''உன் சகோதரனாகிய யாக்கோபுக்குச் செய்யப்பட்ட கொடுமையினிமித்தம்'' (10). கடவுள் ஏதோமியருக்கு விதித்த தண்டனை நியாயமானது எனத் தீர்க்கதரிசி இப்பாகத்தின்மூலம் நிரூபிக்கிறார். உ-ம்: யூதேயா நாட்டாருக்கு விரோதமாய் ஏதோமியர் செய்த ''கொடுமை'' பல்வகைப்படும். அவைகளில் சில வச. 11-14இல் குறிப்பிட்டுள. யூதர் சிறைப்பட்டுப்போன பின் இந்தக்கொடுமையை மனக்கசப்புடன் நினைவு கொண்டு பின்வருமாறு மன்றாடினார்:—''கர்த்தாவே, எருசலேம் அழிந்த நாளை ஏதோமின் புத்திரருக்கு விரோதமாய் நினைத்துக்கொள்ளும்; அதை இடித்துப்

போடுங்கள், அஸ்திபாரமட்டும் இடித்துப்போடுங்கள் என்று அவர்கள் சொன்னார்களே'' என்பதே (சங். 137:1,17).

''நீ விலகி நின்ற நாளிலே'' (11). யூதருக்கும் ஏதோமியருக்குமுள்ள விரோதம், எண். 20:17-21இல் கூறியபடி, இஸ்ரவேலர் வனாந்தரத்தில் சஞ்சரித்த காலத்தில், தங்கள் நாட்டின் எல்லை வழியாய்க் கடந்து போக ஏதோமியர் அவர்களுக்கு உத்தரவு அளிக்க மறுத்த நாள்முதற்கொண்டே நிலைத்தது. ஆனால், அந்தப் பகை கி.மு. 586-ஆம் ஆண்டில் எருசலேம் நகர் பிடிபட்ட போது முற்றிற்று. அப்பொழுது ஏதோமியர் தங்கள் யூதருக்கு உதவி செய்யாமல் விலகி நின்றதுமன்றி, அவர்கள் யூதரை இம்சை செய்தனர். இது சம்பந்தமாக, நல்ல சமாரியன் உவமையில் ஆசாரியனும் லேவியனும் ஆற்றியதுபோல நடந்தனர்.

''அந்நியர்....பிறநாட்டார்'' (11). இந்தப் பதங்கள் அநேகமாகப் பாபிலோனியரைக் குறிக்கும்.

''யூதா சந்ததியாரின் அழிவு நாளிலே அவர்களைப் பார்த்துக் களிக்கவேண்டாம்'' (12). அதாவது, ஏதோமியர் இரக்கமின்றியே எருசலேமின் அழிவைக் கண்டு களித்தனர்.

''அவர்கள் வாசலுக்குள் செல்லவேண்டாம்....... அவர்கள் ஆஸ்தியில் கை வைக்கவேண்டாம்'' (13). பாபிலோனியர் யூதரின் பொருளைக் கொள்ளையாடின போது ஏதோமியரும் அதை கொள்ளையடித்தனர் என்பது பொருளாகும்.

''அவர்களில் தப்பினவர்களைச் சங்கரிக்கும்படி வழிச் சந்துகளிலே நிற்கவேண்டாம்'' (14). தப்பியோடும் யூதரை இவர்கள் பிடித்துப் பாபிலோனியரிடம் ஒப்புக் கொடுத்தார்கள் போலும். மத். 5:44இல் காணப்படும்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருவார்த்தை இப்படிப்பட்ட நடத்தைக்கு எவ்வளவு வேற்றுமையானது!

3. ஏதோம் முதலிய அரசுக்களுக்குக் கர்த்தருடைய நாளில் உண்டாகும் தண்டனையும் யூதேயாவின் அரசாட்சி திரும்ப ஏற்படுதலும் (15-21).

''கர்த்தருடைய நாள்'' *(15).* இந்தப் பொருள் பழைய ஏற்பாட்டாகமத்தில் மிகவும் முக்கியமான ஒரு பொருளாகும். அந்நாள் இந்த யுகத்தின் கடைசி நாளாயிருக்கும். அது ஆண்டவர் மகிமையடையும் நாள் என்றும் பொருள்படும் *(ஏசாயா 2:11).* அந்த நாளில் கடவுளை மறக்கிற எந்தக் குலத்தாரும் நியாயமான தண்டனையனுபவிப்பர் *(சங். 9:17).* ''நீ செய்தபடியே உனக்கும் செய்யப்படும்'' *(எசே. 35:15; கலா. 6:7, 8).*

''தப்பினவர்கள் சீயோன் மலையிலே இருப்பார்கள்'' *(17).* அந்தப் பயங்கரமான ஆக்கினையின் நாளில் ஒரே பாதுகாப்பு இடமிருக்கும். அதாவது. யூதர் தங்கள் சுய நாட்டில் குடியேற்றப்பட்டு அங்கு பத்திரமாய் வாழுவர். ''அது பரிசுத்த ஸ்தலமாகும்.'' யூதர் அடையப்போகும் விடுதலைக்கும் பரிசுத்தத்திற்குமுள்ள நெருங்கிய சம்பந்தமுண்டு பாருங்கள்.

''யாக்கோபின் வீடு....யோசேப்பின் வீடு'' *(18).* இதில் யாக்கோபின் வீடு யூதேயாவையும் யோசேப்பின் வீடு இஸ்ரவேலையும் குறிக்கும். ஆகவே, தென்னாட்டு அரசும் வடநாட்டரசும் திரும்பவும் நிலை நாட்டப்படும் என்பதாக இவ்வசனம் முன்னறிவிக்கிறது *(யோவேல் 2:32; 3:17; ஆமோஸ் 9:8, 12).* ''தப்பினவர்கள்'', *(17)* என்பது இந்த விடுதலையானது இயேசு கிறிஸ்துவின் மூலம் உண்டாகும் ஆவிக்குரிய விடுதலைக்கு முன்னடை

யாளம் எனலாம். அவர் யூதா கோத்திரத்துச் சிங்க மானவரல்லோ?

''ஏசாவின் வீடோ வைக்கோல் துரும்பாகும்'' (18). இந்த உவமானம் நாகூம் 1:10; ஏசாயா 10:17; 27:4 இலும் பயன்பட்டிருக்கக் காணலாம்.

''சொந்தமாக்கிக்கொள்வார்கள்'' (19, 20). இந்தச் சொற்றொடரா இவ்விரு வாக்கியங்களில் மும்முறை பயன் பட்டிருப்பதைக் கவனிக்க. வச. 17இன் பின்பாகத்தில் கூறியுள்ள தீர்க்கதரிசனத்தின் சில விவரங்களை ஒபதியா இவ்விடத்தில் எழுதலானார். இந்த விவரங்களில் சில நமக்குத் தெளிவாகாவிடினும் மொத்தப் பொருள் நன்கு விளங்கும். அது யாதெனில், நான்கு திசைகளிலுமுள்ள யூதர் தங்கள் தங்கள் பாகங்களில் தங்கள் அரசாட்சியின் எல்லைகளை விரிவாக்குவார்கள் என்பதே (எரே. 17:26; 33:13).

''ஏசாவின் மலையை நியாயந்தீர்க்கும்படி இரட்சிப் பவர்கள்........வந்தேறுவார்கள்; அப்பொழுது ராஜ்யம் கர்த்தாவினுடையதாகும்'' (21). இந்தச் சுருக்கமான தீர்க்கதரிசன ஆகமத்தின் இறுதியான வாக்கியம் எவ் வளவோ மாட்சிமையான பொருளுடையது! இவ்வசனத் தில் ஒபதியா ஆகமத்தின் இரு முக்கியப் பொருள்கள் தொகுப்பாகக் காணப்படுகின்றன. அவையாவன:-

அ. ஏதோமியரை நியாயந்தீர்க்கும்படி ஆண்டவர் தம் தாசர்களை ஏற்படுத்துவார்.

ஆ. யெகோவா என்பவரே எங்கும் அரசாளும் ஏகசக்கராதிபதியாக விளங்குவார்.

''இரட்சிப்பவர்கள்.'' முற்காலத்தில் அப்போதைக் கப்போது தம் மக்களை அவர்கள் எதிரிகளின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்கும் தம் தாசர்களைக் கடவுள்

ஏற்படுத்தினார் (நியா. 2:16; ஏசாயா 19:19, 20). அதைபோன்று ஆண்டவர் திரும்பவும் செய்வார் என்பதை இப்பதம் நினைவுறுத்துகிறது.

''இராஜ்யம் கர்த்தாவினிடையதாகும்.'' (தானி. 2:44;7:27; வெளி. 11:15) இந்த இறுதியான சொற்றொடர் ஒரு புதிய ஏற்பாட்டுச் சொல்போல தோன்றுகிறதல்லோ? உமது இராஜ்யம் வருவதாக; ஆமேன், ஆண்டவராகிய இயேசுவே, வாரும் என்பது நமது அனுதின மன்றாட்டாயிருப்பதாக.

7

யோனா

முன்னுரை

எழுத்தாளர்

"அமத்தாயின் குமாரன் யோனா" (1). அவர் இயற்றிய ஆகமத்தைத்தவிர இந்தத் தீர்க்கதரிசியின் பெயர் பழைய ஏற்பாட்டாகமத்தில் ஒரே இடத்தில் காணப்படுகிறது(2இரா. 14:25). அவ்வாக்கியத்தின்மூலம் அவரைக் குறித்துக் கீழ்க்காணும் உண்மைகளை அறிந்து கொள்ளலாம்.

அ. அவர் வட இராஜ்யமாகிய இஸ்ரவேல் நாட்டார்.

ஆ. செபுலோன் கோத்திரத்தின் பாகத்திலுள்ள காத்கேபர் ஊரார். அந்த மாவட்டத்திற்குப் பிற்காலத்தில் கலிலேயா என்று பெயராயிற்று. காத்கேபர் ஊர் நாசரேத்தூருக்கு அருகிலுள்ளது.

யோனா என்பவர் தமது சுய நாடாகிய இஸ்ரவேல் நாட்டிலேயே திருத்தொண்டாற்றினார்.

இ. அவர் சித்திபெற்ற தேவ ஊழியர். எப்படியெனில், அவர் உரைத்த தீர்க்கதரிசன மொழிகள் நிறைவேறின.

இந்தத் தீர்க்கன் எலியா, எலிசா என்பவர்கள் வாழ்ந்து சில நாளானபின் வாழ்ந்தபடியால் அவர்கள் ஏற்படுத்திய வேத கலாசாலையில் பயின்றிருப்பார் என அனுமானிக்கலாம் (2 இரா. 6:1,2).

இயற்றிய காலம்

2 இரா. 14:25இல் குறிப்பிட்டிருக்கும் தீர்க்கதரிசன வார்த்தை யெரொபெயாம் II அரசாண்ட காலத்தின் முற்பகுதியில் நிறைவேறினபடியால் யோனா அவ்வரசனின் காலத்திற்கு முன்னாவது அவரது அரசாட்சியின் ஆரம்பக்காலத்திலாவது தமது ஊழியத்தை நிறைவேற்றினார் போலும். ஆகவே, அவர் ஓசியா, ஆமோஸ் என்பவர்களின் நாள்களில் வாழ்ந்திருப்பார்.

இயற்றிய நோக்கம்

யோனா தமது தீர்க்கதரிசன நூலை இயற்றிய நோக்கங்கள் கீழ்க்காணுமாறு:

1. தாமும் தமது குலத்தாரான யூதர் யாவரும் ஏனைய குலத்தாருக்குக் காட்டவேண்டிய சிநேகம் காட்டாமல் அவர்களை இழிவாகப் பாவித்தது மிகவும் தவறான நடத்தை என உணர்த்துவது ஒரு நோக்கமாகும்.

3. உண்மையான மனந்திரும்புதலின் தன்மையும் அதன் விளைவும் இன்னின்னதெனப் போதிப்பதும் ஒரு நோக்கமாகும். இந்த உண்மைகளுக்கு நினிவே நகரத்தாரும் யோனா தீர்க்கனும் உதாரணங்களாவர்.

4. சர்வ குலத்தாருக்கும் ஆண்டவர் அன்பையும் கிருபையையும் பாராட்டுகிறார் என்கிற உண்மையை நிலைநாட்டுவதும் நோக்கமாகும் (4:10, 11ஐக் காண்க).

முக்கியமான பண்புகள்

யோனா தீர்க்கதரிசியேயொழிய வேறொரு யூத தீர்க்கனும் புறஜாதியாரிடம் மிஷனெரியாக அனுப்பப்படவில்லை. ஆகவே, இவர் இயற்றிய நூலே மற்றைய தீர்க்கதரிசன நூல்களைக் காட்டிலும் யெகோவாவாகிய

கடவுள் யூதரல்லாத மக்களுக்கும் தேவனானவர் என்றும், அவர்களுக்கும் இரக்கம் பாராட்டி ஆசீர்வதிப்பார் என்றும் மிகத் தெளிவாகப் போதிக்கிறது.

இவ்வாகமத்தில் ஒரே ஒரு முன்னறிவிப்பான மொழி காணப்படுகிறது. அது யாதெனில், ''இன்னும் நாற்பது நாளிலே நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம்'' என்பதே (3:4). இது ஒரு சரித்திர நூலேயொழிய வேறல்ல. மீண்டும், இதில் கூறியுள்ள வரலாறு ஆவிக்குரிய இரட்சிப்புக்கு மிகவும் தெளிவான ஓர் உவமானமாகும்.

யோனாவும் கிறிஸ்துவும்

யோனா என்பவரும் இயேசு கிறிஸ்து நாதரும் கலிலேயாவில் தீர்க்கதரிசனத் தொண்டாற்றினார்கள். யோனாவுக்குச் சம்பவித்த சில நிகழ்ச்சிகளைக் கிறிஸ்துநாதர் மகா முக்கியமானவையாகப் பாவித்துக் கொண்டார்; இந்த நிகழ்ச்சிகள் சம்பந்தமாக யோனா தம்மை போன்றவர் என்பதாகக் கிறிஸ்து உணர்த்தினார். ஆண்டவர் வேறொரு தீர்க்கனையும் தமக்கு ஒப்பிட்டுப் பேசினதில்லை.

இவ்வாகமத்தில் கூறியுள்ள சில நிகழ்ச்சிகள் தமக்குச் சம்பவிக்கப் போகிறவைகளுக்கு முன்னடையாளங்கள் என்பதாக இயேசு கிறிஸ்து திட்டமாகப் போதித்தார் (லூக்கா 11:29,30; மத். 12:39,40;16:4).

பிரிவுகள்

1. கடவுள் யோனாவுக்கு அளித்ததும் யோனா தள்ளிவிட்டதுமான திருத்தொண்டு-1;1-3.

2. யோனா ஓடிப்போனதும் யெகோவா அவரைத் தொடர்ந்து சென்றதும்-1:4-17.

3. யோனா மீன் வயிற்றில் இருக்கும்போது ஏறெடுத்த மன்றாட்டு-2:1-10.

4. கடவுள் யோனாவுக்குத் திரும்பவும் அளித்ததும் யோனா நிறைவேற்றினதுமான திருத்தொண்டு-3:1-9.

5. நினிவே நகரத்தார் மனந்திரும்பினதைக் கண்ட இருவரின் வெவ்வேறு செயல்கள்; யெகோவா யோனாவுக்குக் கற்பித்த படிப்பினை-3:10-4:11.

விளக்கவுரை

1. கடவுள் யோனாவுக்கு அளித்ததும் யோனா தள்ளிவிட்டதுமான திருத்தொண்டு-1:1-3.

''நீ எழுந்து....நினிவேக்குப்போய்'' (2). யோனாவுக்கு உண்டான இந்தத் தேவ அழைப்பு மிகுந்த வியப்புண்டாக்கக் கூடியது; அது அவருக்கு வெறுப்புமுண்டாக்கிற்று. ஏனெனில், தமது நாட்டாரின் மகா பெரிய எதிரியான அசீரிய அரசின் தலை நகராகிய நினிவேக்குச் சென்று திவ்விய தூது அறிவிக்க ஆண்டவர் சொன்னார்.

''மகா நகரமாகிய....'' 3:3ஐக் காண்க. தியதோரு **(Diodorus)** என்று பெயர்போன வேத நிபுணர் சுமார் கி.பி. 380-ஆம் ஆண்டில் நினிவே நகர் ஏறத்தாழ முப்பது கி.மீ. நீளமும் பதினெட்டு கி.மீ. அகலமுமானது என்பதாக எழுதலானார். ஆகவே, அந்நகர் சுமார் 100 கி.மீ. சுற்றளவுடையது. அல்லது மூன்று நாள் பிரயாணம் என்று சொல்லலாம். பாபிலோன் நகர் சுமார் 72 கி.மீ. சுற்றளவுடையதாகையால் நினிவே நகர் அதைவிட மிகவும் பிரமாண்டமான நகரமாயிருந்தது.

அங்குள்ளவர்களுக்கு விரோதமாய்ப் பிரசங்கித்துக் கூறு, அவர்கள் செய்த தீமை....'' (2). நினிவே நகரத்தார் விக்கிரக வணக்கத்திலும் அநேக கொடிய பாவங்களிலும் மூழ்கினவர்கள். பாவத்தில் நிலைகொண்டிருக்கும் மக்களுக்குக் கடவுள் கடினமானவர், மனந்திரும்புகிறவர்

களுக்கோ அவர் கருணையுடையவர் என்பதைக் கவனிக்க (4:11).

''யோனா கர்த்தருடைய சமுகத்தைவிட்டு....ஓடும்படி எழுந்து'' (3). இவ்வதிகாரத்தில் ''கர்த்தருடைம் சமுகத்தைவிட்டு'' ''சமுகத்தினின்று'', என்கிற சொல் மூன்று முறை பயன்பட்டிருப்பதைக் கவனிப்பது நலம் (வச. 10 ஐயும் காண்க). யோனா தமது ஆகமத்தின்மூலம் கற்பித்த முக்கியமான உண்மைகளில் ஒன்று யாதெனில், உண்மை கடவுளைவிட்டு ஓடுவது கூடாத காரியம் என்பதேயாகும் (சங். 139:7-12). அதுமட்டுமன்றி, பாவஞ் செய்கிறவன் தண்டனைக்குத் தப்பித்துக்கொள்ள எவ்வளவாகத் முயன்றாலும் அவன் ஆக்கினைக்கு ஆளாவது உறுதியாகும் என்னும் பாடமும் இந்நூலின்மூலம் தெளிவாகிறது. தேசாபிமானியும் மதவெறிகொண்டவருமான யோனா, அசீரியருக்கு எந்த நன்மை உண்டானாலும் வெறுப்புக் கொள்வார். தாம் பிரசங்கிப்பதின்மூலம் அந் நாட்டார் மனந்திரும்பும் பட்சத்தில் ஆண்டவர் அவர்களுக்கு இரங்கி ஆசீர்வதிப்பார் எனப் பயந்துகொண்டார் இந்த வைராக்கியமான தேசாபிமானி! (4:2).

''யோப்பாவுக்குப் போய்த் தர்ஷீசுக்குப் போகிற ஒரு கப்பலைக் கண்டு'' (3). பலஸ்தீனா நாட்டில் அக்காலம் யோப்பா மட்டுமே பெரிதான துறைமுகம். பேதுரு அப்போலஸ்தலன் புறஜாதியார் மத்தியில் ஆற்றிய திருப்பணி சம்பந்தமாக இந்தத் துறைமுகத்தைப்பற்றிப் படிக்கிறோம் (அப். 19-11:18). தர்ஷீஸ் நகர் ஸ்பானியா நாட்டின் தென்மேற்குக் கரையிலே இருந்ததாகத் தோன்றுகிறது. ஆகவே, இஸ்ரவேல் நாட்டிற்கு வடகிழக்குத் திசையிலுள்ள நினிவே நகருக்குப் போகக் கர்த்தர் கட்டளையிட, யோனா தீர்க்கன் நேர் மேற்கே தாம் எவ்வளவு தூரம் போகக்கூடுமோ அவ்வளவு தூரம் ஓடிப்போகத் தீர்மானம் பண்ணினார்! ''கூலி கொடுத்து'' அதாவது, தமக்குள்ளதை நம்பிப் புறப்

பட்டார், யோனா. நாமும் கடவுளின் சித்தத்திற்கு மாறாக நடக்கும் போதெல்லாம் அவ்வாறே செய்ய நேரிடும்! ஆயினும், அதன் முடிவு ஆபத்தாகவே இருக்கும்!

2. யோனா ஓடிப்போனதும் யெகோவா அவரைத் தொடர்ந்து சென்றதும்-1:4-17.

கடவுளுக்குத் தப்பித்தோடும்படி யோனா முயன்ற போதிலும் அந்த முயற்சியெல்லாம் தோல்வியடைய வேண்டியதாயிருந்தது. ஏனெனில், ''துரோகிகள் வழி கரடுமுரடாம்'' என்கிற உண்மையை ஆண்டவர் தவறி நடந்த தமது தாசனுக்குக் கற்பிக்க நேரிட்டது (நீதி. *13:15*). எனினும், அவர் அதன்பின் யோனாவைத் திருத்தி திரும்பவும் தமக்குத் திருப்பணியாற்ற ஏற்றுக் கொண்டார் (ரோமர் *11:20*).

ஆண்டவர் இரு கருவிகளைக்கொண்டு யோனாவைச் சிட்சை செய்தார். அவையாவன:— ஒரு பெருங்காற்று, ஒரு பெரிய மீன்.

''பெருங்காற்றை... பெரிய கொந்தளிப்பு'' (*4*). இவற்றைக் கொண்டு கடவுள் தம் தாசனின் கீழ்ப்படியாமையை விளங்கப்பண்ணினார் (வச. *10:12*).

''கப்பற்காரர்.........அவனவன் தன்தன் தெய்வத்தை அபயமிட்டு'' (*5*). அந்தக் கப்பற்காரர் பல வெவ்வேறு குலத்தாரும் வெவ்வேறு மதத்தினருமாயிருந்திருப்பர். பெருங்காற்று அடிக்கும்போது யோனா தவிர எல்லாரும் அவரவர் தன்தன் சுவாமியை நோக்கிக் கூப்பிட்டார்கள்.

''யோனாவோ....அயர்ந்த நித்திரைபண்ணினான்'' (*5*). தீர்க்கன் அவ்வேளையில் தூங்கினது ஆவிக்குரிய தூக்கத்திற்கு எவ்வளவோ தெளிவான உவமானமாகும்! (ரோமர் *13:11*; எபே. *5:14*; *1* தெச. *5:6*).

''பரலோகத்தின் கடவுளாகிய கர்த்தரிடம் பயபக்தியுள்ளவன்'' (9). ''என்னிமித்தமே இந்தப் பெரிய கொந்தளிப்பு உங்கள்மேல் வந்ததென்று எனக்குத் தெரியும்'' (12). யோனா கோழைத்தனமுள்ளவரல்ல. மெய்க் கடவுள் மேலுள்ள தம் நம்பிக்கையையும் தனது குற்றத்தையும் இந்த மனிதருக்கு அறிக்கையிடுகிறார், பாருங்கள். மற்றவர்கள் தன்னிமித்தம் சாகாதபடி தாமே மரிப்பது நலமெனக் கருதினார். தாம் சீக்கிரத்தில் மாண்டு போவது கடவுள் விதித்த தண்டனை என யோசித்தார் போலும்.

''அப்பொழுது அந்த மனுஷர்....கர்த்தருக்குப் பலியிட்டுப் பொருத்தனைகளைப்பண்ணினார்கள்'' (16). பெருங்காற்றை அமர்த்தித் தங்களுக்கு இரக்கஞ்செய்து தங்கள் உயிரைக் காப்பாற்றின யெகோவாவைத் துதித்தனர்.

''யோனாவை விழுங்கும்படி ஒரு பெரிய மீனுக்குக் கர்த்தர் கட்டளையிட்டிருந்தார்'' (17). சில வெவ்வேறு இனமான மகா பெரிய மச்சங்கள் மனிதரை வெகு இலகுவாக விழுங்கக்கூடும். அத்தகைய பிராணிகள் வேளா வேளைகளில் அவ்வாறு செய்ததாக வரலாற்று நூல்களில் எழுதியிருக்கிறது. அந்தப் பிராணிகளில் அந்நேரம் அதே இடத்திலிருக்கச் செய்தது அற்புதச் செயலல்லோ?

''அந்த மீன் வயிற்றிலே யோனா இராப்பகல் மூன்று நாள் இருந்தான்'' (17). ஆண்டவர் யோனாவை மீனின் வயிற்றில் மூன்றுநாள் உயிருடன் காப்பாற்றினது இரண்டாம் அற்புதச் செயலாகும். அவரை உயிரோடு தப்பச் செய்தது மூன்றாம் தெய்வ செயலாகும். கடவுள் தவறி நடந்த தமது தாசனுக்காக இந்த மூன்று வல்ல செயல்களை ஆற்றிவிட்டார். யோனா மச்சத்தின் வயிற்றில் எத்தனை நாள் தங்கினாரோ அத்தனை நாள்களே கிறிஸ்துநாதர் பூமிக்குள் இருந்தார் என்பது

கவனிக்கத்தக்க பொருளாகும். இது சம்பந்தமாக யோனா தீர்க்கனுக்குச் சம்பவித்தது தாம் பூமியில் அடக்கம் பண்ணப்படுவதற்கு முன்னடையாளமானது என்பதாக இயேசு கிறிஸ்து சாதித்தார் (மத். 12:40). ஆகவே, யோனாவின் ஆகமம் வெறும் கதையல்ல, உண்மையாக வாழ்ந்த ஒரு மனிதரைக் குறித்தும், அவருக்கு உண்மையில் சம்பவித்த சில நிகழ்ச்சிகளைக் குறித்தும் அதில் எழுதியிருக்கிறது என்பதற்கு இயேசு நாதர் சாட்சியாயிருக்கிறார்.

3. யோனா மீன் வயிற்றில் இருக்கும்போது ஏறெடுத்த மன்றாட்டு-2:1-10.

''யோனா....பிரார்த்தனை பண்ணி'' (1). முதலாம் அதிகாரத்தில் குறிப்பிட்ட யோனாவின் நடத்தைக்கும் இவ்வாக்கியத்தில் எழுதியிருப்பதற்கும் எவ்வளவோ வேற்றுமை உண்டு! கடல் கொந்தளிக்கும்போது கப்பலிருந்தவர்களில் யோனா மட்டும் பிரார்த்தனைபண்ணாமலிருந்தார் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவும் (1:5,6 முதலியன).

வச. 2-9இல் அடங்கிய பிரார்த்தனை துதிசெலுத்தும் மன்றாட்டமாகும். மீண்டும், தீர்க்கன் சங்கீத ஆகமத்தை அதிகமாய்ப் படித்தறிந்தவர் என்பது இந்த மன்றாட்டினால் விளங்கும். உதாரணமாக, சங். 18,30, 42,116,120,142 ஆகிய வற்றிலுள்ள பல வாக்கியங்களை யோனா இதில் பயன்படுத்தியுள்ளார். யோனா தீர்க்கன் இத்தனை வேத பாகங்களை மனனஞ்செய்தது நமக்கு உத்தம முன்மாதிரியேயாகும்.

''என்.... நான்.... உனக்கு.... நான் ....என்.... என்னை.... என்னை....என்மேல்....'' (2,3). யோனா தனது சுருக்கமான மன்றாட்டால் இப்படிப்பட்ட பதங்களைச் சுமார் 20 முறை பயன்படுத்தியுள்ளார். தமது சுய நிலைமையைக் குறுத்து யோசித்தாரேயொழிய நினிவேயைக்

குறித்தாவது கடவுளின் சித்தத்தைக் குறித்தாவது அவர் எண்ணவேயில்லைபோலும்.

''பாதாளத்தின் ஆழத்திலிருந்து'' (5). தீர்க்கன் தன்னைச் செத்தவன்போல பாவித்துக்கொண்டு திகில் அடைந்தார் (சங். 88ஐக் காண்க).

''உமது கண்முன் இராதபடி தள்ளுண்டேன்'' (4). இப்படிப் புலம்புகிறவர் சற்று முன்னே ஆண்டவரின் சமுகத்தைவிட்டு ஓடிப்போக பார்த்தாரே!

''உமது பரிசுத்த ஆலயத்தை எப்படி நோக்கிப் பார்ப்பேன்?'' (4). இது ஒரு சமயம் எருசலேமிலுள்ள தேவாலயத்தைக் குறிக்கும்; ஆனால், அநேகமாகப் பரம தேவாலயத்தைக் குறிக்கும் போலும் (வச. 7ஐக் காண்க).

''தண்ணீர்கள் என்னை நெருக்கின'' (5). தீர்க்கன் வச. 3-6இல் தன் ஆபத்தான நிலையை எவ்வளவோ தெளிவாயும் விவரமாயும் வர்ணிக்கிறார் பாருங்கள்!

''பொய்யான விக்கிரகங்களைப் பற்றிக்கொள்ளுகிறவர்கள்'' (8). கடவுள் தமக்குப் பாராட்டிய இரக்கத்தினிமித்தம் யோனா நன்றியுள்ளவராயிருந்தும் அவர் இன்னும் நினிவே நகரத்தாருக்குச் சற்றேனும் அனுதாபம் காட்டவில்லை என்பதை கவனிக்க. ''தங்களுக்குக் கிடைக்கும் கிருபையை இழக்கிறார்கள்.'' அதாவது, விக்கிரக வணக்கஞ் செய்வோர் தங்களை ஆசீர்வதிக்கக்கூடிய ஒரே மெய்க் கடவுளை விட்டுத் தங்களைப் பிரித்துக் கொள்ளுகிறார்கள் என்கிறார் யோனா.

''நான் பண்ணின பொருத்தனையைச் செலுத்துவேன்'' (9). தீர்க்கன் இந்தப் பயங்கரமான நெருக்கடியில் ஆண்டவரிடம் பயபக்தியாக வாக்களிக்கிறார். அது யாதெனில், தாம் கடவுளுக்கெனத் திருப்பணியாற்றும்படி தம்மை முதன் முதல் ஒப்படைத்த நாளில் செய்த

பொருத்தனையை நினைத்து, ஆண்டவர் தமது உயிரைக் காப்பாரேயாகில் இனிமேலாவது தாம் அப்பொருத் தனையை நிறைவேற்றுவதாக வாக்குப்பண்ணுகிறார் பாருங்கள். ஆண்டவருக்குக் கீழடங்கி நடப்பதே அந்தப் பொருத்தனையின் சாராம்சமல்லோ? ''கர்த்தாவி னிடமே இரட்சிப்பு உண்டு.'' அத்தகைய பயங்கரமான ஆபத்தினின்று மெய்க் கடவுள் மட்டும் விடுவிக்கக்கூடும் என யோனா கற்றறிந்தார். தாவீதரசன் தம் குமார னாகிய அப்சலோமுக்குத் தப்பியோடின காலத்தில் இவ் வுண்மையைக் கற்றுக் கொண்டார் (சங். 3ஐக் காண்க). அதுபோன்று கடவுள் மட்டுமே ஆத்தும இரட்சிப்புண் டாக்கக் கூடியவர்.

''கர்த்தர் மீனுக்குக் கட்டளையிடவே'' (10). தீர்க்க தரிசி கற்கவேண்டிய பாடத்தைக் கற்றாயிற்று என்பதற்கு இவர் செய்த பிரார்த்தனையின் இறுதியான மொழி தெளிவான ரூபகாரமாகும். எனவே, ஆண்டவர் தமது தாசனைச் சிட்சித்த சிட்சையை நிறுத்தக்கூடிய வேளை வந்தது. ஆகையால், அத்தருணத்தில் இவ்வாக்கியத்தில் குறிப்பிட்டுள்ள அற்புதம் நடைபெற்றது. இது மூன் றாம் அற்புதச் செயலாகும். அதாவது, மச்சமானது மூன்று நாளானபின் யோனோவை உயிருள்ளவராகக் கக்கிவிட்டது. மேலும், அவரைச் சமுத்திரத்தில் கக்கி விடாமல் வெட்டாந் தரையிலேயே கக்கிவிட்டது. யோனா இவ்வண்ணம் மச்சத்தின் வயிற்றில் 'அடக்கம் பண்ணப்பட்டது'ம் அங்கு மூன்று நாள் கழித்து பின்னால் 'உயிர்த்தெழுந்தது'ம் இயேசுநாதர் அடக்கம் பண்ணப்பட்டதற்கும் உயிர்த்தெழுந்ததற்கும் முன்னடை யாளமானவை (மத். 12:39; லூக்கா 11:29,30). மீண்டும், யோனா தீர்க்கனுக்குச் சம்பவித்த இந்த நிகழ்ச்சிகள் யூத குலத்தார் சிறைப்பட்டுப் போவதற்கும் அங்கிருந்து திரும்புவதற்கும் முன்னடையாளங்கள் என்றும் சொல்லலாம்.

4. கடவுள் யோனோவுக்குத் திரும்பவும் அளித்ததும் யோனோ நிறைவேற்றினதுமான திருத்தொண்டு-3:1-9.

''இரண்டாம் முறை கர்த்தாவின் வார்த்தை....... வந்தது'' (1). கீழ்ப்படியாத தம் தாசனுக்கு ஆண்டவர் எவ்வளவோ இரக்கம் பாராட்டுகிறார் பாருங்கள்! அவர் மனம் மாறாதவர். மனந்திரும்பும் தம் தாசர் யாவருக்கும் திருப்பணியாற்றும் சிலாக்கியத்தை அளிக்கிறார்.

''நீ எழுந்து... நான் உனக்கு உரைப்பதை.... பிரசங்கித்துக்கூறு'' (2). இந்தத் தீர்க்கதரிசி கீழ்ப்படியாத தீர்க்கனாயினும் அவர் கள்ளத் தீர்க்கனல்ல. கடவுள் உரைப்பது சில சமயம் தமக்கு விருப்பமல்லாவிட்டாலும் தாம் அதையே கட்டாயமாகப் பிரசங்கித்துத் தீரவேண்டுமேயொழிய வேறு வழியில்லை என்று நன்கு அறிந்திருந்தார். கடவுளின் நாமத்தினால் பிரசங்கிப்பவர்கள் யாவரும் கற்கவேண்டிய ஒரு முக்கியப் பாடம் இதுவே.

''யோனோ எழுந்து....நினிவேக்குப் போனான்'' (3). தீர்க்கன் கீழ்ப்படியாமையின் பலன் இன்னது எனக் கற்றவராய் இப்பொழுது தாமதமின்றிப் புறப்பட்டுப் போகிறார். இச்செயலைக் 'கீழ்ப்படிதல்' என்று பெரும்பாலோர் சொல்லுவார்கள். எனினும், யோனா வெளிப்படையாகக் கர்த்தரின் சித்தப்படி செய்த போதிலும், அவர் இருதயம் ஆண்டவருக்குக் கீழடங்கவில்லை என்பது தெளிவாகும். எப்படியெனில், அவர் தாம் அனுப்பப்பட்ட மக்களை நேசிக்கவுமில்லை, ஆண்டவர் அவர்களை ஆசீர்வதிக்கத்தக்கதாக அவர்கள் மனந்திரும்பவேண்டும் என்று விரும்பவுமில்லை. நாமும் இத்தகைய மேல் அலங்காரமான கீழ்ப்படிதலுக்கு எச்சரிக்கையாய் இருக்கக் கடவோம்.

''நினிவே....மிகப் பெரியது'' (3). மேலே 1:2 ஐப் பற்றிய குறிப்பைக் காண்க. சில தற்காலத்துப் பட்டணங்களின் எல்லைகளுள் பல கிராமங்கள் சேர்க்கப்படுவது போன்று நினிவே மகா நகரில் அதை சுற்றியுள்ள பல ஊர்கள் சேர்ந்திருக்கலாம் (ஆதி. 10:11, 12).

''யோனா நகரத்திற்குள்....ஒரு நாள் பிரயாணஞ் செய்து'' (4). இந்தத் தீர்க்கதரிசி ஒரு பயங்கொள்ளி யல்ல என்பதை முன்னமே பார்த்தோம் (1:9, 12 இன் பேரிலுள்ள குறிப்புகளைக் காண்க). இப்பொழுது அவர் மிகுந்த தைரியசாலியாகக் காணப்படுகிறார். எவ்வாறெனில், இஸ்ரவேலரில் ஒருவர் அசீரிய பேரரசின் தலை நகருக்குள் புகுந்து அங்குள்ள மக்களை அவர்கள் பாவங்களினிமித்தம் கண்டித்துப் பேசுவது மகா ஆபத்துக்கிடமான ஆற்றலல்லோ? அப்படிச் செய்வது சிங்கக் கெபியில் புகுவது போலும்! ''ஒரு நாள் பிரயாணம்'' என்னும் சொல்லுக்கு இரு வேறு கருத்துக்கள் இருக்கலாம். யோனா ஒரு நாள் முழுவதும் நினிவேக்குள் அங்குமிங்கும் சென்று பிரசங்கம் பண்ணியிருக்கலாம். அல்லது, பிரசங்கித்துக்கொண்டே அந்நகரின் மேற்கு எல்லை தொடங்கிக் கிழக்கு எல்லைவரைக்கும் சென்றிருக்கலாம் (4:5). அது ஒரு முழு நாளும் பிடித்திருக்கும்.

''இன்னும் நாற்பது நாளிலே'' (4). இவ்வாகமத்தில் இந்த ஒரே முன்னறிவிப்பான செய்தி காணப்படுகிறது.

''நினிவேயிலுள்ள ஜனங்கள் கடவுளில் நம்பிக்கை வைத்து....உபவாசத்தை அறிவித்தார்கள்'' (5). அதாவது, அங்குள்ள மக்கள் ''தம் தம் தீய வழியை'' விட்டு மனந்திரும்பினர் (வச. 8, 10). கடவுள் அவர்களுக்கு இரங்கி அவர்களுக்கு மனஸ்தாபத்திற்குரிய ஆவியை அருளிச்செய்தார். மேலும், அந்த நல்ல மாறுதல் எல்லா மக்களுக்குள்ளும் உடனடியாகவும் உண்டாயிற்று என்பது தெளிவாகும். எப்படியெனில், ''பெரியோர்முதல்

சிறியோர்மட்டும்'' என்று எழுதியிருக்கிறது. தமது சுய நாட்டில் சித்திபெற்ற தீர்க்கனான யோனா இப்பொழுது அதுபோலவே அல்லது அதைவிட அதிகமாக இந்தப் புற தேசத்தார் மத்தியில் சித்தி பெறுகிறார் பாருங்கள். ஒரே நாள் பிரசங்க ஊழியத்திற்கு எவ்வளவோ அதிசயமான நற்பயன் உண்டாயிற்று! தீர்க்கன் நினிவே நகரவாசி களுக்குத் தாம் அனுபவித்த அதிசயமான 'உயிர்த்தெழு தலை'ப்பற்றிச் சொல்லி, மெய்க்கடவுளின் வல்லமை, கோபாக்கினை, இரக்கமாகியவைகளுக்குத் தாமே உயி ருள்ள அடையாளமானவர் என்பதாகப் பிரசங்கித்திருப் பார் (மத். 12:39-41).

''இந்தச் செய்தி....ராஜாவுக்கு எட்டினபோது, அவன் தன் சிங்காசனத்தைவிட்டெழுந்து'' (6). நினிவே அரசன் யோனாவின் பிரசங்கம் கேள்வியுற்று, உடனே தம் நகரவாசிகளுக்கு உத்தம முன்மாதிரி காட்டி மனஸ்தாபப்பட்டுத் துயரமடைந்தார்.

''நினிவேயில் பிரசித்தஞ் செய்து'' (7-9). நினிவே அரசு எங்கும் உபவாசஞ் செய்வதற்கு அரசு திட்டம் பண்ணி அதற்குரிய கட்டளையைப் பிரசித்தஞ் செய்தார்.

மனுஷர் எதையும் ருசிபார்க்க வேண்டாம்; ஆடு மாடு முதலிய மிருகங்களும், மேயவும்....வேண்டாம்;....இரட்டி னால் மூடிக்கொண்டு'' (7, 8). இவ்வாக்கியங்களில் குறிப்பிட்டுள்ள மிருகங்கள் அநேகமாகக் குதிரை, கோவேறு கழுதை முதலிய பொதி சுமக்கும் மிருகங்க ளாகும். அந்த அரசன் நாட்டு மிருகங்களுங்கூட விரதங் காக்க வேண்டும் என்பதாக ஏன் கட்டளையிட்டார் என்றால், மெய்க்கடவுள் தம் நாட்டைப் பஞ்சத்தினால் வாட்டுவாரேயாகில் மனிதர் மட்டுமல்ல, நாட்டு மிருகங் களும் பட்டினியாய் வருந்தும் என அறிந்தார் (யோவேல் 1:19, 20ஐக் காண்க).

''யாருக்குத் தெரியும்?'' (9). யோவேல் 2:14ஐ இவ்வசனத்தோடு ஒத்திட்டுப்பார்க்க. அரசன் தாம் மனந்திரும்பினதற்குப் பின்வரும் ரூபகாரங்களைக் காட்டினார். மெய்க் கடவுள் இரக்கமுள்ளவர் என்கிற நம்பிக்கை ஒரு பக்கம், தமது மகா கொடிய பாவங்களை யோசிக்கையில் அவருக்கு உண்டான பயமும் திகிலும் மறு பக்கம் என்பவைகளே.

5. நினிவே நகரத்தார் மனந்திரும்பினதைக் கண்ட இருவரின் வெவ்வேறு செயல்கள்; யெகோவா யோனாவிடம் கற்பித்த படிப்பினை (3:10-4:11).

''கடவுள் அவர்கள் செய்தவைகளைப் பார்த்து.... மனமாறி அதை செய்யாதிருந்தார்'' (3:10). மனிதர் தங்கள் பாவங்களினிமித்தம் மனஸ்தாபப்பட்டு மனந் திரும்பும்போதெல்லாம் கடவுள் தாம் விதித்த தண்டனையைக்குறித்து மனஸ்தாபப்படுகிறார். நினிவே நகரத்தார் பொல்லாத பாவிகளாயினும், அவர்கள் மனந்திரும்பினதும் ஆண்டவர் அவர்களுக்கு இரங்கினது இதற்கு உதாரணமாகும். (யோவேல் 2:13, 14; எரே. 18:6-10).

''யோனாவுக்கோ இது சிறிதும் பிடிக்கவில்லை'' (4:1). கடவுள் நினிவேயின் குடிகளுக்கு மன்னிப்பீந்து அவர்களைத் தண்டியாமல் இருந்தபடியால் தீர்க்கன், ''கடுங்கோபம் கொண்டான்.'' ஆண்டவர் புறஜாதியாரை ஆசீர்வதிப்பது மகா தவறான காரியம் என்று யோனா யோசித்ததுமல்லாமல் தம் உடன் மக்களாகிய யூதரை பகைத்து வந்த எதிரிகளாகிய அசீரியருக்கு மெய்க் கடவுள் நன்மை செய்வார் என அவர் நம்பமுடியவில்லை.

''அவன் கர்த்தரை நோக்கிப் பிரார்த்தித்து.'' (2,3). நினிவேயின் வாசிகள் மனந்திரும்பினால்

ஆண்டவர் அவர்களை அழிக்காமல் விடுவது உறுதியாகும் எனத் தாம் அறிந்துகொண்டதாக யோனா இந்த மன்றாட்டின்மூலம் அறிக்கையிடுகிறார். தாம் தர்ஷீசுக்கு ஓடிப்போகத் தீர்மானஞ்செய்ததின் காரணம் அவ்வறிவே என்பதாகவும் ஆண்டவருக்குச் சொல்லுகிறார். கடவுள் அசீரியரைத் தண்டியாமல் விட்டுவிட்டால் அவர்கள் (ஏனைய தீர்க்கதரிசிகள் சிலரும் கூறியுள்ளபடி) யூதரைச் சற்று நாளானபின் தாக்குவது உறுதி என்பார் யோனா. இதனாலுண்டான மனக்கசப்பைச் சகிக்கவொட்டாமல் தீர்க்கன் சாக விரும்புகிறார் பாருங்கள். கடவுள் சித்தப்படி நினிவேயின் மக்கள் மனந்திரும்பி இரட்சிப்படைவதைக் காண்பதைக் காட்டிலும் தாம் மரிப்பது நலம் என்று யோனா இரண்டாம் முறையாகத் தீர்மானித்தார். தற்காலமுங்கூடத் தேவதாசர் சிலர் பாவிகள் மனந்திரும்பி ஆண்டவரின் ஆசீர்வாதத்தை அனுபவிப்பதைவிட அவர் அவர்களைத் தண்டிப்பது நலம் என்பதாகத் தங்கள் நடக்கையைக் கொண்டு கூறுகிறார்கள். இது மகா விகனகரமான காரியமேயாகும்.

''நீர் இரக்கமும்... மிகுந்த கிருபையுமுள்ள கடவுள்.... என்பது எனக்குத் தெரிந்ததே'' *(2,3)*. யோனாவுக்கு இந்த அறிவு இருந்தும் கடவுள் பட்சபாதமில்லாதவர் என்கிற உண்மையை அவர் ஏற்றுக்கொள்ளவேயில்லை. ஆண்டவர் ''பட்சபாதமுள்ளவரல்ல என்றும், அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எந்த ஜாதியானாயினும் அவருக்கு உகந்தவன் என்றும்'' பேதுரு அப்போஸ்தலனும் பிற்காலத்தில் கற்கவேண்டியதாயிருந்ததல்லோ? (அப். *10:34,35*).

''நீ கோபங்கொள்வது நியாயமோ'' *(4)*. யோனாவின் ஆகமத்திற்குரிய மிகவும் முக்கியமான பிரச்சினை இக்கேள்வியில் அடங்கும். அது யாதெனில், கடவுள் நினி

வேயின் வாசிகளுக்கு இரக்கம் பாராட்டுவது நியாயமா? என்பதே. இந்த அதிகாரத்தின் பிந்திய வசனங்களின் மூலம் ஆண்டவர் இப்பிரச்சினையைத் தீர்த்துக் கடைசியாக யோனாவிடம் தாம் கூறிய அறைக்கூவலைத் திரும்பவும் கூறுகிறார்: (''மகா நகரமாகிய நினிவேயின் பொருட்டு நான் பரிதபியாமலிருப்பேனோ'' -வச. 11).

நகரத்துக்குச் சம்பவிக்கப் போவதைத் தான் பார்க்குமளவும்'' (5). ஆண்டவரின் வார்த்தையை ஏற்றுக் கொள்ள மனமில்லாமல் யோனா மனக்கசப்புடன் பட்டணத்திற்கு வெளியே சென்று ஒரு சிறிய குடிசையைக் கட்டி, நாற்பது நாளானபின் (3:4) என்ன நடக்கப் போகிறது என்று பார்க்கும்படி அதில் தங்கத் தீர்மானஞ் செய்தார்.

கர்த்தர் ஓர் ஆமணக்குச் செடி முளைக்கும்படி கட்டளையிட்டு....ஒரு பூச்சி வரும்படி கட்டளையிட்டார்.... அக்கினிக் கீழ்க்காற்று வரும்படி கட்டளையிட்டார்'' (6-8). இதை ''கர்த்தரோ.... பெருங்காற்றை வர விட்டார்'' (1:4): ''ஒரு பெரிய மீனுக்குக் கர்த்தர் கட்டளையிட்டிருந்தார்'' (1:17)' என்கிற சொற்களோடு ஒத்திட்டுப் பார்க்க. ஆண்டவர் தம் மக்களையும் தம் தாசரையும ஆவிக்குரிய பாங்காகப் பயிற்றுவிப்பதில் இயற்கையான சத்துவங்களையும் நிகழ்ச்சிகளையும் பயன்படுத்துவது சர்வ சாதாரணமான காரியமாகும். இவ்வுண்மை இந்த நிகழ்ச்சிகளினால் உதாரணமாயிற்று: ஆமணக்குச் செடி திக்ரீஸ்நதி ஓரமாக அடர்ந்த நிழலளிக்கும் ஒரு பெரிய மரமாக வளரும். இச்செடி அற்புதமாக வளர்ந்ததும் அதனால் தீர்க்கனுக்கு உண்டான மனக் கிளர்ச்சியும் ஆண்டவர் யோனாவுக்குக் கற்பித்த பாடத்தின் முதற்பாகமாகும் எனலாம்.

''கடவுள் ஒரு பூச்சி வரும்படி கட்டளையிட்டார்'' (7). இப்பொழுது யெகோவா தமது தாசனின் ஆவிக்குரிய

பயிற்சிக்காக இன்னோர் அற்புதச் செயலை ஆற்றுகிறார் பாருங்கள். ஆமணக்குச் செடி சில மணி நேரத்துக்குள் வாடிப் பட்டுப்போகத் தக்கதாகக் கடவுள் கட்டளையிட்ட ஒரு வகையான பூச்சி அதில் இறங்கி அதன் தழையைத் தின்றுவிட்டதுபோலும். சில விதங்களில் இதை போன்ற ஓர் அற்புதத்தைக் குறித்து மத். 21:19,20இல் எழுதியிருக்கிறது. ஆண்டவர் தீர்க்கனைச் செடியின் குளிர்ச்சியான நிழலைக்கொண்டு ஆறுதல் செய்த பின் செடியை அழித்து யோனாவை வனாந்தர வெளியில் அகோர வெயிலை அனுபவிக்கச் செய்தார். அதுவுமன்றி, வனாந்தரத்தில் ''அக்கினிக் கீழ்க்காற்று'' எழும்பப் பண்ணினார் கடவுள் (8). அந்தக் காற்று அதே சமயத்தில் எழும்பினது ஒருவேளை கடவுள் தமது தாசனுடைய பயிற்சியினிமித்தம் செய்த இன்னோர் அற்புதச் செயலாகும்.

''யோனா.... தளர்ந்து போனான்;.... தான் சாக விரும்பி'' (8). யோனா கொடிய வெயிலினால் சரீரப் பாங்காகச் சோர்வுற்றதோடு ஆன்மப் பாங்காகவும் சோர்வுற்றார். ஏனெனில், செடியின் நிழல் அற்றுப் போனதினால் வெகுவாக வருத்தப்பட்டார்.

''நீ கோபங்கொள்வது நியாயமோ?'' (9). ஆண்டவர் தாம் முந்திக் கேட்ட கேள்வியை யோனாவிடம் திரும்பவும் கேட்கிறார் (4). இப்பொழுது அவர் தமது தாசனுக்குக் கற்பிக்கும் படிப்பினையை வலியுறுத்தப் போகிறார். எவ்வாறெனில், ஆண்டவர் தாம் நினிவே நகரத்தாரைத் தண்டியாமல் விட்டது நியாயமேயொழிய வேறல்ல என்பதை யோனாவின் வாயைக்கொண்டே நிரூபிக்கிறார் பாருங்கள்.

''ஆமணக்குக்காகப் பரிதபிக்கிறாயே.... நினிவேயின் பொருட்டு நான் பரிதபியாமலிருப்பேனோ?'' (10, 11). அதாவது, ஒரே நாள் வாழும் ஒரு செடிக்காக யோனா

இத்தனை பெரிதான அனுதாபங்காட்டியிருக்க, நித்திய அழிவு அடையவேண்டிய இலட்சக்கணக்கான மனிதகுலத்தாருக்காக ஆண்டவர் பரிதபிப்பது நியாயமேயாகும்.

''வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் அறியாத மனுஷர்'' (11). இந்தச் சொல் சிறியோரை யாவது வாசிக்க எழுதத் தெரியாத பெரியோரையாவது குறிக்கும்.

''அநேக மிருக ஜீவன்களும்'' (11). தாம் உண்டாக்கின மிருகங்களுக்குங்கூட அனுதாபங்காட்டுவதாகக் கடவுள் கூறுகிறார். இது ஒரு செடி சம்பந்தமாக யோனா காட்டிய போலித்தனமான அனுதாபத்தைக் குற்றப் படுத்துமல்லோ?

எனினும், ஏனைய மதத்தினரோடு சம்பந்தங்கலவாத இந்த மதவைராக்கியசாலி யூதரல்லாத மக்களிடம் மனித சுபாவத்திற்குரிய எவ்வித அனுதாபத்தையும் காட்ட மாட்டார். ஆகையால், இந்தச் சந்தர்ப்பத்தில் யோனாவில் காணப்பட்ட முக்கியப் பாவங்கள் எவையெனில், தன்னயம், ஆத்மீக குருட்டாட்டம், அநீதி என்பவையே. ஆனால், கடவுள் இச்சிறிய ஆகமத்தின்மூலம் தம்மை நீதியுள்ளவராகவும் இரக்கமுடையவராகவும் வெளிப்படுத்தியுள்ளார்.

இந்நூலின் தொகுப்பான போதனை யாதெனில், ''என்ன சொல்லுவோம்? கடவுளிடத்தில் அநீதியுண்டென்போமோ? இல்லவேயில்லை. எவன்மேல் இரக்கமாயிருப்பேனோ அவன்மேல் இரக்கமாயிருப்பேன், எவன்மேல் உருக்கமாயிருப்பேனோ அவன்மேல் உருக்கமாயிருப்பேன் என்று அவர் மோசேயினிடம் சொன்னார்'' (ரோமர் 9:14, 15) எனப்பவுல் அப்போஸ்தலன் எழுதிய மொழியே யோனா ஆகமத்தின் தொகுப்பான பொருளாகும் என்பதே.

யோனா தீர்க்கன் தாம் இயற்றிய ஆகமத்தின் முடிவு மட்டும், ஆண்டவர் ஏனைய குலத்தாரை ஆசீர்வதிக்கும் திட்டத்திற்கு இணங்கமாட்டாதவராகத் தம்மை காட்டிய போதிலும் இந்த நிகழ்ச்சிகளுக்குப்பின் இது சம்பந்தமாகக் கடவுளின் அருள் இவரது நெஞ்சில் ஆழ்ந்த கிரியை செய்திருக்கவேண்டும். ஏனெனில், தம் ஆகமத்தை எழுதும்போது மனத்தாழ்மையுடன் தமது கீழ்ப்படியாமையைக் குறித்தும் ஆண்டவர் தம்மை சிட்சை செய்ததைக் குறித்தும் எழுதலானார்.

8

மீகா

முன்னுரை

எழுத்தாளர்

"மோரேஷத் ஊரானாகிய மீகாவுக்கு" *(1:1)*. மீகா என்னும் பெயர் மிகாயா என்கிற பெயரின் சுருக்கமாகும். 'யெகோவாவைப் போன்றவன்' என்பது இதற்குப் பொருளாகும். இந்தப் பெயர் யூதர்களுக்குள் அதிகமாய் வழங்கிற்று. உதா: இந்தத் தீர்க்கனின் காலத்திற்குச் சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னே மிகாயா என்னும் பெயர் கொண்டவரும் மிகவும் கீர்த்திவாய்ந்தவருமான தீர்க்கதரிசி ஒருவர் வாழ்ந்தார். *(1 இரா. 22:8-28)*.

இந்த மீகா என்பவர் மோரேஷத்காத் என்னும் ஊரார் *(1:14)*. அவ்வூர் யூதேயா நாட்டின் சமபூமியில் காத் நகருக்குச் சமீபமும் மத்தியதரைக்கடலுக்குச் சுமார் 32 கி.மீ. தூரத்திலும் இருந்தது. மீகா என்பவர் ஆண்டவரின் கீர்த்திவாய்ந்த வல்லமையான தாசனாவர் (அவர் தம்மைக் குறித்து 3:8இல் கூறிய சாட்சியத்தைக் கவனிக்க), அவரது எழுத்தின் நடை ஏசாயா தீர்க்கனின் நடையைப் போன்றதாகும்.

இயற்றிய காலம்

"யோதாம், ஆகாஸ், எசேக்கியா என்னும் யூதா இராஜாக்களின் நாட்களிலே" *(1:1)*. எனவே, மீகா என்பவர் ஏசாயா தீர்க்கதரிசிக்கு இளையவரான உடன்

தொண்டர். அவர் கி.மு. 751-ஆம் ஆண்டிற்கும் கி.மு. 678-ஆம் ஆண்டிற்குமிடையில் திருத்தொண்டாற்றினார். ஆகையால், இவர் சமாரியா மகா நகர் அசீரியருக்கு இரையாகுமுன்னும் இரையானபின்பும் திருப்பணி பாற்றினார்.

இயற்றப் பெற்றவர்கள்

மீகா இஸ்ரவேல் நாட்டாரிடமும் யூதேயா நாட்டாரிடமும் தீர்க்கதரிசனமுரைத்தார். ''சமாரியாவையும் எருசலேமையும்பற்றி'' என்று எழுதியிருப்பதைக் கவனிக்க *(1:1)*.

முக்கியமான பண்புகள்

மீகா தமது ஆகமத்தின்மூலம் இனி சப்பவிக்கும் பல நிகழ்ச்சிகளை முன்னறிவித்துள்ளார்.

உதாரணமாக :-

அ. இஸ்ரவேல் யூதேயாவின் அழிவும் அவைகளின் குடிகள் சிறைப்பட்டுப் போதலும்.

ஆ. வருங்காலத்தில் தங்கள் சுய நாடு திரும்பி அங்கே வாழுதல்.

இ. யூதரின் எதிரிகளாகிய பல நாட்டார் அழிவுண்டு போதல்.

ஈ. மேசியாவின் முதலாம் வருகை.

உ. மேசியாவின் இரண்டாம் வருகையும் மகிமை பொருந்திய அவர் அரசும்.

இந்நூலில் காணப்படும் சில வாக்கியங்கள் வேறு தீர்க்கதரிசன ஆகமங்களிலும் எழுதியிருக்கின்றன. *(மீகா 4:1-3; ஏசாயா 2:24; 4:4; சக. 3:10)*.

புதிய ஏற்பாட்டில் காணப்படும் மீகா ஆகமத்தின் வாக்கியங்கள்

மீகா 5:2: இது மத். *2:6*இலும் யோவான் *7:22* இலும் காணப்படும்.

மீகா 7:6 : இது மத். *10, 21, 35, 36*இல் கூறியிருக்கிறது.

மீகா 7:20 : இது லூக்கா *1:54, 72*இல் எழுதியிருக்கிறது.

பிரிவுகள்

1. வரப்போகும் கோபாக்கினை-*1:1-16*.
2. தீமை செய்கிறவர்களைக் கண்டித்தல்-*2:1-3:12*.

அ. பொருளாசையுள்ள குடியானவர்கள்-*2:1-11*.

ஆ. தேச அதிகாரிகள், தீர்க்கர்கள், ஆசாரியர்கள் -*3:1-12*.

3. கர்த்தரின் பர்வதம்-*4:1-5*.
4. ஆசீர்வாதமும் ஆக்கினையும் கூறுதல்-*4:6-5:1*.
5. மீட்பரின் வருகை-*5:2-15*.
6. ஆண்டவருக்கும் இஸ்ரவேலருக்குமுள்ள வழக்கு -*6:1-7:20*

அ. ஆண்டவர் மக்களை வருந்தி அழைத்தல்-*6:1-8*.

ஆ. நதரத்தாரின் பாவத்தைக் கண்டித்தல்-*6:9-16*.

இ. தீர்க்கன் நாட்டில் மேலிட்டு வந்த அக்கிரமத்தினிமித்தம் புலம்பியது-*7:1-6*.

ஈ. பாவ அறிக்கையும் கடவுள் வாழ்த்தும்-*7:7-20*.

விளக்கவுரை

1. வரப்போகும் கோபாக்கினை-1:1-16.

''....யூதா ராஜாக்களின் நாட்களிலே மோரேஷத் ஊரானாகிய மீகா'' (1). மேலே முன்னுரை, எழுத்தாளர், இயற்றிய காலம் என்னும் பிரிவுகளைக் காண்க.

''சமாரியாவையும் எருசலேமையும் பற்றி'' (1). இரு அரசுக்களின் தலைநகர்கள் இவ்வசனத்தில் இரு இராஜ்யங்களைக் குறிக்கும். சமாரியா ஏன் முதலாவது எழுதியிருக்கிறது என்றால் அதன் அரசு அக்கிரமஞ்செய்வதில் யூதாவை முந்திக்கொண்டது அதற்குக் காரணமாயிருக்கலாம். மேலும், அந்தத் தலைநகரமே முதன்முதலாக அழிக்கப்படக் கிட்டிற்று.

''சகல ஜாதிகளே, கேளுங்கள்'' (2). 3:1ஐயும் 6:2ஐயும் காண்க. ஏசாயா தீர்க்கதரிசி தமது ஆகமத்தை இவ்வகையாக ஆரம்பித்தார் (ஏசாயா 1:2). ஆண்டவர் தம் மக்களுக்கு விரோதமாய்க் கூறுவதை வந்து கேட்கும்படி சகல ஜாதியாரையும் அழைக்கிறார் (ஆமோஸ் 3:9, 10ஐக் காண்க).

''தமது பரிசுத்த ஆலயத்தில் இருக்கிற ஆண்டவரே'' என்கிற மொழியில் 'ஆலயம்' என்பது பரலோகத்தைக் குறிக்கும் (சங். 11:4).

''மலைகள் அவர் கீழே உருகும், பள்ளத்தாக்குகள் பிளந்துபோகும்'' (4). கடவுள் பாவிகளான மக்களைத் தண்டிக்கும்படி பூகம்பங்களாலும் எரிமலைகள் பொங்குவதினாலும் சந்திப்பதாகச் சங். 97:4,5; ஆமோஸ் 1:1; மத். 24:27:51,54; வெளி. 6:12இலும் படிக்கலாம்.

''துரோகத்தினிமித்தமும்...பாவங்களினிமித்தமும்'' (5). இரு நாட்டாரின் பாவமே வரப்போகும் தண்டனைக்குக் காரணமாகும். மீண்டும், இரு நாடுகளின் தலைநகர்களோ மிஞ்சின பாவமுள்ளவை என்பதை கவனிக்க (வச. 1ஐக் காண்க).

''மண் மேடும்........'' (6, 7) உண்டாகும் அழிவைப் பயங்கர வகையாக வர்ணிக்கிறார் தீர்க்கன். சமாரியா மகா நகர் அணுகுண்டினால் அழிந்த ஒரு தற்காலப் பட்டணம் போலாகும்.

வேசிப் பயணத்தால் வந்தன'' (7). சமாரியாவி லுள்ள விக்கிரகங்கள் வேசித்தனத்தின் வருவாயைக் கொண்டு செய்யப்பட்டன. அவை கடவுளுக்கு அருவருப் பானவை; அவர் அவற்றையெல்லாம் அழித்துப்போடு வார். ஓசியா தீர்க்கதரிசியும் விக்கிரக வணக்கத்தை ஆவிக்குரிய வேசித்தனத்திற்கு ஒப்பிட்டுக் கூறியதைக் கவனிக்க (ஓசியா 8:9, 10; 9:1 முதலியன).

''நான் புலம்பி அலறுவேன்;....ஊளையிட்டு...கதறு வேன்'' (8). சீக்கிரத்தில் உண்டாகும் அழிவைக்குறித்துத் தாம் கொண்ட ஆறாத்துயரை இவ்வாறாக மீகா கூறிய தன் நோக்கம் யாதெனில், தனது தூது மகா முக்கியமும் அவசரமுமானது என்பதை மக்களுக்கு உணர்த்துவதே. ஏசாயாவும் எரேமியாவும் தங்கள் நாட்டாருக்காக இவ்வாறு ஆறாத் துயர்கொண்டவர்களாகப் புலம்பினர் (ஏசாயா 22:4; எரே. 9:1).

''அதன் புண் ஆறாதது'' (9). சமாரியாவுக்கு விமோசனமில்லை. அது அழிந்து போகவேண்டியதே. அதை அழிக்கும் அந்நிய சேனைகள் கிட்டிச் சேருகின்றன. அதனிமித்தமே தீர்க்கன் துயரடைந்தார். இஸ்ரவேல் இராஜாவாகிய ஓசெயாவின் ஆறாம் ஆண்டில் ஆசீரியர் சமாரியாவை முற்றுகைபோட்டு அவ்வரசனின் ஒன்பதாம் ஆண்டில் அதை பிடித்தனர் (2 இரா. 17:1-6). ஆசீரியர் சீக்கிரம் எருசலேமையும் தாக்குவதாகப் பாவனை காட்டினர்.

''அதை காத் நகரத்தில் அறிவிக்கவேண்டாம்'' (10). 2 சாமு. 1:20ஐக் காண்க. நமக்கு நேரிடும் தீமையை

நம் சத்துருக்களின் கிராமங்களில் பிரஸ்தாபம் பண்ணாமல் நம் சொந்த ஊர்களில் கூறுங்கள் என்பது இவ்வாக்கியத்தின் பொருளாகும். ''பெத்அப்ராவில்''. பெத் அப்ரா என்பதற்குத் தூசியிள்ள வீடு என்று அர்த்தமாகும். எனவே, மீகா, நீ போய்த் தூசியுள்ள வீடு என்கிற இடத்தில் புழுதியில் புரளு என்கிறார்.

''பெத்அப்ரா...சாப்பீர்... சாயனான்.... பேத்ஏசேல்.... மாரோத்...லாகீஷ்....மோர் ஷேத்காத்....அக்சீப்....மரேஷா அதுல்லாம்'' *(10-15)*. எதிரிகளின் சேனை யூதேயா நாட்டின் மத்தியில் புகுந்து இந்த ஊர்களின் வழியாய்ச் செல்லும் என்பதாக மீகா மக்களை எச்சரிக்கிறார். இவ்வூர்களில் மீகாவின் சொந்த ஊர் ஒன்றாகும் (மேலே முன்னுரை, எழுத்தாளர் என்னும் பகுதியைக் காண்க). இந்தக் கிராமங்களெல்லாம் எருசலேமுக்குத் தென் மேற்குத் திசையில் இருந்ததாகத் தோன்றுகிறது.

''லாகீஷில் குடியிருக்கிறவர்களே, வேகமான குதிரைகளை ரதத்திலே பூட்டுங்கள்'' *(13)*. இந்தப் பாகத்தில் குறிப்பிட்டுள்ள ஊர்கள் எல்லாவற்றிலும் லாகீஷானது முக்கியமான இடமாகும். அவ்வூரார் தங்கள் குதிரைகளையும் இரதங்களையும் தயார்செய்து தங்கள் உடைமைகளை எடுத்துக்கொண்டு ஓடவேண்டுமாய்த் தீர்க்கன் ஏவிவிடுகிறார். லாகீஷ் ஊர் குதிரை இரத வியாபார சம்பந்தமாக மிகவும் பெயர்போன இடமாயிருந்தது. அங்கு இஸ்ரவேல் நாட்டாரும் யூதேயா நாட்டாரும் ஏராளமான குதிரைகளையும் இரதங்களையும் எகிப்தியரிடம் வாங்கிக் கொண்டனர். ''சீயோன் குமாரியின் பாவத்துக்குக் காரணர்.'' இச்சொல்லில் கூறிய பாவம் யாதெனில், யெகோவாவை நம்பிச் சாராமல் எகிப்தியரிடம் அநேக இரதங்களையும் குதிரைகளையும் கொண்டு அவைகளையே (அவற்றின் பலத்தையே) நம்பிச் சார்ந்ததே அப்பாவமாகும் (ஏசாயா *31:1;36:9*). அவ்வாறு வாங்கின இவைகள் யூதேயாவின் தென் எல்லையி

லிருந்த லாகீஷுக்கு முதன் முதன் வந்து அந்நாட்டில் சேர்ந்தபடியால் அந்த ஊராரே மேற்படி பாவத்துக்குக் காரணர் எனலாம்.

''மோரேஷத்காத்துக்குச் சீதனத்தைக் கொடுத்து விடுவாய்'' (14). இவ்வசனத்தின்மூலம் மீகா கூறுவது யாதெனில், அது பின்வருமாறு என நிதானிக்கிறோம். என் சொந்த ஊரார் எதிரிகளின் பட்டாளத்தார்முன் ஓடிப்போகும்போது அவர்கள் தங்கள் கைகளில் எடுத்துக் கொள்ளக்கூடியதைத் தூக்கிக்கொண்டு ஓடுவார்கள், அது ஒரு மனிதன் தன் மனைவியை விவாகரத்து செய்யுஞ் சமயத்தில் அவளுக்கு ஏதாவது பணம் கொடுத்து அனுப்பி விடுவது போலாகும் என்பது. ''அக்சீபின் வீடுகள்'' அக்சீப் என்பதற்குப் பொய் என்று அர்த்தமாகும். எனவே அவ்வூராரை நம்பிச் சார்வது மோசமாய் முடியும் என்பதாகத் தீர்க்கன் கூறுகிறார். அக்சீபின் வாசிகள் எதிரிகளின் படையை நிறுத்துவது இயலாது.

''இஸ்ரவேலின் மகிமை அதுல்லாம் மட்டும் பரவும்'' (15). அதாவது, யூதேயாவுக்கு மகிமையான கோட்டையாகிய அதுல்லாம் வரைக்கும் சத்துருக்கள் முன்னேறி அதையும் பிடித்துக்கொள்வார்கள். தாவீது முற்காலத்தில் அடைக்கலம் புகுந்து தங்கின பெயர்போன கெபி அதுல்லாம் என்ற இடத்திலிருந்தது (1 சாமு. 22:1).

''உன் தலையைச் சிரைத்து மொட்டையிட்டுக் கொள்'' (16). இது ஆறாத் துயரத்துக்கு அடையாளமாகும் (ஏசாயா, 22:12).

2. தீமை செய்கிறவர்களைக் கண்டித்தல் -2:1-3:21.

ஆ. பொருளாசையுள்ள குடியானவர்கள் - 2:1-11.

நிலங்களின்மேல் ஆசை வைத்த செல்வந்தரை ஆண்டவர் மீகாவின்மூலம் கண்டனம்பண்ணுகிறார். ஏழை

களின் நிலங்களை வாங்கிப் பெரிய சொத்துக்காரரானர்: மீண்டும், அவர்கள் ஏழை மக்களைத் தங்களுக்குச் சேவை செய்கிறவர்களாகவும் அடிமைகளாகவும் செய்தனர்.

''அக்கிரமத்தை யோசித்துத் தீமைசெய்ய எத்தனம் பண்ணுகிறவர்களுக்கு ஐயோ கேடாம்.... கர்த்தர் இப்படி சொல்லுகிறார்: நான்.... தீங்கை யோசிக்கிறேன்'' *(1-3)*. இதை கலா. *6:7* ஓடு ஒத்திட்டுப் பார்க்க.

''வயல்களையும் ஆசித்து........வீடுகளை இச்சித்து........ புருஷனையும் அவன் வீட்டையும்.... ஒடுக்குகிறார்கள்'' *(2)*. ஏசாயா தீர்க்கனும் இப்பாவத்தைக் கண்டனம் பண்ணினார் (ஏசா. *5:9*). நாபோத் என்பவனின் நிலத்தைப்பற்றிய வரலாற்றையும் கவனிக்க *(1* இரா. *21:1-16)*.

''பரியாசமாய்ப் பாடி, ஒப்பாரி சொல்லி'' *(4)*. ''துயரமான புலம்பலாய்'' எனப் ப. திலில் எழுதியிருக்கிறது. மேலே *1:8*இன் பேரிலுள்ள குறிப்பைக் காண்க. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எருசலேமை நோக்கிக் கூறிய பிரலாப மொழியை இதோடு ஒத்திட்டுப் பார்ப்பது நலம் (மத். *23:37*; லூக்கா *19:41-44*). கடவுள் சித்தத்திற்கு மாறாக நடப்பவர்களுக்கு உண்டாகும் கதியை யோசிக்கையில் அவர்களினிமித்தம் புலம்ப வேண்டியதல்லோ? இவ்வாக்கியத்தில் குறிப்பிட்ட தண்டனை அதிகமான சொத்துடைய செல்வந்தர்களின்மேல் விழுவதாகும். அவர்கள் ஏழைகளின் நிலங்களை அபகரித்துள்ளார்கள்; ஆகவே, அவர்களது நிலங்களைப் புறநாட்டார் அபகரித்துக்கொள்வர்.

''சீட்டுப் போட்டு அளவு நூலால் பகிர்ந்து கொடுப்பவர்கள்....இல்லாமற்போவார்கள்'' *(5)*. பலஸ்தீனா தேசத்தில் ஒவ்வோர் ஊரிலும் ஆண்டுதோறும் சீட்டுப்

போட்டு நிலத்தை அந்தந்தக் குடும்பத்தாருக்குப் பகிர்ந்து கொடுப்பது வழக்கமாயிருந்தது (யோசுவா 14:1,2). மக்கள் ஒருவரின் நிலத்தை ஒருவர் அபகரித்தபடியால் இவ்வழக்கமும் இல்லாமற்போவதாகத் தீர்க்கன் சாதிக்கிறார்.

''பொழிய வேண்டாம்'' *(6)*. இதை ஆமோஸ் 2:12 டோடு ஒத்திட்டுப் பார்க்க. பாவத்தில் நிலைகொண்டிருப்பவர்கள் கடவுளின் எச்சரிப்பான தூதை கேட்க மனமற்றுப்போவர் என்பது உறுதியாகும்.

''என் ஜனத்தின் ஸ்திரீகளை அவர்களுடைய அருமையான வீடுகளிலிருந்தும் துரத்திவிடுகிறீர்கள்'' (9). அந்தக் காலத்தில் களவு அதிகரித்தது. வச. 8 பதிலைப் கவனிக்க. இது சம்பந்தமாக ஆண்டவர் கூறியதையும் காண்க (மத். 5:40; லூக்கா 6:29). மேற்குறிப்பிட்ட தனவந்தர் விதவைகளையும் அநாதப் பிள்ளைகளையும் ஒடுக்கி அவர்களது உடமைகளை அபகரிக்கக்கூடிய நீசராயிருந்தனர் (யாத். 22:22-24).

''நீங்கள் செய்த அசுத்தமே காரணம்; அது நாசம் விளைவிக்கும்'' (10). அந்த மக்கள் தங்கள் அக்கிரமத்தினால் கடவுளின் நாட்டைத் தீட்டுப்படுத்தினார்கள். ஆகவே, அந்நாடு அவர்களைத் தள்ளிவிடும்; அதில் அவர்களுக்கு இனி இளைப்பாறுதல் இராது என்பது பொருள். ஏசாயா 48:22;57:21ஐக் காண்க.

''அவனே இந்த ஜனத்துக்கு ஏற்ற பிரசங்கியாயிருப்பான்'' (11). ஆண்டவரின் உண்மையான தீர்க்கன் தம் தூதை அலட்சியம் அல்லத்தட்டின மக்களை அவர்களின் கள்ளத் தீர்க்கதரிசிகள் சம்பந்தமாக ஏளனம்பண்ணுகிறார்.

குறிப்பு: வச. 12, 13ஐ விளக்குவதற்கு 5:4 மிகவும் பயன்படும். அவ்வாக்கியத்தின் பேரிலுள்ள குறிப்பைக் காண்க.

ஆ. தேச அதிகாரிகள், தீர்க்கர்கள், ஆசாரியர்கள் - *3:1-12.*

''யாக்கோபின் தலைவரே, இஸ்ரவேல் வீட்டாரின் அதிபதிகளே'' *(1)*. வச. 9ஐயும் 11ஐயும் காண்க. இவ் வாக்கியத்தில் குறிப்பிட்ட ''தலைவர்'' நீதிபதிகளாவர். ''அதிபதிகள்'' என்பது தேச அதிகாரிகளைக் குறிக்கும். இவ்விரு வகையான அதிகாரிகளின் கடமை யாதெனில், அரசாங்கத்தின் நலனைக் கருதி மக்களை நீதியாகவே ஆளுவதாகும். அவர்களோ அவ்வாறு செய்யாமல் மக்க ளைக் கொடுமையாக ஒடுக்கி வந்தனர். ''நியாயத்தை அறிவது உங்களுக்கோ அடுத்தது'' *(1)*. நீதியை நிலை நாட்டவேண்டிய இவர்கள் நியாயம் இன்னதென அறி யார்கள்! இத்தகைய மனிதரை மேலான அதிகாரிகளாகக் கொண்ட நாட்டுக்கு ஐயோ! ஆமோஸ் 2:6ஐயும் காண்க.

மனிதரின் தோலை உரித்து... என் ஜனத்தின் சதை யைப் பட்சிக்கிறீர்கள் அவர்கள் எலும்புகளை முறிக் கிறீர்கள்'' *(2, 3)*, ஏழைகள் பட்டினியாயிருக்கத் தலை வர்கள் சுகபோகமாக வாழுகின்றனர்.

''அவர்கள்... கூக்குரலிட்டாலும்.... அக்காலத்தில்'' *(4)*. அக்காலம் என்பது இஸ்ரவேல் இராஜ்யம் அழிந்து போகும் காலத்தைக் குறிக்கும் (ஓசியா 5:6, 15). அந் நாட்டு மக்களைப்போன்ற பாவிகள் தண்டனையடையும் நாளில் அவர்கள் அனுபவிக்கும் துயரமானது மிகக் கொடிதேயாகும். அவ்வேளையில் அவர்கள் பண்ணும் மன்றாட்டுக்குப் பதிலேயில்லை. அவர்கள் விடுதலைப் பெறக்கூடிய தருணம் தப்பிவிட்டது என்று அறிந்து கொள்ள நேரிடும் என்பது கருத்தாகும்.

''தீர்க்கதரிசிகளுக்கு விரோதமாய்க் கர்த்தர் சொல் வதைக் கேளுங்கள்' *(5)*. ஆண்டவரின் உண்மையான தீர்க்கன் கள்ளத்தீர்க்கதரிசிகளைத் திரும்பவும் தாக்கு கிறார் (2:11ஐக் காண்க). அரசாங்க அதிகாரிகளைப்

போலவே இவர்களும் பொருளாசை நிறைந்தவர்கள். ''வாய்க்கும் ஒன்றும் கொடாத எவனுக்கும்'' (5). தங்களுக்குக் கைக்கூலி கொடாத மக்களை இம்சை செய்தனர் என்பது பொருள்படும். இதை படிக்கும் நாம் கடவுளைச் சேவிப்பதாகச் சாதிக்கும் பட்சத்தில் பொருளாசைக்கு எச்சரிப்பாயிருத்தல் வேண்டுமல்லோ? (1 தீமோ. 3:3; தீத்து 1:7).

''தரிசனம் வராத இரவும்....உங்களுக்கு வரும்''(6,7). அதாவது, மேலே கூறிய வண்ணமும் மக்கள் கள்ளத் தீர்க்கரிடம் ஆலோசனை கேட்குங்கால் கடவுளிடமிருந்து அவர்களுக்குப் பதில் உண்டாகாது. ஏனெனில் அத்தகைய ஆலோசனைக்காரர் ஆண்டவரின் சித்தம் இன்னதெனக் காட்டும் உண்மையான தரிசனம் காண்பதில்லை. காலத்தின் அடையாளங்களை அவர்கள் அறியாதபடி கடவுள் அவர்களுக்கு ஆவிக்குரிய அந்தகாரமுண்டாக்குவார்.

''நானோ....பலமும் நியாயமும், தைரியமும் நிறைந்தவன்'' (8). மீகா என்பவர் தமக்கும் இந்தக் கள்ளத் தீர்க்கருக்குமுள்ள வேற்றுமையைக் காட்டும் பொருட்டுத், தமக்கு வல்லமை, நீதி, வைராக்கியம் ஆகியவை இருப்பதாகச் சாதிக்கிறார். தேவ ஆலியானவர் தமக்கு அருளிய இவற்றைக் கொண்டு ''யாக்கோபு''ஆகிய யூதா நாட்டின் குடிகளையும் ''இஸ்ரவேல்'' நாட்டாரையும் (அவர்கள் பாவங்களினிமித்தம்) கண்டனம் பண்ணத் தமக்கு அதிகாரமுண்டு என்கிறார்.

''யாக்கோபு வீட்டாரின் தலைவரே'' (9-11) மேலே வச. 1 இன்பேரிலுள்ள குறிப்பைக் காண்க.

''ஆசாரியர்கள் கூலிக்கு உபதேசிக்கிறார்கள்'' (11). அதிகாரிகளையும் தீர்க்கர்களையும்போலவே இவர்களும் கூலி வாங்கினால் மட்டும் தங்கள் கடமையைச் செய்யச் சம்மதிப்பர். எனினும், ஆண்டவர் தங்கள் மத்தியில் இருப்பதாகவும் தங்களுக்கு எந்தவிதத் தீங்கும் நேரிடாது

என்பதாகவும் நினைத்தனர். இத்தகைய சிந்தனைகள் எத்தனை மூடத்தனமானவை! பொருளாசையானது எவ்வளவோ பயங்கரமான பாவமாகும்! யூதாஸ்காரியோத் என்பவனைக் கெடுத்தது அதுவே (யோவான் 12:6).

''ஆகையால்.... சீயோன் வயல் வெளியைப்போல உழப்படும்'' (13). இந்தப் பயங்கரமான அழிவு இரு இராஜ்யங்களின் அதிகாரிகளிடம் காணப்பட்ட மகா மோசமான அக்கிரமத்திற்குக் கடவுள் விதித்த நியாய மான தண்டனையாகும். இந்தத் தீர்க்கதரிசன மொழி உண்மையில் நிறைவேறிற்று அல்லோ? மேலும், மீகா இவ்வார்த்தையைக் கூறிச் சுமார் நூறு ஆண்டு சென்ற பின் ஒருவர் அதை நினைவு கூர்ந்ததைக் கவனிக்க (எரே. 26:18). அந்தக் காலத்தில் எரேமியா தீர்க்கன் இதை போன்ற பயங்கரமான மொழிகளைக் கூறியதால் மக்கள் அவரைக் கொலை செய்ய எத்தனித்தனர். எனினும், அவ்வேளையில் ஒருவர் மீகா 3:12ஐ வாசித்தபடியால் எரேமியாவை உயிரோடு விட்டனர் (எரே. 26:18, 19, 24ஐக் காண்க).

3. கர்த்தரின் பர்வதம் (4:1-5).

''கடைசி நாட்களில்'' (1). இவ்வாக்கியத்தோடு ஆரம்பமாகும் பொருள் இதற்கு முந்திய பொருளுக்கு எவ் வளவோ வேற்றுமையானது! மீகா என்பவர் தமது ஆக மத்தில் இப்படித் தாம் எழுதும் பொருளைச் சடிதியில் மாற்றுவது வழக்கமாகும். உதா: அதி. 2:13இன் இறுதி யில் காணப்படும் மாறுதலைக் கவனிக்க.

இவ்விடத்தில் தீர்க்கன் சீர்கெட்ட மக்களைக் கண்டிப் பதைவிட்டு ''கடைசி நாள்களில்'' சம்பவிக்கும் சில மகத் தான நிகழ்ச்சிகளைக் குறித்து எழுத ஆரம்பிக்கிறார்.

இத்தரிசனத்தைப் போன்றதொன்று ஏசாயா 2:2-5 இல் குறிப்பிட்டிருத்தலைக் காணலாம். அவ்வசனங்களும்

இவ்வாக்கியங்களும் ஒன்றுபோல் இருக்கின்றன. இந்தத் தரிசனம் இவ்வண்ணமாக வேதத்தில் இருமுறை விவரித்திருப்பதால் அது மிகவும் முக்கியமும் உறுதியாகவே நிறைவேறுவதுமானது என்பது புலப்படும் (ஆதி. 41:32ஐக் காண்க.

''மலைகளின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு....'' (1). மக்களது பாவங்களினிமித்தம் சீயோன் மலைக்குச் சீக்கிரத்தில் உண்டாகும் தண்டனைக்கு எதிர்மறையாகக் கடவுள் ஆலயத்தின் பிந்திய கால மாட்சிமையை மீகா இப்பொழுது தரிசனமாகக் காண்கிறார். இவ்வாக்கியத்திலும் வச. 2-5இலும் கூறியிருக்கும் நிகழ்ச்சிகள் இந்த யுகத்தின் இறுதியில் உண்டாகும் மேசியாவின் ஆளுகை சம்பந்தமானவை. மற்றெல்லா இராஜ்யங்களைக் காட்டிலும் கிறிஸ்து நாதரின் மிகவும் மாட்சிமை பொருந்தியதாயிருக்கும். ஏனெனில், அவரது அரசியல் ''குன்றுகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்'' என்று எழுதியிருக்கிறது.

''பல ஜாதிகள் புறப்பட்டு வந்து'' (2). அதாவது, அக்காலத்தில் பல நாடுகளிலுள்ள மக்கள் தங்களுக்குத் தெய்வீக ஞானமும் நடத்துதலும் அவசியமென உணருவார்கள். உணர்ந்து, ஆண்டவரின் வழிகளைக் கற்று அவைகளில் செல்ல விரும்புவார்கள். ''எருசலேம்'' மகாநகர் மேசியாவின் இராஜ்யத்துக்குத் தலைநகரமாகும்.

''அவர் அநேக ஜனங்களுக்குள் நியாயந்தீர்ந்து'' (3). சீயோன்மலை உலகமுழுவதற்கும் மகா சட்டமன்றம் கூடும் இடமாகும் என்பது இதற்குப் பொருளாகும். கிறிஸ்துநாதர் வந்தபின் இரு அரசுகளிடையில் விவாதம் ஏற்படும்போது அதை தீர்த்துக் கொடுக்க யாக்கோபுவின் தேவனாகிய அவரிடம் (எருசலேமில்) செல்வர். ''பட்டயங்களைக் கலப்பைக் கொழுக்களாகவும்....மேசியாவின் ஆளுகை நிலைநாட்டப்படும் காலத்தில் உலகமெங்குள்ள

மக்கள் தங்கள் சகல படை ஆயுதங்களையும் அழித்துப் போடுவர், அந்தக் காலம்வரைக்கும் யுத்தங்கள் நடந்தேறிவரும். ஆனால், அக்காலத்தில் யுத்தங்கள் ஒழிந்தே போகும். மீண்டும் சகல நாட்டாரும் தங்கள் போரா யுதங்களை நற்பலன் தரும் விவசாய முதலிய தொழில்களுக்குரிய கருவிகளாக மாற்றி அத்தகைய தொழில்களில் தங்கள் பொருளைப் பயன்படுத்துவார்கள் என்பது இவ் வாக்கியத்தின் கருத்தாகும்.

''அவனவன் தன்தன் திராட்சைச் செடியின் நிழலிலும் தன்தன் அத்திமரத்தின் நிழலிலும்....உட்காருவான்'' (4). திராட்சச்செடி அத்திமரமாகியவை பலஸ்தீனா நாட்டிற்கு மாதிரியானவை எனலாம். ஒருவர் தம் திராட்சச்செடியினடியிலும் உட்காருவார் என்பது யூதருக்குள் பூரண சமாதானத்தையும் சுகபத்திரமான நிலையையும் குறிக்கும் வழக்கச் சொல்லாகும். இந்தச் சொல் சாலொமோன் அரசன் காலத்தில் நிலவிய சமாதானத்தைக்குறித்துப் பயன்பட்டதைக் கவனிக்க (1 இரா. 4:23). இயேசுநாதர் பூமியெங்கும் அரசாளும் காலத்தில் எந்த நாட்டாராயினும் அயல் தேசத்தாரால் உண்டாகக் கூடிய தாக்குதலுக்குப் பயப்படுவதற்கில்லையே: ஏனெனில், ''கர்த்தருடைய வாய் இதை'' சொன்னபடியால் அக்காலத்தில் பூச்சக்கர முழுவதிலும் பங்கப்படாத அமைதி நிலவும் என்பது உறுதியாகும்.

மீகா ஏசாயா என்பவர்களுக்கு ஆண்டவர் அளித்த மகத்தான தரிசனம் இதுவே. கிறிஸ்து நாதர் திரும்ப வந்தபின் அது நிறைவேறுவது உறுதியேயாகும். ஆயினும், தற்காலம் சர்வ மக்களும் கடவுளின் ஆலயத்துக்கும் அவரது விதிவிலக்குகளுக்குமுள்ள மேன்மையை உணருகிறதில்லை என்பது துக்ககரமான உண்மையேயாகும். பெரும்பாலோர் வச. 5 இல் கூறியுள்ள நிலையில் இருக்கிறார்கள் (அடுத்த குறிப்பைக் காண்க).

''சகல தேசத்தாரும் தங்கள் தங்கள் தெய்வத்தின் நாமத்தில் நடப்பார்கள்; நாங்களோ எங்கள் கடவுளாகிய கர்த்தருடைய நாமத்திலே ...நடப்போம்'' (5). இவ்வாக்கியத்தின் உள்ளான கருத்து யாதெனில், சகல தேசத்தாரும்....நடக்கிறார்கள்; நாங்களோ... நடப்போம் என்பதேயாகும்.

4. ஆசீர்வாதமும் ஆக்கினையும்
கூறுதல்-4:6-5:1

''அந்நாளிலே'' (6). இது மேசியாவின் இராஜ்யம் வெளிப்படும் நாளைக் குறிக்கும் (வச. 1ஐக் காண்க). ''நான் நொண்டியானவர்களைச் சேர்த்து'' (6). இவ்வாக்கியத்தின்மூலம் மீகா இஸ்ரவேல் மக்களை வெகு தூரம் உஷ்ணமான வெயிலில் நடந்து விடாய்த்து நொண்டியாய் நடக்கும் ஆடுகளுக்கும் ஒப்பிட்டு எழுதி உள்ளார். ஆண்டவர் அவர்கள் பாவங்களினிமித்தம் அவர்களை அடித்தபின் அரவணைத்து அவர்கள் நாட்டில் அவர்களைத் திரும்பவும் சேர்த்து வாழ்விப்பதாக உரைக்கிறார்.

''பலத்த ஜனமாகவும் வைப்பேன்; அவர்கள்மேல் கர்த்தர் சீயோன் பர்வதத்திலே....என்றுமாக இராஜாவாயிருப்பார்'' (7). இது மேசியா எருசலேமில் அரசாளுவதை மிகத் தெளிவாகக் குறிக்கிறது. இவ்வசனத்திலும் அடுத்த வாக்கியத்திலும் ஒரே இராஜ்யம் குறிப்பிட்டிருப்பதால் யூதா அரசு இஸ்ரவேல் அரசு ஆகிய இரண்டும் ஆண்டவரின் ஒரே இராஜ்யமாகும் என்பது இதன்மூலம் தெளிவாகும். மேலும், எருசலேம் மாநகர் அவ்விராஜ்யத்தின் தலைநகராயிருக்கும் (மேலே வச. 2ஐக் காண்க).

''மந்தையின் காவல் மேடையே'' (8). முந்தின வசனங்களில் மீகா இஸ்ரவேலை ஒரு மந்தைக்கு ஒப்பிட்டபின் இவ்வாக்கியத்தில் எருசலேம் நகரை அம்மந்தையின் காவல் மேடையாகப் பாவிக்கிறார். மந்தைகளைச்

காவல் செய்வதற்குப் பலஸ்தீனா நாட்டில் இத்தகைய ஏராளமான மேடைகள் உண்டு.

''பிரசவ ஸ்திரீயைப்போல அம்பாயப்பட்டு....நகரத்திலிருந்து புறப்பட்டு வயல்வெளிகளில் தங்கி'' *(10)*. தீர்க்கன் திரும்பவும் தமது பொருளை மாற்றி, இஸ்ரவேல் அரசு திரும்ப நிலைநாட்டப்படுமுன் அதன் மக்களுக்கு உண்டாகும் கொடிய துன்பத்தை இப்பொழுது வர்ணிக்கிறார். அத்துன்பம் உண்டாகும் நாளில் மந்தையின் காவல் மேடையாகிய எருசலேம் நகர் மந்தையின் ஆடுகளாகிய மக்களைத் தப்புவிக்கக் கூடாமல் போகும். தங்கள் பட்டினியின்று துரத்திவிடப்படுவர். அந்தத் தொல்லையை மீகா பிரசவிக்கும் ஒரு பெண்ணுக்கு உண்டாகும் வேதனைக்கு ஒத்திட்டுப் பேசுகிறார் (ஏசாயா *26:17, 18*).

''பாபிலோன்வரைக்கும் போவாய், அங்கே விடுவிக்கப்படுவாய்; அங்கே கர்த்தர் உன்னை உன் சத்துருக்களின் கையினின்று மீட்டு இரட்சிப்பார்'' *(10)*. இது மிகவும் முக்கியமான தீர்க்கதரிசன மொழியாகும். ஏனெனில், மீகா என்பவர் வாழ்ந்த காலமாகியச் சுமார் நூறாண்டு காலஞ்சென்ற பின்புதான் பாபிலோன் நகர் கீர்த்தி வாய்ந்ததாயிற்று. இந்தத் தீர்க்கன் இதை இயற்றிய காலத்தில் நினிவே மகா நகரத்தாரும் அசீரிய சாம்ராஜ்யத்தினருந்தான் பலஸ்தீனா நாட்டாரைப் பயமுறுத்திவந்தனர். இவ்வாக்கியத்தில் அங்கே என்னும் பதம் இருமுறை பயன்பட்டிருப்பதை நன்கு கவனிக்க. ஆம், ''அங்கே'', அதாவது பாபிலோனிலேயே கோரேஸ் அரசன் சிறையிருப்புக் காலஞ் சென்றபின் யூதரை விடுவிக்க வேண்டுமென வாஞ்சித்தார் (2 நாளா. *36:20-23*).

''அநேக ஜாதிகள் உனக்கு விரோதமாய்க் கூடி'' *(11)*. இஸ்ரவேலைப் பயமுறுத்திவந்த எதிரிகள் பலர். அக்காலத்தில் அசீரியரும் சீரியரும் முக்கியமானவர்கள்.

பிந்திய நாள்களில் பாபிலோனியர் இன்னும் மும்மரமாக அவர்களைப் பயமுறுத்தினர்.

''சீயோன் தீட்டுப்படுவாள்''(11). இவ்வாக்கியத்தில் தீர்க்கன் முன்னறிவித்த இடுக்கண் சங். 74-இல் விவரித்திருக்கக் காணலாம். அதில் முக்கியமாக ''உமது நாமத்தின் வாசஸ்தலத்தைத் தரைமட்டாக்கித் தீட்டுப்படுத்தினார்கள்'' என்கிற வாசகத்தைக் கவனிக்க (சங். 74:7).

''அரிக்கட்டுகளைப்போல அவர்களைச் சேர்ப்பார்.... நீ எழுந்து போரடி'' (12, 13). தீர்க்கன் முதலாவது இஸ்ரவேலை அறுப்புக்காலத்தில் பத்திரமாய்ச் சேர்க்கப்பட்ட அரிக்கட்டுகளுக்கு ஒப்பிடுகிறார். அதற்கப்புறம் அவள் (இஸ்ரவேல்) போர்க்களத்தில் தானியம் போரடிப்பதுபோலத் தன் எதிரிகளை அழித்துப்போடத்தக்கதாக ஆண்டவர் அவளை ஆசீர்வதித்துப் பலப்படுத்துவதாகக் கூறுகிறார்.

''இஸ்ரவேலின் நியாயாதிபதியைக் கோலினால் கன்னத்திலே அடிப்பார்கள்'' (5:1). இவ்வாக்கியம் எபிரெய வேதத்தில் நான்காம் அதிகாரத்தின் கடைசி வசனமாகக் காணப்படுகிறது. இதன் பொருள் அவ்வதிகாரத்தின் பொருளேயாகும். அரசனுக்குக் கொடிய அவமானமும் அவதூறும் செய்வதாகக் கூறும் இவ்வசனம் சிதெக்கியா அரசனின் வாழ்க்கையில் நிறைவேறிற்று என்பதை 2 இரா. 25:6, 7 இல் காணலாம். இத்தகைய தீர்க்கதரிசன மொழிகளை வேதாகமத்தில் வாசித்தும் அவை நிறைவேறிய சரிதையை அறிந்தும் இருப்பவர்கள் எப்படித் திருமறையை நம்பாமலிருக்கக்கூடும்? கூடாதே!

5. மீட்பரின் வருகை-5:2-15.

''எப்பிராத்தாவிலுள்ள பெத்லெகேமே'' (2). எபிரெய பிரதிகளில் இவ்வசனம் 5-ஆம் அதிகாரத்தின்

முதலாம் வாக்கியமாகும். முந்திய வாக்கியத்தின்மூலம் (வச. 1 இல்) மீகா உண்டாகும் தண்டனையைத் திரும்பவும் கூறியபின் இவ்வசனத்தோடு ஆரம்பித்துக் கிறிஸ்து நாதரின் வருகை, அதனால் உண்டாகும் ஆசீர்வாதம், மகிமையாகியவற்றைத் திரும்பக் கூறுகிறார். பலஸ்தீனா நாட்டில் பெத்லெகேம் ஊர் யாக்கோபின் காலத்திலிருந்த மிகவும் பூர்வீக கிராமம் (ஆதி. 35:19). அவ்வூர் யூதேயா நாட்டிலும் எப்ரோனுக்குச் செல்லும் வழியிலும் எருசலேமுக்குத் தெற்கில் ஆறு மைல் தூரத்திலுமுள்ள ஒரு சிற்றூராயிருந்தது.

''இஸ்ரவேலில் ஆளுகை செய்யப்போகிறவர்........ உன்னிடத்திலிருந்து தோன்றுவார்; அவருடைய தோற்றம் அனாதிகாலமாகிய பூர்வத்திலுள்ளது'' (2). இவ்வார்த்தைகளில் இயேசு கிறிஸ்து நாதர் சம்பந்தமான மூன்று பொருள்கள் அடங்கியுள. அவையாவன :

1. அவர் பிறக்குமிடம் - பெத்லெகேம் ஊர் (மத். 2:5,6).

2. அவரது அரச பதவி.

3. அவர் நித்தியமான நிலை (அநாதிகாலமுதல் இருப்பவர்) என்பவைகளே.

இந்த நிகழ்ச்சிகள் சம்பவிப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னே மீகா தீர்க்கன் அவற்றை அதிசய வண்ணம் வெளிப்படுத்தியது அவர் தேவ ஆவியானவரின் ஏவுதலால் எழுதினார் என்பதற்குப் பலத்த அத்தாட்சியல்லோ?

''பிரசவிக்கிற நாள் மட்டும் அவர்களை ஒப்புக்கொடுப்பார்'' (3). இரட்சகர் பிறக்குமுன் இஸ்ரவேலர் சிறைப்பட்டுக் கொடிய வேதனைகளை அனுபவிப்பார்கள் என்பது இவ்வாக்கியத்தின் கருத்தாகும் (4:9,10).

''அவர் வந்து (நின்றுகொண்டு ப. தி.).... மேய்ப்பார்'' (4). அதாவது நல்ல மேய்ப்பனானவர் வந்து தமது மந்தையை மேய்ப்பார். இந்த வாக்கியத்தில் பயன்பட்டிருக்கும் ''நின்றுகொண்டு'', ''பலத்தோடும்'' ''மகத்துவத்தோடும்'' என்னும் பதங்களைக் கவனிக்க. இவை மேசியாவின் அரச பதவிக்குரிய சர்வ அதிகாரத்தையும் ஆட்சி தலைமையுரிமையையும் வலியுறுத்துகின்றன. மேசியா தமது மந்தையை மேய்ப்பதாகக் கூறியது அவரது அன்பார்ந்த பராமரிப்பைக் குறிக்கும் (சங். 78:70-72).

''பூமியின் கடையாந்தர மட்டும் அவருடைய மேன்மை விளங்கும்''(4). இது கிறிஸ்துநாதர் இரண்டாம் முறை இவ்வுலகிற்கு வந்து பூமியெங்கும் ஆட்சிபுரிவதைக் குறிப்பிடுகிறது.

இவ்வாக்கியத்தை 2:12,13 ஒடு ஒத்திட்டுப் பார்க்க. இதன் முக்கியமான பொருள் யாதெனில், மேசியா வந்து, பாவத்தின் பயனாக எழும்பிய மதில்களை இடித்துத் திறப்பாக்கித் தமது மந்தையின் ஆடுகளுக்கு இரட்சணிய விடுதலையுண்டாக்குவார் என்பதேயாம்.

''மதிலில் திறப்பு உண்டாக்குகிறவர்'' (2:13). யாரெனில், இவர் மேசியாவே என யூதர் யாவரும் ஒப்புக்கொள்வர். ஆம், ஆண்டவர் அவர்களைச் சிறையிருப்புத் தேசத்தினின்று விடுவித்து அவர்கள் சுய நாட்டிற்குத் திருப்பிக்கொண்டு போய்ச் சேர்த்தது உண்மையே, எனினும், , கிறிஸ்துநாதர் திரும்ப வருங்காலத்திலேயே இந்தத் தீர்க்கதரிசன மொழி பூர்த்தியாக நிறைவேறும். அப்பொழுது யூதர் ஆண்டவரைத் தங்கள் அரசராகவும் மேய்ப்பனாகவும் ஏற்றுக்கொள்வர்.

''இவரே சமாதான காரணர்'' (5). சங். 72:7; ஏசாயா 9:6,7; எபே. 2:14ஐக் காண்க. இவ்வாக்கியத்தில் பயன்பட்டிருக்கும் ''ஏழு மேய்ப்பரையும் அதிபதிகளான

எட்டுப் பேரையும்'' என்கிற சொல் நாட்டைத் தாக்குகிற எதிரிகளின் கைக்கு மக்களைத் தப்புவிக்கும்படி எழும்பும் அரசியல் தலைவர்களைக் குறிக்கும். இந்த இரு எண் களின் கருத்து (''ஏழு,'' ''எட்டு'') என்னவெனில், தீர்க்கன் அந்தத் தலைவர்கள் இத்தனை பேர் எனத் திட்டமாய்க் குறிப்பிடாமல் பொதுவாக அவர்களைக் குறித்து எழுதினார் என்பதே.

''யாக்கோபிலே மீதியானவர்கள்''....பனியைப்போல வும்....மழையைப்போலவும்....சிங்கம்....பால சிங்கம்....போல வும் ஜாதிகளுக்குள்ளே....இருப்பார்கள்'' (7,8). இவ்விடத் தில் மீகா, சிறையிருப்புக் காலத்திற்குப்பின் இஸ்ரவேலரின் நிலைமை இன்னின்ன வகையாக இருக்குமென்பதாகச் சில ஒப்பனைகளைக்கொண்டு வர்ணிக்கிறார். எவ்வாறெனில், ஒரு பக்கம் அம்மக்களின் வாழ்க்கையானது சுவாதீனமும், அலங்காரமும், கிளர்ச்சியுமாக இலங்கும் (சங். 72:6). இதை பனி, மழையாகிய உவமானப் பொருள்களைக் கொண்டு முன்னறிவித்துள்ளார். யூதர் உலகமெங்கு முள்ள சகல தேசத்தார் மத்தியிலும் வாழ்ந்து கடவுளின் சத்தியத்தை அந்தந்தத் தேசத்தாருக்குத் தெரிவித்து உயிர்மீட்சிக்கினமாகப் பயன்பட்டதன்மூலம் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறியுள்ளது (யோவான் 4:22). மறுபக்கம், இஸ்ரவேலரின் பேரரசனாகிய மேசியாவின் வல்லமை சிங்கத்தின் பலத்தைப் போன்றது. அவ்வல்ல மையை அவர் அவர்களுக்கு அரணாவதாகச் சிங்கம், பாலசிங்கம், என்கிற உவமானங்களைக்கொண்டு சாதித் துள்ளார். இந்த மொழி எதிர்காலத்தில் பூரணமாக நிறைவேறும் என்பது உறுதியாகும். எனினும், ஆவிக் குரிய இஸ்ரவேலாகிய திருச்சபையின்மூலம் இது ஆன்மப் பாங்காகவும் பிற வழியிலும் நிறைவேறியாயிற்று அல்லோ?

''சங்கரிப்பேன்''.... ''அழித்துவிடுவேன்''....''நிர்மூல மாக்குவேன்''....''அகற்றுவேன்'' (10-13). ''பிடுங்கி''

....''அழித்துவிடுவேன்'' (14). இப்பதங்கள் இந்தப் பாகத்தில் திரும்ப திரும்பப் பயன்பட்டிருப்பதைக் கவனிக்க. ஆண்டவர் இதற்கு முந்திய பாகத்தின்மூலம் தமது மக்களை அவர்களின் வெளியரங்கமான எதிரிகளுக்குத் தப்புவிப்பதாக வாக்கு அளித்து, இப்பொழுது அவர்களின் உள்ளான (ஆவிக்குரிய) பகைஞர் கைக்கு விடுவிப்பதாக விளம்புகிறார். அவர்களைச் சுத்திகரித்துச் சீர்திருத்துவேன் என்பதாக வாக்குப்பண்ணுகிறார். இத்தகைய தேசீய சீர்திருத்தம் எசேக்கியா, யோசியா அரசர்களின் காலங்களில் நிகழ்ந்தது. (2 இரா. 18:3-5; 23:3-25). அதற்கப்பால் பாபிலோன் சிறையிருப்பின் பயனாக இஸ்ரவேலர் விக்கிரக வணக்கத்தை வெறுக்கவும் அதை விட்டோயவும் இன்னும் நன்றாய்க் கற்க நேரிட்டதல்லோ?

''குதிரைகளை''....''இரதங்களை''(10). இஸ்ரவேலர் மிகுதியான குதிரைகளைச் சேர்த்துக்கொள்ளக் கூடாதெனக் கடவுள் உபா. 17:16இன்மூலம் எச்சரித்துள்ளார். இந்த விளக்கவுரையின் காரணம் இன்னதென்பது சங். 20:7 இனால் தெளிவாகிறது.

''உன் சொரூபங்களையும் உன் சிலைகளையும் சங்கரிப்பேன்''....''உன் ஸ்தம்பங்களை....பிடுங்கி'' (13:14). இந்த முன்னறிவிப்பான மொழியை யோசியா அரசர் நிறைவேற்றினார், (2 இரா. 23:5,6). அதுபோன்று தற்கால கிறிஸ்தவர்கள் விக்கிரக வணக்கம், மூட நம்பிக்கை முதலிய பொய்ச் சுவாமி தொழுகை சம்பந்தமான சகல சடங்குகளையும் ஒழித்துவிட மிகக் கவனமாய் இருத்தல்வேண்டும். அதுமட்டுமன்று, நாம் சொத்து, கல்வி, செல்வாக்கு ஆகியவற்றை நம்பிச் சாராமல் ஆண்டவரையே நம்பி நமது தினசரி வாழ்க்கையில் அவரைக் கண்ணியப்படுத்தக் கடவோம்.

6. ஆண்டவருக்கும் இஸ்ரவேலருக்குமுள்ள வழக்கு-6:1-7:20.

அ. ஆண்டவர் மக்களை வருந்தியழைத்தல்-*6:1-8*.

''கர்த்தர் சொல்லுகிறதைக் கேளுங்கள்'' *(1)*. மற்றைய திர்க்கர்கள் செய்ததுபோல மீகாவும் தாம் கூறியவை மெய்க் கடவுளின் வார்த்தைகள் எனச் சாதித்தார் (ஓசியா *4:1*).

''கர்த்தருடைய வழக்கைக் கேளுங்கள்....அவர் ஜனத்தோடே வழக்குண்டு....என் ஜனமே....என் ஜனமே'' *(2, 3, 5)*. உண்மையான தேவபக்தி சம்பந்தமாகப் பழைய ஏற்பாட்டாகமத்தில் காணப்படும் வாசகங்களில் 8-ஆம் வசனம் வரைக்குமுள்ள இந்தப் பாகம் சிறந்ததேயாம். இவ்வாக்கியங்கள் எந்த மனிதனின் உள்ளத்தையும் ஏவியெழுப்பக் கூடியவை.

''எனக்கு உத்தரவு சொல். நான் உன்னை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணி....என் ஜனமே....நினைத்துக் கொண்டு கர்த்தருடைய நீதிச் செயல்களை அறிந்து கொள்வாய்'' *(3-5)*. மக்களின் அநீதத்திற்கும் மெய்க் கடவுளின் நீதிக்கும் எவ்வளவோ வேற்றுமையுண்டு! இங்கு ஆண்டவர், தமது மக்கள் தமக்கு விரோதமாய்ச் சாட்சி சொல்லக் கூடுமானால் சொல்ல வேண்டுமாய் அவர்களைப் பார்த்து அறைகூவுகிறார். இஸ்ரவேலர் அவருக்குச் செய்த துரோகத்திற்குக் காரணமாக (அல்லது சாக்குப் போக்காக) கடவுள் அவர்களுக்குத் தீமை ஏதாவது செய்ததுண்டானால் அவர்கள் அதை எடுத்துக் காட்டட்டும் என்பதாக இவ்வசனங்களின்மூலம் அழைக்கிறார். இந்த அறைகூவலை வலியுறுத்தும் பொருட்டுத் தீர்க்கன் முற்காலங்களில் ஆண்டவர் இஸ்ரவேலுக்குச் செய்த அரிய பெரிய நன்மைகளில் சிலவற்றை விவரித்துள்ளார். இதை வாசிக்கும் நாமும் கடவுள் முந்திய நாள்களில் நமக்கு ஆற்றிய நன்மைகளை அடிக்கடி

நினைத்துக்கொள்வது நலமாகும். அது மட்டுமன்று, அவர் தற்காலத்தில் நமக்குப் பாராட்டி வருகிற அருளையும் நினைத்து கொண்டேயிருப்போமாக.

''எதைகொண்டு நான் கர்த்தருடைய சந்நிதியில் வந்து....'' (6, 7). ஆண்டவரின் மேற்கூறிய அறைகூவலுக்கிணங்கி இஸ்ரவேலர் மக்கள் யாவரும் அவனவன் தன் தன்னிடம் கேட்கவேண்டிய சில மகா முக்கியமான கேள்விகளைக் கேட்கிற பாவனையாக மீகா இங்கு எழுதியுள்ளார். இந்தக் கேள்விகளாவன:

1. கடவுள் நம்மையும் நமது தொழுகையையும் ஏற்றுக்கொள்ளும் பொருட்டு நாம் எதை பலி செலுத்த வேண்டும்?

2. மெய்க் கடவுளுக்கென மிருக ஜீவன்களைப் படைப்பது அவசியமா?

3. நாம் கடவுளுக்கென்று எத்தனை மிருக ஜீவன்களைப் பலியிட்டாலும் அவர் அவைகளில் பிரியப்படுவாரா? ஒருவன் அவருக்கென எவ்வளவு பொருள் கொடுத்தாலும் அவருக்குப் பிரியமாய் இருக்குமா?

4. மெய்க்கடவுளுக்கு நரபலிகளைச் செலுத்தலாமா? அத்தகைய பலிகளை விரும்புவாரா? ஒருவன் தன் ஆத்துமப் பாவத்தின் பழியைப் போக்கத் தன் சரீரத்தின் கனியாகிய தன் பிள்ளையைப் பலிசெலுத்துவது நியாயமாகுமா?

அந்நாள்களில் அரசாண்ட ஆகாஸ் அரசனும் பொது மக்களில் பலரும் நரபலிகளைச் செலுத்தினார்கள் (2 இரா. 16:23; 17:17). எனவே, மேற்கூறிய 4-ஆம் கேள்வி அந்தக் காலத்தில் மிகவும் முக்கியமானது அன்றோ? அத்தகைய பலிகளோ ஆண்டவரின் பார்வையில் மகா கொடிய பாவமாகவும் அருவருப்பாகவும் காணப்படும் (லேவி. 18:21 ப.தி.; சங். 106:37; எரே. 7:31).

''நியாயஞ் செய்து மனதார இரக்கத்தைப் பாராட்டி உன் கடவுளுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதையே அல்லாமல் வேறே எதை கர்த்தர் உன்னிடம் கேட்கிறார்?'' (8). மீகாவின் ஆகமத்தில் இது ஒரு மகா சிறந்த வசனமாகும். ஏனெனில், அக்கிரமம், அநீதி, கொடுமை, பெருமையாகியவை நாடெங்கும் மேலிட்டுக் கொண்ட அக்காலத்தில் ஆண்டவர் தீமைக்குப் பதிலாக நன்மையையும் அநீதிக்குப் பதிலாக நீதியையும் கொடுமைக்குப் பதிலாக இரக்கத்தையும் பெருமைக்குப் பதிலாக மனத்தாழ்மையையும் விரும்பினார் (உபா. 10:12; ஓசியா 6:6; மத். 9:13 இதோடு ஒத்திட்டுப் பார்க்க). இவ்வாக்கியம் மேற்கூறிய அறைகூவலுக்குத் தகுந்த தொடர்பாகும். எவ்வாறெனில், இவ்வசனத்தில் அடங்கிய மூன்று விதிகள் உத்தம சன்மார்க்கத்தின் சாராம்சம் என்கலாம்.

ஆ. நகரத்தாரின் பாவத்தைக் கண்டித்தல்-6:9-16.

கடவுள் நியாயத்தையே விரும்புகிறார் எனத் தீர்க்கன் முந்திய (8-ஆம்) வசனத்தில் கூறியதும் அதற்குத் தொடர்ச்சியாக 9-ஆம் வசனமுதற்கொண்டு இஸ்ரவேல் நாட்டாரும் யூதேயா நாட்டினரும் செய்த அநியாயத்தினிமித்தம் அவர்களைக் கண்டனம் பண்ணியுள்ளார்.

''கர்த்தர் நகரத்தைக் நோக்கிக் கூப்பிடுகிறார்'' (9). இங்கு குறிப்பிட்டுள்ள நகரம் எருசலேமானாலுஞ்சரி சமாரியாவானாலுஞ்சரி கருத்து ஒன்றே. பொதுவாக நாட்டின் தலைநகரை மீகா சுட்டிக்காட்டுகிறார் என்பது பொருள். இரு தலைநகரங்களில் வணிகர் இலஞ்சம் வாங்குவதிலும் வேறு பல சீர்கெட்ட பழக்கவழக்கங்களை நடப்பிப்பலும் பெயர் போனவர்களாவர். உதா.: கள்ள மரக்கால் (வச. 10). கள்ளத் தராசு, கள்ளப் படிக்கற்கள்

(வச. 11) ஏகமாய்க் கையாடப்பட்டன. தற்காலம் நமது தேசத்திலும் இவை அதிகமாகப் பயன்பட்டுவருகிற தல்லோ? எனினும், வாணிகத்திலும் வியாபாரத்திலும் இத்தகைய அக்கிரமங்களைச் செய்பவர்களைக் கடவுள் ஆசீர்வதிக்க மாட்டார் என்பது உறுதியாகும் (உபா. 25:13 14; லேவி. 19:35, 36; ஓசியா 12:7; ஆமோஸ் 8:5).

''ஐசுவரியமுள்ளவர்கள் கொடுமை நிறைந்தவர்கள் பொய் பேசுகிறவர்கள்'' (12). ஓசியாவும் ஆமோஸும் தங்கள் காலத்தில் வாழ்ந்த செல்வந்தரை அவர்களின் பாவங்களினிமித்தம் கண்டனம்பண்ணினர் (ஓசியா7:13; ஆமோஸ் 3:10 ஆப. 1:2, 3).

''உன்னை அடித்துப் பாழாக்குகிறதினால் உன்னைப் பலட்சயமாக்குவேன்'' (13 ப. தி.) பயங்கரமான தண்டனையைக் கூறும் இவ்வசனமும் அடுத்த மூன்று வாக்கியங்களும் முதலாவது ஆசீரியர், பின்னால் நேபுகாத்நேச்சார் பலஸ்தீனா நாட்டைத் தாக்கினதின்மூலம் நிறைவேறின.

''உம்ரியின் நியமங்களை'' (16). இவ்வரசனின் வீட்டார் அரசாண்ட காலத்தில் ஏழைகளை ஒடுக்குதல், அநியாயம், கொடுமையாகிய இவை இஸ்ரவேல் நாட்டில் மிகவும் அதிகமாக மேலிட்டுக்கொண்டதினால் இத்தகைய அக்கிரமங்களே அந்நாட்டு அரசியலின் நியமங்களாகக் காணப்பட்டன! முக்கியமாக, ஆகாப் அரசன் இவையாவிலும் பொதுமக்களுக்குப் பொல்லாத முன்மாதிரி காட்டினார் (1 இரா 21).

இ தீர்க்கன் நாட்டில் மேலிட்டுவந்த அக்கிரமத்தினிமித்தம் புலம்பியது-7:1-6.

''ஐயையோ'' (1). 2:4; ஆமோஸ் 5:1இல் கூறியுள்ள பிரலாப வார்த்தைகள் இதற்கு ஒத்திருக்கின்றன.

பாவத்தின் பயனாக அழிந்துபோகிற மக்களினிமித்தம் தேவதாசர்கள் துக்கியாமல் இருக்கக்கூடுமோ?

இதைபோன்று இயேசுநாதரும் பாவிகளுக்காகக் கண்ணீர் விட்டார் (லூக்கா 10:41-44).

''பக்தியுள்ளவன் அற்றுப்போனான்,....நேர்மையானவனில்லை'' (2). வச. 2-6இல் எத்தனை பயங்கரமான காட்சி அடங்கியிருக்கிறது!

''அதிபதி கொடு என்கிறான், நியாயாதிபதி கைக்கூலி கேட்கிறான்'' (3). அரசுயல் அதிகாரிகளும் மார்க்கத் தலைவர்களும் பரிதானம் வாங்குங்கால் அரசாங்கம் அழிவிற்குக் கிட்டும் (3:11ஐக் காண்க). ஆகவே, இஸ்ரவேல் அரசு தண்டனை அனுபவிக்கக் கிட்டிற்று (4).

''அயலானை நம்பவேண்டாம்'' (5,6). இவ்வாக்கியங்களில் சந்தேகம் (ஐயப்பாடு), நம்பிக்கையின்மை பகை என்னும் பொருள்கள் அடங்கியுள. எவ்வாறெனில், கணவன் மனைவி, சகோதரன், சகோதரி பெற்றோர் பிள்ளைகளாகியவர்களுங்கூட ஒருவரையொருவர் நம்பக்கூடிய நிலையில்லாமலிருந்தது இஸ்ரவேல் நாட்டில்.

''ஒருவனுடைய சத்துருக்கள் அவன் வீட்டாரே'' (6). கிறிஸ்துநாதரும் இவ்வார்த்தைகளை மொழிந்தார் (மத். 10:35, 36). என்றாலும், மீகாவின் கருத்துக்கும் ஆண்டவரின் பொருளுக்கும் முக்கியமான வேற்றுமையுண்டு. அது யாதெனில், அக்கிரம மிகுதியினால் நெருங்கிய இனத்தார் முதலாய் ஒருவரையொருவர் நேசிக்காமல் பகைப்பார்கள் என்பது மீகாவின் கருத்தாகும். ஆண்டவர் இச்சொல்லைக் கூறியதின் பொருளோவெனில், ஒரு குடும்பத்தில் ஒருவன் தம்மை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் அவனது உடன் குடும்பத்தார் அதை முன்னிட்டு அவனைப் பகைப்பார்கள் என்பதேயாம். தற்காலம் நமதுநாட்டிலும் அவ்வாறே சம்பவிக்கிறதுண்டு.

ஈ. பாவ அறிக்கையும் கடவுள் வாழ்த்தும்-*7:7-20*.

i. **திடநம்பிக்கை-*7-13*.**

''நானோ கர்த்தரை நோக்கிய வண்ணமாய்....காத் திருப்பேன்'' (7). மீகா தீர்க்கன் மக்களின் சீர்கேட்டை விட்டு விட்டுத்தமது கண்களை ஆண்டவரிடம் ஏறெடுத்து, அவர் பிந்திய நாள்களிலாவது தமது மக்களை ஆசீர்வதிப் பார் என்கிற நம்பிக்கை கொள்ளுகிறார்.

''என் சத்துருவே, எனக்கு விரோதமாய்ச் சந்தோ ஷப்படாதே'' (8) எத்தனையோ பக்தர்கள் பிசாசின் கொடிய சோதனைகளினால் கடும்பாடு அனுபவிக்கையில், தாங்கள் கடைசியில் வெற்றி பெறுவதாகத் திடநம்பிக்கை கொண்டதற்கு அடையாளமாக இவ்வார்த்தைகளைக் கூறியிருக்கின்றனர்! உதாரணமாக மோட்சப் பிரயாணம் என்கிற நூலில் கிறிஸ்தியான் என்பவர் அப்பொல்லி யோன் என்னும் பேயோடு போர்புரிந்த வேளையில் இச் சொல்லைச் சத்தமிட்டுக் கூறினார்.

''உன் கடவுளாகிய கர்த்தர் எங்கே? (10). அசீரிய நாட்டு அரசனாகிய சனகரிப் இதே வார்த்தைகளைக் கொண்டு மெய்க் கடவுளையும் அவர் மக்களையும் ஏளனம் பண்ணினார். எனினும், அவர் இந்த வாக்கியத்தில் கூறியுள்ள முன்னறிவிப்பின்படியே இழிவான முடிவடைந் தார். எவ்வாறெனில், அவரது சொந்தக் குமாரர் அவரைக் கொன்றார்கள். 2 இரா. 18:19-22; 19:36, 37ஐ நன்கு கவனிக்க.

''அந்நாளிலே பிரமாணம் வெகு தூரம் பரவிப்போம்'' (11 ப. தி.). இவ்வாக்கியத்தின் பொருள் இன்னதெனத் திட்டமாய்க் கூறுவது அரிது. பு. திலில் ''பிரமாணம்'' என்கிற பதத்திற்குப் பதிலாக ''எல்லை'' என மொழி பெயர்த்திருக்கக் காணலாம். ஒருவேளை, எருசலேம் மகா நகர் திரும்பவும் எடுப்பிக்கப்படும் காலத்தில் அந் நகரின் வாசிகளின்மூலம் திவ்விய பிரமாணம் உலகமெங்கு

முள்ள மக்களுக்கு எட்டும் என்று பொருள்படும். அல்லது, மேற்கூறிய நோக்கத்திற்கு இசைவாக எருசலேமின் எல்லை மிகவும் விஸ்தீரணமாக இருப்பது அவசியம் என்று அர்த்தமாகும். இவ்விரண்டு பொருள்களும் ஒன்றிற்கொன்று ஒத்திருக்கின்றன. எப்படியெனில், எருசலேமின் வாசிகள் பூமியெங்குமுள்ள மக்களுக்கு மெய்க் கடவுளுக்கெனச் சாட்சி கூறவேண்டியிருப்பதால் அந்நகரத்துச் (செல்வாக்கின்) ''எல்லை'' மிகவும் விஸ்தீரணமாயிருக்கும் என்பதே.

''அந்நாளிலே....உன்னிடத்திற்கு வருவார்கள்'' (12). மக்கள் சகல நாடுகளிலுமிருந்து எருசலேமுக்குச் செல்லும் காட்சியைத் தீர்க்கதரிசனமாய்க் காண்கிறார் மீகா. ஏசாயாவும் இதைபோன்ற காட்சியைக் கண்டார் (ஏசாயா 19:23-24).

''பூமியும் அதன் குடிகளும் பாழாகும்'' (13) முந்திய வசனங்களில் கூறியபடி எருசலேம் தன் முந்திய மேன்மையைத் திரும்ப அடையுமுன்னர் எதிரிகள் வந்து நாட்டையும் நகரையும் தாக்கி அழிக்க நேரிடும் என்பது இதன் கருத்தாகும்.

ii. மன்றாட்டும் திடநம்பிக்கையும் - 14-20.

''உமது சுதந்தரமான மந்தையாகிய உமது ஜனத்தை மேய்த்தருளும்'' (14). 2:12, 13, 5:4ஐ நன்கு கவனிக்க. ஆண்டவரின் மக்கள் பாவம் நிறைந்தவர்களாயினும், அவர் அவர்களை ஒரு மேய்ப்பன் தன் ஆடுகளை மேய்ப்பதுபோன்று மேய்த்துக்காக்க வேண்டுமாய் மீகா அவரை நோக்கி மன்றாடுகிறார். இதோடு சங். 23:4; எரே. 50:19ஐ ஒத்திட்டுப் பார்க்க.

''எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாளிற்போலவே'' (15). ஆண்டவர் பூர்வ காலத்தில் தமது மக்களை எகிப்து தேச அடிமைத்தனத்தினின்று விடு

வித்ததுபோலவே அவர்களைத் திரும்பவும் அரும்பெரும் செயல்களைக் கொண்டு ஆசீர்வதிப்பதாக வாக்களிக்கிறார் (ப. தி. யையும் காண்க). பு. தி. யின் பிரகாரம் ஆண்டவர் அவ்வாறு செய்தருளத் தீர்க்கன் மன்றாடுகிறார்.

''பாம்பைப்போல மண்ணை நக்குவார்கள்'' (17). அதாவது, இஸ்ரவேலரின் எதிரிகளைக் கர்த்தர் தரைமட்டாகத் தாழ்த்துவதாக வாக்களிக்கிறார். அந்த எதிரிகள் தங்கள் முதலாளியாகிய பிசாசைப்போலவே இழிவான நிலையை அடைவார்கள் என்பது உறுதியாகும் (ஆதி. 3:14).

''தேவரீருக்கு ஒப்பான தெய்வம் யார்?'' (18-20). கடவுளின் நிகரற்ற கருணையை இந்த மாட்சிமையான பாடலைக் கொண்டு பாராட்டித் தமது ஆகமத்தை மீகா முடிவுக்குக் கொண்டு வந்தார். சில நூற்றாண்டுகள் சென்றபின் யோவான் ஸ்நானனின் தகப்பனாகிய சகரியா என்பவர் இந்தத் தீர்க்கதரிசன மொழியை நினைத்துக் கொண்டு கர்த்தரைத் துதித்தார் (லூக்கா 1:72-75). இந்த அழகான வார்த்தைகள் புதிய ஏற்பாட்டு வாக்கியங்களைப் போன்றவைகளே. சகல காலத்திலும் சர்வ தேசங்களிலுமுள்ள விசுவாசிகள் ஆண்டவர் பேரிலுள்ள தங்கள் நம்பிக்கையைச் சாதிப்பதற்குத் தகுந்த வார்த்தைகள் இவைகளே. நாமும் மீகாவோடுகூட, ''என்றென்றுமாகக் கோபங்கொண்டிரார்; கிருபை செய்வதே அவருக்குப் பிரியம்'' என்று கூறி அருள்நாதரைத் துதிப்போமாக.

கால வரிசை முறை

நாட்டுப் படங்கள்

பொருள் அட்டவணை

திருமறை குறிப்புகள்

சிறிய தீர்க்கதரிசிகளின்
கால வரிசை முறை




சிறிய தீர்க்கதரிசன ஆகமங்களில்
குறிப்பிட்டுள்ள நாடுகள்
கிரேக்க நாடு
சினன ஆசியா
அசீரியா
நினிவே
மததியதரைக் கடல்
சீரியா
தமஸ்கு
தீரு
எருசலேம்
பலஸ்தீனா
நோ
எகிப்து
பாபிலோனிய நாடு (கல்தேயா)
சூசான்
பாபிலோன்
தூமா
பெர்சியா
அரபியா
சிவந்த சமுத்திரம்

யூதேயாவின் அண்டை நாடுகள்



பொருள் அட்டவணை

அக்சீப்	*127, 128*
அசாவேல்	*64*
அசீரியர்	*7, 29, 65, 71, 73, 77, 116, 123, 126, 139, 146*
அசீரியா	*26, 32, 33, 39, 51, 70, 81, 83, 106, 107, 116, 139, 150*
அடுப்பு	*29*
அத்திமரம்	*33, 135*
அதுல்லாம்	*127, 128*
அப்சலோம்	*113*
அப்பம்	*29*
அப்பொல்லியோன்	*150*
அம்மோன்	*61, 66, 69*
அமத்சியா	*86, 87*
அமித்தாய்	*103*
அரபா	*83*
அலெக்சாந்தர்	*65*
அஸ்கலோன்	*65*
அஸ்தரோத்	*14*
அஸ்தோத்	*65*
ஆகாப்	*18, 146*
ஆகாய்	*2, 4, 11*
ஆகாஸ்	*122, 146*
ஆகோர்	*20*
ஆசாரியர்	*14, 23, 25, 28, 41, 44, 45, 46, 47, 86, 99, 124, 132, 134*
ஆபிரகாம்	*95*
ஆமணக்குச் செடி	*118, 120, 121*
ஆமாத்	*82, 83*
ஆமோஸ்	*13, 15, 37, 57—93, 104, 146*
இயேசு கிறிஸ்து	*27, 39, 49, 100, 105, 110, 129, 136, 139, 140, 141, 147, 149*

இரட்சகர் 44, 139
இரத்தம் 23
இஸ்ரவேல் 1, 4, 7, 17, 21, 25, 27, 29, 30, 35, 36, 37, 39, 56, 65, 67, 68, 70, 71, 74, 75, 76, 77, 78, 85, 87, 91, 92, 93, 100, 103, 107, 123, 126, 127, 131, 136, 137, 138, 139, 144, 145, 146, 147
இஸ்ரவேல் இராஜ்யம் 5, 28, 30, 32, 35, 56, 58, 59, 61, 63, 67, 70, 71, 89, 92, 93, 131, 136, 147
இஸ்ரவேலர் 7, 12, 13, 14, 17, 19, 20, 22, 24, 25, 28, 31, 32, 33, 34, 35, 36, 38, 59, 62, 65, 66, 67, 72, 74, 75, 76, 77, 79, 80, 81, 82, 83, 84, 87, 88, 89, 91, 92, 93, 99, 116, 124, 132, 136, 141, 142, 143, 144, 145, 147, 150
இஸ்லாம் மதம் 90
ஈக்ஷி 20
உசியா 12, 58, 62
உடன்படிக்கை 6, 9, 37
உபவாசம் 47, 50, 115
உம்ரி 146
உவமானம் 141
ஊடு நரை 29
ஊர்வாசல் 78
எக்காளம் 30, 71
எக்ரோன் 65
எகிப்தியர் 9, 29, 30, 71, 89, 92, 127
எகிப்து 16, 31, 32, 38, 39, 54, 55, 69, 75, 143, 149

எசேக்கியா 12, 122, 142
எசேக்கியேல் 1, 5, 9,
எத்தியோப்பியர் (யா) 54, 92
எப்பிராத்தா 138
எப்பிராயீம் 24, 27
எப்ரோன் 139
எபிரெய (மொழி, வேதம்) 4, 138
எமோரியன் 69
எருசலேம் 2, 5, 8, 9, 10, 11, 42, 54, 56, 57, 60, 76, 94, 98, 99, 123, 125, 126, 129, 134, 136, 137, 145, 148, 149
எரேமியா 1, 8, 9, 33, 78, 126, 133
எலிசா 103
எலியா 103
எஸ்றா 4, 11
ஏசா 65, 95, 97
ஏசாயா 1, 13, 76, 78, 122, 125, 127, 136, 149
ஏசாவின் மலை-வீடு 101
ஏதோம் (மியர்) 8, 56, 61, 64, 65, 66, 95, 96, 97, 98, 99, 100, 101, 102
ஒபதியா 8, 94—102
ஓசியா, யோசியா (தீர்க்கன்) 8, 12—40, 59, 60, 104, 126, 145
ஓசியா (அரசன்) 35, 142,
ஓசெயா 126
ஓய்வு நாள் 2
கசாவேல் 64
கப்தோர் 92
கர்த்தருடைய நாள் 43, 48, 55
கர்மேல் (மலை) 63, 64

கல்னே 82
கலிலேயா 25, 105
கள்ளத் தராசு 37, 88, 145
கள்ளத் தீர்க்கரிசி 130,
கள்ள மரக்கால்- மரக்கால் காண்க
கன்றுக்குட்டி 13, 32, 35, 83, 90 91
காசா 61
காணிக்கை 47, 81
காத் 82, 123
காத்கேபர் 103
காத்சா 64, 65
கார்த்திகை 78
கானானியர் 13
கிபியா 25, 33
கிரேக்கர் 54
கிரேத்தா 92
கில்கால் 73, 77
கிலியாத், கிலெயாத் 28, 63, 64
கியூன் 81
கிறிஸ்து-இயேசு கிறிஸ்து காண்க
கிறிஸ்துவின் முதலாம் வருகை 3, 124
கிறிஸ்துவின் இரண்டாம் வருகை 3, 44, 124, 138, 140
கீர் 92
கீலேயாத் 25
கெரியோத் 66
கொமோரா 75
கோமேர் 7, 17, 18, 19, 21, 22
கோரேஸ் 9, 10, 137
கோவில் 32
சகரியா 2, 4, 7, 11, 14, 152
சங்கீத ஆகமம் 110, 111
சந்திரன் 49, 53, 55

சப்பாத்தி 30
சமாரியர்(யா) 8, 71, 73, 90, 123, 125, 126, 145
சர்கோன் 7
சரித்திரக்காரன் 4
சவக்கடல் 96
சனகரிப் 7, 148
சாமுவேல் 2
சாலொமோன் 135
சானான் 128
சிக்கூத் 81
சிங்கம் 15, 36, 38, 71, 80, 141, 8, 138
சிதேக்கியா 8, 138
சிறைவாசம்—பாபிலோன் சிறைவாசம் காண்க
சீதனம் 129
சீகோன்(னியர்) 54, 98
சீயோன்(மலை) 42, 81 101, 133, 134, 136, 138, 139
சீர்கேடு 3, 147, 149
சீர்திருத்தம் 3, 5, 143
சீரியர் 58, 63, 64, 65, 92, 139
சுருள் (திருமறை) 4
சுவாமி 32, 38, 90
சூரியக்கிரணம் 89
சூரியன் 50, 53, 55
சூறாவளி, சூறைக்காற்று 30, 31
செப்பனியா 2
செபுலோன் 103
செருபாபேல் 11
சேபா 54
சேர்க்கல் 88
சோதோம் 75

தாஸ்கு 61, 63, 64, 68, 81, 92
தமிழகம் 53
தர்ஷீஸ் 107, 118
தராசு—கள்ளத் தராசு காண்க
தாபோர் 25
தாவீது 22, 57, 76, 93, 113
தானியம் 33, 51
தானியேல் 1, 5, 8, 9, 10
திக்ரீஸ் (நதி) 118
திகிலாத் பிலேசர் 7
தியதோரு 106
திராட்சக் குலை 33
திராட்சச் செடி 33, 46, 135
திராட்சத் தொட்டி 33, 69
திராட்ச ரசம் 51, 169
திருச்சபை 143
தீரு 54, 61, 65, 98
தூக்கு நூல் 85, 86
தெக்கோவா 57, 62
தேமான் 65
தேவர் 39, 137
தேவாலயம் (எருசலேம்) 2, 5, 6, 9, 11, 33, 41, 112, 135
நசீரர் 69
நரபலி 144
நரைமயிர் 29
நல்ல சமாரியன் 100
நாசரேத்து 103
நாத்தான் 2
நாபோத் 130
நியாயத் தீர்ப்பு 49, 71
நினிவே 104, 105, 106, 108, 112, 113—118, 121, 139, 146

நீதி(செயல்) 3, 145
நீதிபதி 65, 132, 148
நீர் நுரை, நீர் குமிழி 35
நீலநதி 89
நெகேமியா 4, 11
நேபுகாத்நேச்சார் 7, 65, 94, 146
பக்தி 27, 28, 31, 37, 144
பச்சைக் கிளி 46
பச்சைப் புழு 46, 75
பட்சி 36
பஞ்சம் 23, 33, 75
பண்டிகை 80
பரிசுத்தர் 36
பரிசுத்தக்காவி (யானவர்) 44, 52, 133, 141
பலஸ்தீனா 1, 4, 6, 7, 9, 63, 93, 94, 108, 129, 135, 137, 138, 139, 148
பலி, பலிபீடம் 16, 32, 33, 35, 36, 47, 80, 81, 90, 110, 146, 19, 39, 44
பவுல் 19, 39, 44
பனி 40
பாகால் (வி) 13, 14, 20, 25, 26, 30, 32, 36, 37, 59, 90,
பாசான் 72, 73
பாதாளம் 39
பாபிலோன் (னியர்) 5, 7, 8, 9, 10, 89, 91, 93, 94, 99, 107, 138
பாபிலோன் சிறைவாசம் 2, 3-8, 42, 137, 142, 143
பாரமபரியம் 4
புதையல் 35
புலம்பல் 90, 148
புறா 29,
பெத்துவேழ் 45
பெத்தேல் 57, 72, 73, 77, 86, 91

பெத்லெகேம்	138, 139
பெந்தெகொஸ்தே	52
பெயேர்செபா, பேயர்ஷெபா	77, 90
பெயேரி	12
பெர்சிய (யா)	10
பெவிஸ்கியர் (யா)	54, 64, 65, 71, 82, 92
பென்யமீன்	25
பெனிக்கேயர்	55, 65
பேத் அப்ரா	127
பேத் எசேல்	127
பேதாவேன்	25
பேதுரு	52, 108, 119
பேதேதேன்	64
பேயோர்ஷெமா- பெயேர்செபா காண்க.	
பொஸ்றா	65
போஜனபலி- பலி காண்க.	
மகா ஆலோசனைச் சங்கம்	4
மத்தியதரைக்கடல்	122
மரக்கால்	88, 147
மரேஷா	128
மல்கியா	1, 4
மனந்திரும்புதல்	5, 37, 40, 49, 50 53
மாரோத்	128
மிகாயா	122
மிருக சீரீஷம்	78
மிஸ்பா	25
மிஷனெரி	105
மீகா	122—150
மீன், மீன் வயிறு	105, 109, 110, 112, 120
முசுக்கட்டைப் பூச்சி	46
முத்தம்	38
மெக்கா	90

மேகம் 38
மேசியா 3, 10, 124, 135, 136, 137, 138, 140, 141, 143
மோசே 57, 120
மோட்சப் பிரயாணம் 148
மோரேஷத் (காத்) 122, 127, 128
மோவாப் (பியர்) 61, 66, 67, 99
யவனர் 54
யாக்கோபு (1) 36, 92, 95, 100, 131, 132, 136, 139, 141
யாக்கோபு (2) 60, 94
யாரேப் 26
யுத்தம் 35, 55, 136
யூதர் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 24, 36, 46, 52, 53, 70, 82, 83, 90, 93, 94, 95, 96, 98, 100, 101, 102, 105, 106, 114, 118, 121, 122, 136, 142, 143
யூதா 24, 25, 27, 29, 37, 56, 86, 100, 101, 138
யூதாஸ் காரியோத் 133
யூதேயா நாடு, நாட்டார் 1, 5, 6, 7, 12, 13, 24, 25, 27, 33, 36, 42, 43, 44, 46, 56, 58, 59, 61, 67, 81, 84, 95, 96, 98, 100 122, 123, 127, 139, 145
யெகோவா 5, 6, 9, 13, 14, 17, 25, 32, 37, 38, 39, 41, 44, 54, 55, 67, 69, 76, 77, 78, 79, 89, 93, 95, 101, 104, 106, 107, 108, 116, 120, 122, 127, 134
யெரோபெயாம், யெரோபெயாம் II 13, 58, 63, 66, 84, 104
யேகூ 18
யோசபாத் 54
யோசியா, ஓசியா காண்க
யோசீப்பஸ் 4

யோசுவா 20
யோசேப்பு (பின்வீடு) 77, 82, 100
யோதாம் 122
யோப்பா 107
யோயாக்கீம் 8
யோர்தான் 25
யோவான் (ஸ்நானகன்) 150
யோவேல் 13, 41, 56, 74, 79, 93
யோனா 13, 58, 67, 103, 122
ரதம் 49, 129, 144
ரப்பா 66
ராமா 25
லாகீஷ் 127, 129
லௌகீக வாழ்வு 93
லேவியன் 100
லோத்து 75
வணக்கம் (விக்கிரக) 6, 9, 10, 13, 31, 33, 34, 38, 40, 80, 90, 108, 112, 113, 127, 143, 144
வணக்கம் (மெய்க் கடவுள்) 1, 6, 59, 113, 116
வாணிகம் 147
வானம் 50, 53, 55
விக்கிரகக் கோயில் 32, 72
விக்கிரக வணக்கம்-வணக்கம் (விக்கிரக) காண்க.
விபசாரம் 24, 25
விருத்தாப்பியம் 13
வில் 30
வெட்டுக்கிளி 45, 46, 47, 48, 49, 50, 52, 61, 84
வெள்ளிக்காக 21
வேசி. தனம் 12, 19, 24, 25, 29
வேசிப்பயணம் 127
வேதசாஸ்திரிகள் 4
வேதபாரகர் 2, 4
ஜெப ஆலயம் 2, 4, 10

திருமறை குறிப்புகள்

ஆதியாகமம்	பக்கம்
3:14	150
10:11,.12	114
19:15, 29	75
25:21-34	95
35:19	139
36:1, 8, 9,	95
41:32	134

யாத்திராகமம்	
3;1, 10	57
3:14, 15	36
6:3	36
21:32	21
22:22-24	130
23:14, 17	80

லேவியராகமம்	
2:11	74
7:12	74
18:21	144
19:35, 36	88, 146
25:39	68

எண்ணாகமம்	
6:1-21	69
20:17-21	99

உபாகமம்	பக்கம்
4:29	26
10:12	145
17:16	142
19:14	25
21:19	78
23:17	68
25:13, 14	146
32:14	73
32:15	38
35:15	88

யோசுவா	
7:25, 26	20
14:1, 2	130
20:7-9	28

நியாயாதிபதிகள்	
2:16	102
4:6	25
10:17	25
13:3-5	69
19-ஆம் அதி.	33

I சாமுவேல்	
15:22	28
22:1	128

II சாமுவேல்	
1:19, 25, 27	76
1:20	126
14:2, 4, 9	62
24:12-14	48

I இராஜாக்கள்	
4:25	47, 135
12:16	22

	பக்கம்
12:28-30	2, 31
14:25-28	31
21-ஆம் அதி.	146
21:1-16	129
22:8-28	122

II இராஜாக்கள்

4:1	68
6;1-4	31, 103
8;12	66
9:1-10	18
9:17	31
10:32, 33	64
14:25	58, 103
15-17 அதி.	13
15:29	7
16:2,3	144
17:1-6	7, 34, 72, 126
17:17	144
17:23	72
17:24	7
18:3-5	142
18:9-12	30
18:19-22	29,148
19:36,37	148
21:13	86
23:3-25	142
23:33-35	31
24:1,10-16	8
25-ஆம் அதி.	8
25:6,7	138
25:25,26	9,31

II நாளாகமம்

	பக்கம்
11:6	62
20:20	62
21:16,17	54
36:6	8
36:9	67
36:20-23	11, 137

எஸ்றா

1:1-3	11
2:1,2	11
8:15	2

நெகேமியா

3:5,27	62
8:2,3	2
9:1-3	2

யோபு

39:5-12	31

சங்கீதங்கள்

3-ஆம் சங்.	112
9:17	56,100
11:4	125
18ஆம் சங்.	110
20:7	142
23:4	78, 149
30-ஆம் சங்.	110
42-ஆம் சங்.	110
51:10	27
72:6	141
72:7	140

	பக்கம்
74-ஆம் சங்.	10
74:7	138
78:57, 58	30
78:70-72	57, 140
79-ஆம் சங்.	10
88-ஆம் சங்.	111
97:4, 5	125
106:1	144
106:35-37	29, 144
110:3	40
115:4-8	33, 38
116-ஆம் சங்.	110
119:2	26
120-ஆம் சங்.	110
133:3	40
137-ஆம் சங்.	6, 10, 89
137:1-9	96, 99
139:7-12	91, 107
142-ஆம் சங்.	110

நீதிமொழிகள்

8:17	26
13:15	108
19:12	40

ஏசாயா

	பக்கம்
1:2	125
1:18	40
2:2-5	55, 123, 133
2:11	100
4:4	123
5:1–7	33, 46
5:8	129
5:25	62
9: 6, 7	140
10:2	68
10:3	48
10:17	101
12:6	36
19:19, 20	102
19:23-25	149
20:1	7
22:4	126
22:12	128
26:17, 18	137
27:4	101
29:13	44
29:21	78
30:1-7	30
30:10	86
31:1	127
34:5-17	86, 96
36:9	127
44:10-17	38
48:22	130
54:5	17
57:13	24
57:21	130
60:8	36
66:1, 2	6

எரேமியா

1:1-3	8
2:24	31

	பக்கம்
6:1	62
6:14	27
7:31	144
8:11	27
9:1	126
17:19	78
17:26	101
18:6:10	116
19:2	78
25:11	7
25:21	96
26:18,19,24	133
27:3	98
29:10	7
33:13	101
41:17,18	9
43:7	9
49:7,22	96,99
50:19	149

புலம்பல்

4:21,22	96

எசேக்கியேல்

4—14 ஆதி.	5,9
25:12—14	96
28:22	36
32:29	96
33—47 ஆதி.	9
33:21	9

	பக்கம்
35:1,15	96,100
39:18	73

தானியேல்

1:1—6	8,9
2:44	102
6:5,17	10
7:27	102
10:1	9

ஓசியா

1-14 அதி.	12-40
2-7	17
4-1	143
5:6, 15	131
6:6	145
7:13	146
8:9, 10	126
9:1	126
12:7	146
13:16	66

யோவேல்

1-3 அதி.	41, 56
1:4, 16, 19, 20	74, 75, 115
2:13, 14	44, 116
2:20-32	4, 36, 75, 100
3:17	100

ஆமோஸ்	பக்கம்
1-9 அதி.	57-93
1:1	125
1:3, 6, 9, 11 13	2
2:6-8	28, 131
2:12	130
3:9, 10	125, 146
4:6, 8-12	29, 48
5:1	37, 146
8:14	24
9:8, 12	100
ஒபதியா	
1-21 வச.	94, 102
11-14 வச.	8
யோனா	
1-4 அதி.	103-121
மீகா	
1:7 அதி.	122-150
6:8, 11	3, 88
நாகூம்	
1:10	101
ஆபகூக்	
1:2, 3	146
2:2, 3	2
2:14	4
செப்பனியா	
3:15, 17	36

	பக்கம்
3:20	4
சகரியா	
2:10, 11	36
3:10	123
9:9	4
14:5	62
மல்கியா	
1:2-5	95, 97
4:2	4
மத்தேயு	
2:5, 6	124, 139
2:15	16
5:40,44	99, 130
9:13	16, 27, 145
10:21	124
10:35, 36	124, 147
12:7	16
16:4	105
19:24	38
21:19, 20	119
23:32	63
23:37	129
24:7	125
24:43, 44	49
27:51, 54	125
லூக்கா	
1:54, 72	124

	பக்கம்
1:72-75	150
6:29	130
11:29, 30	105, 112
19:41-44	129, 147
21:25-27	50
23:30	34

யோவான்

4:21-24	6, 141
7:22	124
8:7, 11	24
12:6	133
13:1	38
17:3	28

அப்போஸ்தலர்

2:1-14	52, 53
2:16-21	44
7:42, 43	60, 81
7:46-50	6
10:11-18	107
10:34, 35	117
15:15-18	60, 93
15:21	2

ரோமர்

8:38, 39	38
9:14, 15	120
9:25, 26	16, 19
10:13	44
11:29	39, 108
13:11	108

I கொரிந்தியர் பக்கம்

8:4	83
15:33	29
15:55, 57	39

II கொரிந்தியர்

6:14	29

கலாத்தியர்

6:7, 8	28, 100, 129

எபேசியர்

2:14	140
5:14	108

I தெசலோனிக்கேயர்

2:16	63
5:2	49
5:6	108

I தீமோத்தேயு

3:3	132

II தீமோத்தேயு

4:3	86

தீத்து

1:7	132

எபிரெயர்

10:31	84
12:16	95
12:25-29	55

	பக்கம்
யாக்கோபு	
1:15	87
I பேதுரு	
1:10, 11	6
2:12	48
II பேதுரு	
1:19	6
3:10	49
I யோவான்	
5:21	24
வெளிப்படுத்தல்	
3:16	29
6:12	125
6:16	34
11:15	102
14-15-20	55
16:15	49
18:4	24

சுவிசேஷ ஊழிய நூல் நிலையம் (ELS) வெளியிட்டுள்ள மிஷனரிகளின் வாழ்க்கை வரலாறுகள், வேத ஆராய்ச்சி நூல்கள், தின தியானங்கள், ஆவிக்குரிய வளர்ச்சிக்கேற்ற நூல்கள், பிரசங்கக் குறிப்புகள் மற்றும் சிறுவர் நூல்கள் அதன் தலைமையிடத்திலும், கீழ்காணும் கிளைகளிலும் கிடைக்கும்.

(முழு விலைப்பட்டியலைப் பெற்றுக்கொள்ள எழுதுங்கள்)

கிளைகள்

Evangelical Literature Service,
287, Purasawalkam High Road,
Chennai - 600 007. Tamil Nadu,
Tel : 2642 2722 / 2661 0888

Evangelical Literature Service,
55, Anna Salai, Chennai - 600 002
Tamil Nadu.
Tel : 2851 4403

Evangelical Literature Service,
C.M.C. Hospital Compound,
Vellore - 632 004
Tamil Nadu.
Tel : 0416-222 4808

Evangelical Literature Service,
Vasavi Complex,
1250, Big Bazaar Street,
Coimbatore - 641 001
Tamil Nadu.
Tel : 0422-239 0694

Evangelical Literature Service,
Jeevan Complex,
84, 100 Feet Road, Gandhipuram,
Coimbatore - 641 012
Tamil Nadu.
Tel : 0422-249 4434

Evangelical Literature Service,
G4, Ground Floor, Ashoka Enclave,
No. 12, Nethaji Road, Frazer Town,
Bangalore - 560 005
Tel : 080-25473388/25478833

Evangelical Literature Service,
694/B, Gokula 1st Stage,
1st Phase, HMT Main Road,
Mathikere Bus Stop,Bangalore - 560 054
Tel : 080-23378087

Evangelical Literature Service,
582, Oil Mill Road,
Aravind Nagar,
Bangalore - 560 084
Tel : 080-2546 7014

Evangelical Literature Service,
Kesavadasapuram, Pattom, P.O.
Trivandrum - 695 004, Kerala.
Tel : 0471-244 8916

Evangelical Literature Service,
Shop No. 430-A3, Ascension Square
Railway Station Road,
Collectorate P.O. Kottayam - 686 002
Tel : 0481-230 4790

Evangelical Literature Service,
F11, Dadar Manish Market,
Senapati Bapat Marg, Dadar (W),
Mumbai - 400 028, Maharashtra.
Tel : 022-2437 9572

Evangelical Literature Service,
C.M.C. Hospital Compound,
Ludhiana - 141 008, Punjab,
Tel : 0161-222 1052

Evangelical Literature Service,
7A/41, W.E.A. Western Chambers,
Channa Market, Karol Bagh,
New Delhi - 110 005
Tel : 011-2573 9168

Evangelical Literature Service,
Satribari Christian Hospital Complex,
Kharga Choudhury Road, Satribari,
Guwahati - 781 008, Assam.
Tel : 0361-260 3328

Evangelical Literature Service,
No. 35-73/1, G.K. Colony,
(Near Naredmet Cross Road)
Sainikpuri, Secunderabad - 500 094
Andhra Pradesh.
Tel : 040-2711 5533

Evangelical Literature Service,
PIMS Campus, Ganapathichettikulam,
Kalapet, Pondicherry - 605 014
Tel : 0413-2655330

Evangelical Literature Service,
Door No. 50-50-32, T.P.T. Colony,
(Near Gurudwara),
Visakhapatnam - 530 013, A.P.,
Tel : 0891-2799588

Evangelical Literature Service,
C.S.I. Holy Trinity Church,
Commissioner's Road,
Ooty - 643 001. Tel : 0423-2446055

Website : www.elsindiaonline.com

Pub. No.279 - Tamil

பரிசுத்த வேதாகமத்திலுள்ள பழைய ஏற்பாட்டின் இறுதியான பன்னிரண்டு ஆகமங்களுக்கு ‘சிறிய தீர்க்க தரிசன’ நூல்கள் (**Minor Prophets**) என்று பெயர். திருமறையின் ஓசியா முதல் மல்கியா வரைக்குமுள்ள பகுதியை விளக்கும் உரைநூல் தமிழ் மொழியில் இல்லாததால் இந்நூல் ஆசிரியர் பல ஆண்டுகளுக்கு முன் இந்நூல்களுக்கு விளக்கவுரை எழுத முன் வந்தார். இவை இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஓசியா – மீகா, நாகூம் – மல்கியா என்று இருநூல்களாக வெளியிடப்பட்டுள்ளன.

இந்நூலின் ஆசிரியர் ஓர் ஆங்கிலேயராக இருந்தாலும் இந்தியாவுக்கு மிஷனெரியாக வந்து, தமிழ் மொழியில் ஆர்வம் கொண்டு தமிழ்நாட்டுக்கும், தமிழ் மொழிக்கும் பெருந்தொண்டு ஆற்றியுள்ளார். இவர் எழுதியுள்ள ‘வேதாகம ஒத்தவாக்கிய அகராதி’ மிகவும் புகழ் பெற்றதாகும். ஓசியா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீகா ஆகிய ஆகமங்களை விளங்கிக் கொள்ள இந்நூல் பெரிதும் உதவும்.

HOSEA - MICAH

D.A. THROWER

விலை ரூ. 40.00

ELS INDIA

EVANGELICAL LITERATURE SERVICE
95-A, VEPERY HIGH ROAD, CHENNAI - 600 007
Tel : 25323231, 26420173, 26420743 Fax : 91 (44) 26612295
E-mail : <elshq@elsindia.org> Website : www.elsindia.org